திருக்கோயில்

மார்ச் 1975

ரூ.1

TAMIL NADU ARCHIVES LIBRARY MADRAS-8

(101)
R.R.No. 1094/8
3218/
31/3/
TAMILNADU ARCHIVES
31 MAR 1975
MADRAS

முகப்பு :

தக்கன் வேள்வியைத் தகர்த்தபின் அம்பிகை சிவபிரானைத் தழுவி மகிழும் காட்சி, சிவராத்திரி விழாவை ஒட்டி, மூவண்ணப் படமாக, முகப்பு அட்டையில் வெளியிடப் பெறுகின்றது.

திருக்கோயில்

மாலை 17 | ஆனந்த, மாசி — மார்ச்சு, 1975 | மணி 6

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

* 'திருக்கோயில்' திங்கள் இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விருப்பமுள்ளவர்கள் "திரு. ஆணையர், அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034" என்னும் முகவரிக்கு ரூபாய் பன்னிரண்டு அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

* அந்தந்த வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் சந்தாவைச் செலுத்திச் சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளலாம்.

* இதழ்கள் தவறாது கிடைத்திடச் சந்தாதாரர்கள் முழு முகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரி மாற்றத்தை உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

* எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

ஆண்டுச் சந்தா ரூ. 12-00 தனி இதழ். ரூ 1-00

பொருளடக்கம்

1. மகாவீர வர்த்தமானர் —மாண்புமிகு முதல்வர் கலைஞர்
2. இறைவனின் நீதி மன்றங்கள்—கண்ணதாசன்
3. திருவாசகமும் திருக்கோவையாரும் —ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.
4. கந்தபுராணம் —திருமுருக கிருபானந்த வாரியார்
5. மனமும் வாக்கும்—கே. எஸ். ஜெகன்னாதன்
6. திருக்கோளூர் வைத்தமாநிதி —டாக்டர் ந. சுப்புரெட்டியார், M.A.,Ph.D.
7. கவின்மிகு காஞ்சி நகர்—நடேச நாராயணன்
8. திருக்கோயில்களும் மகளிரிட்ட திருவிளக்குகளும்—செந்தில் செல்வக்குமரன் M.A.
9. ஆழ்வார்கள் காட்டும் நானிலக்காட்சி —என். எஸ். தாதாசாரியார்
10. குறளமுதம்—த. நாகராஜன், B.SC.
11. பஞ்சாமிர்தம்—டி. என். சுகிசுப்பிரமணியன்
12. பாண்டிமாதேவி—மீனாட்சிமைந்தன்
13. ஆணவமலம்—சி. என். சிங்காரவேலு, எம்.ஏ.
14. இறைவனின் ஐந்தொழில்கள் —சீலத்திரு. மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள்
15. மதிப்புரை
16. நாளும் நாள் உயர்வதோர் நன்மை —டாக்டர் வி. ஆ. தேவசேனாபதி M.A.,Ph.D.

ஆசிரியர்: ந.ரா.முருகவேள். M.A.,M.O.L.
துணை ஆசிரியர்: கே.எஸ்.ஜெகன்னாதன்

"என் கடன் பணிசெய்து கிடப்பதே"

JL
Q2m211,N58
N75·17·6
158601

மகாவீர் வர்த்தமானர்

2,500 ஆண்டுகளுக்கு முன்பு, கிறிஸ்து பிறப்பதற்கு முன்பு 599-ஆம் ஆண்டில் விதேக நாட்டில் ஒரு மன்னனுடைய வீட்டில் பிறந்த பிள்ளை வர்த்தமானர். பிள்ளைப்பருவத்திலேயே வீரச் செயல்களில் ஈடுபட்டு, தோட்டத்திலே வந்த பாம்பைக் கண்டு இளம் சிறுர்கள் எல்லாம் பயத்தோடு ஓட, தான் மாத்திரம் பயப்படாமல் அந்தப் பாம்பின் தலையில் அடிவைத்து மிதித்து அந்தப் பாம்பைத் துரத்தி, அதற்குப் பிறகு பல வீரச் செயல்கள் புரிந்து மகாவீரர் என்ற பட்டத்தைப் பெற்றவர் ; அவர் பிறந்த போது நாட்டில் வளம் பெருகிய காரணத்தால் வர்த்தமானர் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றவர்; வர்த்தமானர் என்ருலே வளத்தைப் பெருக்குப்வர் என்று பொருள்பட அந்தப் பெயரைப் பெற்றவர்; பிறகு, தனக்கு நாடு தேவையில்லை என்றும், ஆட்சி தேவையில்லை; மாளிகை இன்பங்கள் தேவையில்லை என்று அவைகளை எல்லாம் துறந்து, மக்களுக்குப் பணியாற்றித் தன்னுடைய 72 வயது வரை மக்கள் நலனுக்காகப் பணியாற்றி,மக்களுடையஉள்ளத்தில் மண்டிக் கிடந்த காட்டுமிராண்டி எண்ணங்கள், மூட நம்பிக்கைகள், கடவுளின் பெயரால் ஏற்பட்டிருந்த அறிவுக்கு ஒத்து வராத தொத்து வியாதிகள், இவைகள் அத்தனையையும் விரட்ட வேண்டுமென்று பாடுபட்டவர் தான் வர்த்தமானர்.

வர்த்தமானர் சமண மதத்தில் 24-வது தீர்த்தங்கரர்; முதலாவது தீர்த்தங்கரர்விருஷப தேவர்; அவரை ஆதிபகவன் என்றுகூட அழைப்பார்கள். அதையொட்டித்தான் திருக்குறளில் ''அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு'' என்கிற அந்தக் குறளிலே கூட, வள்ளுவர் அந்த ஆதிபகவனைத்தான் சொன்னுர்; வேறு கடவுளைக் குறிப்பிடவில்லை என்று வாதமிடுகிற சமண மதப் பெரியவர்களும் இருக்கிருர்கள் என்பதை நான்அறிவேன்.

மாண்புமிகு
டாக்டர். கலைஞர்
முதல்வர்

தமிழர்கள் ஏற்றுக்கொண்ட ஒரு முக்கியமான நல்ல கொள்கை சமணக் கொள்கையாகும். அதற்கு ஆதாரம் சொல்ல வேண்டுமேயானல், தமிழகத்தில் உள்ள சமணப் பெரியவர்களால் எழுதப்பட்ட நூல்களாகும். 12-வது நூற்றுண்டில் இளம்பூரணர் என்ற சமணப் புலவர் தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய போது அதிலே குறிப்பிட்டிருக்கிற ஒரு வாசகத்தைப் பார்த்தால், இளம்பூரணர் இலக்கணத்திற்குச் சில எடுத்துக் காட்டுகளைக் கூறுகிற நேரத்தில் கேள்விக்குப் பதில்எவ்வாறுஅமைதல் வேண்டும் என்பதற்கு உதாரணத்தைக் காட்டும்போது ''நும் நாடு யாது'' என்று கேட்கும் போது, ''எம் நாடு தமிழ் நாடு'' என்று சொல்வதுதான் பதில் என்று குறிப்பிடுகிருர்.

ஆக 11-வது, 12-வது நூற்றுண்டிலேயே இதற்குத் தமிழ்நாடு என்று பெயர் விளங்கியது. அந்தத் தமிழ்நாடு இந்தியா முழுமையும் பரவிக் கிடந்த நாடாக இருந்தது. இந்திய நாடு முழுமையும் தமிழர்கள் வாழ்ந்தார்கள்; இந்தியா முழுமையும் இன்றைக்கு ஏற்றுக்கொண்டிருக்கிற சமணக் கருத்துக்களை உள்ளத்தில் பதிய வைத்துக் கொண்டிருந்த மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அதற்குப்பிறகு இறக்குமதியான சில சரக்குகள், இங்கே வந்து புகுந்து சில மூட நம்பிக்கைகள் கொஞ்சம் கொஞ்சமாக வந்தன. அப்படிப்பட்ட கருத்துக்களைத் தென்புறத்திற்குக் கொண்டு வந்து, தென்னகத்திலே தமிழகத்திற்குக் கொண்டு வந்து சேர்த்து, இளைக்க வைத்துவிட்டார்கள். சமணர்கள் பழி வாங்கப்பட்டார்கள். கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள். இன்றைக்கு அந்த நிகழ்ச்சிகள் வரலாறுகளாக, புராணங்களாக, ஏன் இலக்கியங்களாகக் கூட இருக்கின்றன.

மதுரையில் நடைபெற்ற சைவ, சமணத் தகராறில் சமணர்கள் தோற்றுவிட்டார்கள் என்று சொல்லப்பட்டு — அவர்கள் தோற்றுர்களோ, இல்லையோ எனக்குத் தெரியாது — ஆனல் அவர்கள் தோற்றுர்கள் என்று சொல்லப்பட்டு, அவர்களைக் கழுவிலே ஏற்றிய கொடுமை நடைபெற்றது. அப்படிக் கழுவிலே ஏற்றப்பட்ட சமணர்களுடைய எண்ணிக்கை எண்ணுயிரம் பேர் என்றும் சொல்லப்பட்டது.

ஒரு முறை, ஒரு பண்டிதர், நான் மாணவனுக இருந்தபொழுது திருவாரூரில் வந்து கதாகாலட்சேபம் நடத்தியபோது, 'சமணர்கள் சைவர்களிடம் தோற்றுர்கள் ; அப்படித் தோற்றுப்போன சமணர்கள் 8,000 பேரைக் கழுவிலே ஏற்றினுர்கள்' என்று சொன்னுர்.

மாணவனுக அப்போதிருந்த நான் உடனே எழுந்து, ''சைவ மதமும், அன்பைப் போதிக்கிற மதம் அல்லவா? சமண மதமும் அன்பைப் போதித்த மதம் அல்லவா? இப்படி அன்பைப் போதிக்கின்ற மதங்களுக்கிடையே தகராறு ஏற்பட்டு அதில் சிலர் தோற்றிருந்தாலும் அன்பைப் போதிப்பதாகச் சொல்கிற சைவ மதத்தினர் சமணர்களைக் கழுவில் ஏற்றலாமா?'' என்று கேட்டேன். உடனே அந்தப் பாகவதர், ''இந்தச் சின்ன பையனுக்கு விஷயம் தெரியவில்லை. நான் பாட்டைச் சொல்கிறேன், கேளுங்கள்'' என்ருர்.

''எண்பெருங்குன்றத்து எண்ணுயிரவரும் ஏறினர்கள்'' என்ற பாட்டைச் சொல்லிச் சமணர்கள் தாங்களே கழுவில் ஏறினர்கள் என்று பாடிக் காட்டினர். அந்தப் பாட்டு எனக்கு முன்பே தெரிந்திருந்த அக்காரணத்தால் உடனே, நான் திரும்பக் கேட்டேன். ''நீங்கள் பாட்டின் கடைசி அடியை மட்டும் பாடிக் காட்டுகிறீர்கள்! நான் முழுமையும் சொல்கிறேன் கேளுங்கள்'' என்று ''பண்புடை அமைச்ச ருைம் பாருளோர் அறியும் ஆற்ருல் கண்புடை பட்டு நீண்ட கழுத்தறி நிரையில் ஏற்ற, எண்பெருங் குன்றத் துஎண்ணுயிரவரும் ஏறி ஞர்கள்''. ஏற்ற, ஏறினர்கள் என்றுதான் பாட்டு இருக்கிறது. ஆகவே அவர்கள்தான் சமணர்களைக் கழுவிலே ஏற்றினர்கள் என்று நான் சொன்னேன்.

ஆகவே தமிழகத்திலே பெரியார் இராமசாமி அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, அவர் வழி நின்று பேரறிஞர் அண்ணு அவர்களால் நடத்தப்பட்ட தன்மான இயக்கம்; இன்றைக்கு நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிற சுயமரியாதைக் கொள்கைகள் இவைகள் எல்லாம் வடிவெடுக்கக் காரணமாக இருந்த கொள்கைகளில் சமணக் கொள்கையும் தலையாய கொள்கை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமணக் கொள்கைளில் முக்கியமானது, ''உலகத்தை ஆண்டவன் படைத்தான்'' என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இன்னும் சொல்லப் போனல் ஒரு மனிதன் தன்னுடைய பாவங்களை எல்லாம் அகற்றிவிட்டால் அவனே கடவுள் ஆகின்ருன். இதுதான் சமண மதத்தின் கொள்கை. ஆகவே மனிதனே தன்னைத் தெய்வமாக ஆக்கிக் கொள்ள வேண்டும்; அந்தத் தெய்வம் சிறந்த தெய்வம் என்பது சமண மதத்தின் கொள்கையாகும். அந்தக் கொள்கையோடுதான் இன்றைக்கு இந்த அரசு, 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற வகையில் பணியாற்றி வருகிறது. மகாவீர வர்த்தமானர், எந்தக் கொள்கை மக்கள் மத்தியில் பரவ வேண்டும் என்று விரும்பினரோ அந்தக் கொள்கைகளுக்காகப் பாடுபட்டு வருகிருேம். அது மாத்திரமல்ல; சமண இலக்கியங்கள்; சமணச் சிற்பங்கள்; சமணக் கல்வெட்டுகள் இவைகள் எல்லாம் தமிழகத்தில் போற்றிப் பாதுகாக்கப்பட, தமிழக அரசு இந்த ஆண்டு மேலும் முனைப்பான முயற்சியில் இறங்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[17—11—1974 அன்று சென்னைப் பல்கலைக் கழக நூற்ருண்டு விழா மண்டபத்தருகில் நடைபெற்ற மகாவீர வர்த்தமானர்2,500-வது நினைவு நாள் விழாவில், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை, இங்கு மிகவும் போற்றி எடுத்து வெளியிடப் பெறுகின்றது.

—ஆசிரியர்.]

அருள்திரு விசுவேசுவரசுவாமி, அருள்திரு வீரராகவப்பெருமாள் திருக்கோயில்கள்

திருப்பூர்—4 : : கோவை மாவட்டம்

கோவை மாவட்டம் திருப்பூர் மாநகரின் இரு கண்களாக விளங்கும் அருள்திரு விசுவேசுவரசுவாமி, அருள்திரு வீரராகவப்பெருமாள் திருக்கோயில்களுக்கு வருகை தந்து இறைவனின் திருவருள் பெற்று நற்பயனடைய வேண்டி, அன்பர்கள் அனைவரையும் அழைக்கிருேம்.

என். ஜெயபாலன், பி. ஏ.,
செயல் அலுவலர்.

திருப்பூர்—4.

இறைவனின் நீதிமன்றங்கள்

கண்ணதாசன்

4. பிற நீதிமன்றங்கள்

சக்தி வணக்கம் தமிழ் நாட்டில் மிகவும் பிரபலமானது.

காளியம்மனும், மாரியம்மனும் சக்தியின் மறு அவதாரங்கள் என்று நம்பப்படுகின்றன.

சிறு தேவதைகளை விட, கொஞ்சம் பெரிய தேவதைகளாக இவை கருதப்படுகின்றன.

சமயபுரம், மேச்சேரி மாரியம்மன்களும், பழவேற்காடு கருமாரியம்மனும் பெருவாரியான மக்களின் வணக்கத்திற்குரியவையாக இருக்கின்றன.

சிறு தேவதை வணக்கத்திற்குக் கூடுகிற மக்களைவிட இங்கே கூடுவோர் அதிகம்.

இவற்றினுடைய சக்தியைப் பற்றி ஏராளமான கதைகள் உலாவுகின்றன.

இந்த மாஜிஸ்திரேட்டுகளோடு சேர்க்கப்பட வேண்டியவரே சபரிமலை ஐயப்பனும்.

ஸ்ரீ ஐயப்பனைப் பற்றிய கதைகள் அவர் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்தோடு ஐக்கியமானவர் என்று சுட்டிக்காட்டுகின்றன.

அந்தக் கதைகள் அவர் பிறப்பே தெய்வாம்சம் என்று கூறுகின்றன.

விஷ்ணு மோகினி அவதாரம் எடுக்க, அந்த மோகினியிடம் லயித்த சிவன் அவளைக் கூட, அந்த 'ஐயனுக்கும்' 'அப்பனுக்கும்' பிறந்தவரே 'ஐயப்பன்' என்று கூறப்படுகிறது.

இத்தகைய மாஜிஸ்திரேட்டுகள் நாடெங்கிலும் இருக்கிறார்கள்.

ஊமையைப் பேச வைப்பது.

நொண்டியை நடக்க வைப்பது.

முடவனுக்குக் கை வரவழைப்பது போன்ற காரியங்களை எல்லாம், இந்தமாஜிஸ்திரேட்டுகள் செய்வதாகக் கூறப்படுகின்றன.

இந்தத் தெய்வங்களின் சக்தியை மனிதர்கள் கிரகித்துக் கொள்ள முடியுமா?

அம்மன் ஆவேசம் சில பெண்கள் மீது வந்ததை நானே பார்த்திருக்கின்றேன்.

அதே மாதிரி ஐயப்பன் ஆவேசம் வந்தவர்கள் உண்டா?

அண்மையில் ஒருவரை ஊமையாக்கியசாமி யாரைப்பற்றி நாம் செய்திகள் படித்தோம்.

ஆகவே, மாரியம்மன், காளியம்மன், ஐயப்பன் போன்ற ஊடுருவும் சக்திகளை நாம் மாஜிஸ்திரேட்டுகள் என்று அழைக்கலாம்.

அடுத்து, காசி விசாலாட்சி, காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி போன்ற தெய்வங்களை நாம் செஷன்ஸ் கோர்ட் நீதிபதிகள் என்று அழைக்கலாம்.

கிருஷ்ணர், முருகன், விநாயகர் போன்ற தெய்வங்களை ''ஹைகோர்ட் நீதிபதிகள்'' என்று அழைக்கலாம்.

சிவன், பிரம்மா, விஷ்ணு மூவரையும் ''சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள்'' என்று அழைக்கலாம்.

காளியோ, மாரியோ தண்டித்துவிட்டால், காமாட்சியும், மீனாட்சியும் காப்பாற்றுவார்கள்.

காமாட்சியும், மீனாட்சியுமே தண்டனையை உறுதி செய்து விட்டால் கண்ணனும், முருகனும் காப்பாற்றுவார்கள்.

கண்ணனும், முருகனும் காப்பாற்ற முன்வரவில்லை என்றால், சிவனும், திருமாலுமே நமக்குத் துணை யாவார்கள்.

அதனால்தான் சிவனுக்கும், திருமாலுக்கும் மட்டும் நாட்டில் ஏராளமான கோவில்கள் இருக்கின்றன.

ஓங்கி வளர்ந்த சமண மதம் அழியத் தொடங்கிய காலத்தில் ஊருக்கு ஊர் சிவன் கோவில்கள் ஏற்படத் தொடங்கின.

சமணர்கள் வணங்கிய சாத்தான்களின் கோயில்களே பல சிவன் கோயில்களாக உரு மாறின.

சித்து விளையாட்டுகளிலும், பிணி தீர்க்கும் மருத்துவத்திலும் சமணர்களுக்கு அதிகமான ஈடுபாடு இருந்தது.

அதனால் சமணத்திலிருந்து சைவத்துக்குத் தாவிய பலர் சிறு தேவதை வணக்கத்தில் அதிக அக்கறை காட்டினார்கள்.

சமணர்கள் மூலமாகத்தான் சிறு தேவதை வணக்கம் சைவர்களிடம் அதிகமாகப் பரவியிருக்க வேண்டும்.

பொதுவில் தரவாரியாக நீதிபதிகள் நியமிக்கப்படும் நீதி முறையைப் போலவே இந்து மதத்திலும் நீதிமுறைகள் உண்டு என்பது உறுதி.

எவ்வளவு உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவராயினும் அவர் சிறு குற்றங்களுக்காக மாஜிஸ்திரேட் கோர்ட்டில் கை கட்டி நிற்பது போல் அம்மன் கோவிலில் கைகட்டி நிற்கும் பெரிய குடும்பத்துக்காரர்கள் உண்டு.

அவர்களே சிவன் கோவிலுக்குப் போவது உண்டு. அப்பீலுக்காக.

குற்றங்களின் தரத்தைப் பொறுத்துக் கோர்ட்டுகள் மாறுவதைப் போல, கோரிக்கைகளின் தரத்தைப் பொறுத்துக் கோயில்கள் மாறியிருக்கின்றன.

நல்ல துணை வேண்டுமென்றால், மாரியம்மனுக்குப் படைக்கிறார்கள்.

புதுத் தொழில் துவக்கினால், பரமசிவன் பேரில் வரவு வைக்கிறார்கள்.

எல்லாத் தெய்வங்களையும் விட, சிவனுக்கும், திருமாலுக்கும் மட்டுமே திருவிழாக்களை அதிகம் நடத்துகிறார்கள்.

தரவாரியாகத் தெய்வங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன என்பது உண்மை.

இவற்றை நீதி மன்றங்களாகக் கற்பனை செய்து பார்ப்பதில் ஒரு நியாயம் இருக்கிறது.

எந்தக் குற்றமும் இல்லாமல் கோர்ட்டுகளுக்குப் போகிறவர்கள் குறைவு.

எந்தக் கோரிக்கையும் இல்லாமல் கோயிலுக்குப் போகிறவர்களும் குறைவு!

கோர்ட்டுக்குச் செலுத்தப்படும் ஸ்டாம்ப் செலவுதான் கோவிலுக்குச் செலுத்தப்படும் காணிக்கையும் ஆகும்!

"என்னுடைய ஆணவத்தையும், அகங்காரத்தையும், இராஜபோகத்தையும் உன் முன்னால் இறக்கி வைக்கிறேன்'' என்றுதான் கோவில்களிலே முடி இறக்குகிறார்கள்.

அதை மொட்டையடித்த லென்றோ, சிரைத்தலென்றோ யாரும் சொல்வதில்லை.

'முடி' என்றால் மகுடம். அந்த மகுடத்தை இறக்கி வைக்கிறேன்' என்கிறார்கள்!

ஒவ்வொருவரும் அவனளவில் ராஜாவே!

அவனவன் மகுடமும் ஆண்டவன் என்னும் சக்கரவர்த்தியின் சந்நிதானத்தில் இறக்கி வைக்கப்படுகின்றன.

குற்றவாளிகள் கைகட்டிக்கொண்டு நிற்கிறார்கள், கோமகன் தீர்ப்பு வழங்குகிறான்.

ஐயன் தீர்ப்பில், ஐயப்படுவதற்கு ஏதுமில்லை. அதுவே இறுதியானது. அதுவே உறுதியானது.

முடிந்த வழக்குகள் திரும்ப ஆரம்பமாவதில்லை.

தீர்ப்பு வெளியானதும், வழக்குக் கட்டுகள் தூக்கி ஒரு மூலையில் போடப்படுகின்றன.

சுப்ரீம் கோர்ட்டுகள் போலவே ஆண்டவன் தீர்ப்புக்கும் மறுபரிசீலனை இல்லை.

எந்தக் குற்றவாளியும் தண்டனையை அனுபவித்து விட்டுத்தான் வெளியே வரவேண்டும்.

நியாயங்கள் ஒளிவாகவே இருக்கின்றன.

பாவங்களே குற்றங்கள். பாவங்கள் மன்னிக்கப்படுவதும் உண்டு.

பாவங்களுக்குப் பல்வேறு விதமான தண்டனைகள் உண்டு.

குற்றங்களுக்கும் அப்படியே.

கன்னிப்பெண்ணை ஒருவன் கற்பழித்தால் ஏழு வருஷம் கடுங்காவல் என்கிறது நீதிமன்றம்.

ஆனால் இறைவன் நீதிமன்றத்திலோ அவனது மக்களில் ஒருத்தியும் அப்படியே கற்பு அழிக்கப்படுவாள் என்பது தீர்ப்பாகும்.

பாவத்தைத் தராசிலே போட்டுச் சம அளவுக்குத் தண்டனை தருகிறான் இறைவன்.

நீதி மன்றத்தின் நீதியில் முரண்பாடுகள் உண்டு; இறைவன் மன்றத்தில் அது இல்லை!

இந்து மதத்தைப்போல, பாவத்துக்கான தண்டனையை வகுத்து வைத்த மதம் வேறு எதுவும் இல்லை.

ஜாதிக்குக் கட்டுப்படாதவன் இருக்கலாம்; அவன் நீதிக்குக் கட்டுப்படாமல் இருக்க முடியாது.

சமயத்துக்குக் கட்டுப்படாதவன் இருக்கலாம், அவனும் தண்டனைக்குத் தப்பமுடியாது.

எச்சரிக்கை!

இறைவனின் நீதி மன்றம் மட்டுமே இரவும் பகலும் வேலை செய்து கொண்டிருக்கிறது.

—முற்றும்.

திருவாசகமும் திருக்கோவையாரும்

ந. ரா. முருகவேள். M.A., M.O.L.,

முன்னுரை :

திருவாசகம், திருக்கோவையார் என்னும் இருபெருநூல்களும், சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் எட்டாம் திருமுறையினைச் சேர்ந்தவை; மாணிக்கவாசகப் பெருமானுல் அருளிச் செய்யப் பெற்றவை. ஒரு சில ஆராய்ச்சியாளர்கள், மாணிக்கவாசகர் திருவாசகம் ஒன்றினை மட்டுமே அருளிச் செய்தார்; திருக்கோவையார் மாணிக்க வாசகரால் பாடப்பெற்றது அன்று எனக் கூறுவர். ஆயினும், தொன்று தொட்டுச் சைவப் பெருமக்கள் பலரும், இவ்விரு பெருநூல்களையும் அருளிச் செய்தவர், மாணிக்கவாசகப் பெருமானே எனக்கொண்டு பெரிதும் போற்றி வந்துள்ளனர். திருவாசகம், திருக்கோவையார் என்னும் இவ்விரண்டையும் புடைபட வைத்து ஒப்பிட்டு நோக்கி ஆராய்ந்து காண வல்லோர்க்கு இவ்விரு பெரு நூல்களும் தம்முள் ஒன்றனையொன்று சார்ந்து தழுவி நிறைவுறுவன என்பதும், இரண்டனையும் அருளிச் செய்த ஆசிரியர் மாணிக்கவாசகர் என்பதும், தெற்றென விளங்கும்.

திருவாசகமும், திருக்கோவையாரும் :

(1) திருவாசகம் திருக்கோவையார் என்னும் இருபெருநூல்களும், நம் தமிழ் மொழிக்கண் உள்ள அரும்பெறல் நூல்களுள், முதன்மைச் சிறப்பிடம் பெறுதற்குரியனவாய்ப் பெரும் புகழ் வாய்ந்து திகழ்வனவாகும்.

(2) திருவாசகம் மாணிக்கவாசகரது அயரா அன்பின் திறனை விளக்குகின்றது; திருக்கோவையார் அவர்தம் அரிய புலமையறிவின் பெற்றியினைத் திறம்படப் புலப்படுத்துகின்றது.

(3) சிவபெருமானின் அருள் நலங்களைப் புகழ்ந்து பாடிப் போற்றுகின்றது திருவாசகம்; நமதருமைச் செந்தமிழ் மொழியின் சீரிய அகப்பொருள் இலக்கணங்களைத் திறம்படத் தெளித்துணர்த்தித் தேற்றுகின்றது திருக்கோவையார்.

(4) மாணிக்கவாசகப்பெருமானின் சிவானுபவ நலங்களைத் திருவாசகத்தால் உணரலாம்; அவர்தம் அளப்பரிய செந்தமிழ்ப் புலமை நலத்தின் சிறப்பினைத் திருக்கோவையார் நமக்குத் தெள்ளிதிற் புலப்படுத்தும்.

(5) திருவாசகம் சிவநெறித்திருநூல்; திருக்கோவையார் செந்தமிழ் மொழிப் பெருநூல்; திருவாசகம் தெவிட்டாத தேனையனைய சிறப்பினதெனின், திருக்கோவையார் அத்தேனிடையூறிய தெய்வநலம் சிறந்த செந்தமிழ் அமிழ்தம் போல்வதாகும்.

(6) திருவாசகம் திருக்கோவையார் என்னும் இவ்விரண்டும், சங்ககால இலக்கியங்களுக்கும் பிற்கால நூல்களுக்கும் இடையே, ஓர் எல்லைக்கல் போல விளங்கும் மேம்பாடு உடையன.

(7) பிற்காலக் கவிதை வகைகள் பலவும் தோன்றுதற்கு வழிவகுத்துக் காட்டிய கழிபெருஞ்சிறப்பினவாய், முற்காலச் சங்கத் தொகை நூல்களின் பிழிவாய், அவற்றினின்றும் ஓரளவு வேறுபட்ட பொருளும் போக்கும் நடையும் அமைப்பும் உடையனவாய், புதுமையும் பழமையும் பொருந்தக் கலந்த பொலிவும் வளமும் மிக்க மாட்சிமையவாய் இவ்விரண்டும் வீறுற்றுயர்ந்து விளங்குகின்றன. இவற்றின் சிறப்பினையெல்லாம் முற்ற எடுத்து மொழிதல், எத்தகையோர்க்கும் இயல்வதன்று!

திருவாசகம் :

''திருவாசகமானது அழகிய இனிய பாடல்களினுல் அறியாமை பேரவா முதலிய அடிமைத் தளைகளினின்று விடுபட்டு, அன்பு அறிவு என்பன வற்றின் உரிமை பெற்று, முறை முறையே வளர்ந்து செல்லும் உயிரின் முன்னேற்றப்படி நிலைகளை நன்கினிது விளங்கக் காட்டுகின்றது. உயிரின்கண் முதன் முதலாக உணர்வுக் கண்கள் திறக்கப் பெறுதல், அதனுற் பிறக்கும் உவகை, பெருமிதம், பலவகை மனநிலை அலைவுகள், கையறவு, உலகியலில் நின்று தடுமாறும் போராட்டம், அமைதியின்மை, இறுதியாக இறைவனை அடைந்தெய்தும் இன்பம், அவனேடு இரண்டறக்கலந்து நிற்கும் பெருமகிழ்ச்சியுணர்வு, என்னும் பலதிற உணர்ச்சிகளும் அதன்கண் பளிங்கென விளங்குகின்றன'' எனப் பேரறிஞர் திரு. இராதாகிருஷ்ணன் அவர்களும், திரு ஜி.யு. போப் அவர்களும் குறிப்பிட்டிருத்தல், திருவாசகத்தின் சிறப்பினையும் இயல்பினையும் புலப்படுத்தும்(1).

திருக்கோவையார் :

''தேவேந்திரனின் அமராவதி நகரத்தையும், குபேரனின் அளகாபுரி நகரத்தையும் முதற்கண் படைத்துப் பயின்று கொண்டு, அதனுற் கைவந்த அனுபவத்திறமும் ஆற்றலும் வளர்ந்தோங்கிய பின்னரே, பிரமதேவன் தசரத வேந்தனின் அயோத்திமா நகரத்தைப் படைத்தான்'' என்னும் கருத்தமைய,

---

(1) '' Thiruvachakam depicts in beautiful hymns the progress of the soul from the bondage of ignorance and passion into the liberty of light and love, its first awakening, its joy and exaltation, waywardness and despondency, struggle and unrest, the peace and joy of union.''

—DR. S. RADHAKRISHNAN,
Indian Philosophy, Vol. II, p. 729.

''அயில்முகக் குலிசத்து அமரர்கோன் நகரும்
அளகையும் என்றிவை அயனார்
பயில்வுறவு உற்ற படி பெரும் பான்மை
இப்பெருந் திருநகர் படைத்தான்''

எனக் கம்பர் பாடுவது போல, மாணிக்கவாசகர் திருவாசகம் பாடித் தேர்ந்து கைவரப்பெற்ற சிறந்த சிவஞானத்தெளிவின் முதிர்ச்சியிற் பாடியருளியதே, திருச்சிற்றம்பலம் கோவையார் எனின், அதன் அருமை பெருமைகளை யாம் என்னென்பேம்! இறைவன்தானே ''பாவை பாடிய வாயால் கோவை பாடுக'' என மாணிக்க வாசகர்பால் வேண்டிப் பெற்ற மாண்புடையது திருச்சிற்றம்பலக் கோவையார்! ''யாவையும் பாடிக் கோவை பாடுக'' என வழங்கும் உலகியற் பழமொழியும் ஈண்டு எண்ணி உணர்தற்குரியது.

ஞானப்பனுவல் :

திருச்சிற்றம்பலக் கோவையாருக்குப் பல வகைச் சிறப்புகள் உண்டு. அவைகளுள் மிகவும் தலையாயது, சங்ககாலப் புலவர்கள் பாடிய அகப்பொருள் ஆகிய உடலில், இறையியல் இன்பக் கருத்துக்கள் ஆகிய உயிரியல் அருட்பொருளும் பிரிவற விரவி, அழியா இன்ப அருங் கலைக் கவிதைப் படைப்பாகக் கவின்மிக்குத் திகழ்தலே யாகும். இங்ஙனம் திருக்கோவையார் அகப்பொருளில் அருட்பொருளையும் இயைத்திணைத்து விளக்கும் சிறப்பினை ஒப்புயர்வற்ற தெய்வப் பெற்றிமை மிக்க அருட்பெருங் கவிஞர் ஆகிய குமரகுருபர அடிகளார்,

''கடங்கலுழ் கலுழிக் களிநல் யானை
மடங்கலந் துப்பின் மானவேல் வழுதிக்கு
இருநிலம் அகழ்ந்தும் எண்ணில்பல் காலம்
ஒருவன் காணாது ஒளித்திருந் தோயை,
வனசப் புத்தேள் மணிநாப் பந்திக்
கவனவாம் புரயிவிற் காட்டிக் கொடுத்துப்
பைந்தமிழ் நவின்ற செந்நாப் புலவன்
ஐந்திணை யுறுப்பின் நாற்பொருள் பயக்கும்
காமம் சான்ற ஞானப் பனுவற்குப்
பொருள் எனச் சுட்டிய ஒரு பெருஞ் செல்வ''

—சிதம்பர மும்மணிக்கோவை.

என வியந்து மொழிந்து புகழ்ந்திருத்தல் காணலாம். தம்முள் ஒன்றினொன்று சாலவும் முரண்பட்ட அகப்பொருளும் அருட்பொருளும் (காமச் சுவையும், ஞானச் செய்தியும்) ஆகிய இரண்டையும் இணைத்தியைத்து, முதன் முதலாக வியத்தகு முறையிற் பாடிக்காட்டிய சிறப்புடைமை குறித்தே, இதனைக் ''காமஞ் சான்ற ஞானப்பனுவல்'' எனக் குமர குருபர சுவாமிகள் போற்றிப் புகழ்வாராயினர்.

டாக்டர் ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ் என்னும் அமெரிக்க நாட்டுப் பேரறிஞர், ''பரிணாமக் கொள்கையின்படி, உலகியற்கைப் பொருள்களில் முதற்கண் தோன்றிய பொருள்களை விட, நாளடைவில் படிப்படியே தோன்றும் பொருள்களே மேன் மேல் உயர்ந்து சிறந்து திகழக் காண்கின்றோம். ஆனால் இப்பரிணாமக் கொள்கை, இலக்கியங்களைப் பொறுத்த வரையிற் பொருந்துவதாகத் தோன்றவில்லை. மிகச் சிறந்த இலக்கியங்களெல்லாம், துடுமெனத் தாமே முதலில் தோன்றுகின்றன; ஒப்புயர்வற்று விளங்குகின்றன. ஒரே ஒரு முறை மட்டுமே தோன்றும் அச்சிறப்பிலக்கியங்களுக்கு அருகே நிற்கத் தக்க நிலையிற் கூட, அவற்றிற்குப் பின்னர்த் தோன்றும் இலக்கியங்கள் தகுதி பெறுவதில்லை ''(2) என்று குறிப்பிடுவர்.

அருட்பொருள் :

அதற்கு ஏற்ப, இன்று தமிழில் எத்துணையோ பலப்பல கோவை நூல்கள் பாடப்பெற்றுள்ளன எனினும், அவைகள் எல்லாவற்றுள்ளும் முதன்மையும் பெருமையும் மிக்குத் திகழ்வது, மாணிக்க வாசகர் அருளிச் செய்த திருக்கோவையார் ஒன்றேயாகும். இதன்கண்,

குறிஞ்சி—சாக்கிரம்
பாலை—சொப்பனம்
முல்லை—சுழுத்தி
மருதம்—துரியம்
நெய்தல்—துரியாதீதம்
தலைவன்—கடவுள்
தலைவி—ஆன்மா
தோழி—திருவருள்
தோழன்—ஆன்மபோதம்
செவிலி—திரோதானசத்தி
நற்றாய்—பராசத்தி

என அகப் பொருட் செய்திகள், அருட்பொருட் குறிப்புகள் அமையும் வகையில் பாடப் பெற்றிருத்தலை, ஊன்றிக் கற்பவர் யாவரும் உணரலாம்.

(1) உயிர் என வியத்தல் :

அகப்பொருள் நூல்களில் ''உயிர் என வியத்தல்'' என்பது ஒரு துறை. தலைவன் ஒரு பொழிலின்கண், தலைவியைக் கண்டு கூடி இன்பச் சிறப்பும் பிரியலாகாமையும் கருதி, அவளைத் தன் உயிர் எனப் பாராட்டி மகிழ்வதாகப் பாடப் பெறுவது, இவ்வகத்துறைக்குரிய பொருள் ஆகும்.

''அன்புடன் நேற்று என்னைக் கூடி, பின்னர் என் மனம் வருந்தும்படி பிரிந்து சென்று, தோழியர் கூட்டத்தைச் சேர்ந்து, எனக்கு இன்பமும் துன்பமும் ஒருங்கே விளைவித்து, என் நெஞ்சில் நிலைபெற்று விட்ட என் உயிர், இதோ வந்து விட்டது'' எனத் தலைவியின் வருகைக்காகக் காத்துக்கொண்டிருந்த தலைவன், அவளைத் தன் உயிரினும் மேலானவளாகப் புகழ்ந்து மகிழ்ந்து சொல்லுகின்றான்.

நேயத்ததாய், நென்னல் என்னைப்
புணர்ந்து, நெஞ்சம் நெகப்போய்,
ஆயத்ததாய், அமிழ்தாய், அணங்காய்,
அரன் அம்பலம்போல்
தேயத்ததாய், என்றன் சிந்தையதாய்த்,
தெரியிற் பெரிதும்
மாயத்த தாகி, இதோ வந்து
நின்றது, என் மன்னுயிரே!

---

(2) "Here is a very odd thing. In literature the best in each kind comes first, comes suddenly and never comes again. This is disturbing, uncomfortable, unacceptable idea to people who take their doctrine of evolution over-simply. But I think it must be admitted to be true. Of the very greatest things in each sort of literature, the masterpiece is unprecedented, unique, never challenged or approached henceforth."

—DR. I. A. RICHARDS.

எனத் தலைவன் கூற்றாக வரும் இச்செய்யுளில், மாணிக்கவாசகர் தமக்கு உயிர்க்குயிராக விளங்கும் சிவபெருமானின் திருவருட் செயல்களைப் பற்றிய குறிப்பும் அமையப் பாடியருள்கின்றார்!

''என்பால் அருள்மிகுந்து, முன்னர் என்னைத் திருப்பெருந்துறையில் ஆட்கொண்டு, பின்னர் என்நெஞ்சம் கலங்கி வருந்தும்படி 'நீ தில்லைக்கு வருக' எனக் கூறி, அடியவர் திரளுடன் பிரிந்துசென்று, நினைக்குந்தோறும் அமிழ்தம் போல இன்பம் செய்து, கட்புலனாகாது மறைந்து நிற்றலின் துன்பம் செய்து, பொன்னம்பலம் போல ஒளிமிகுந்து, என் சிந்தையிற் பிரிவற நிலைபெற்று, இங்ஙனமெல்லாம் திருவிளையாடல்கள் நிகழ்த்துதலால் மாயத்தன்மை வாய்ந்து, என்னை இயக்கி ஆட்டி வைக்கும் என் உயிர்க்குயிர் (சிவம்), இதோ வந்து தோன்றா நிற்கின்றது''

என வேறொரு சிறந்த பொருளும், இச்செய்யுட்கண் அமைந்து விளங்குதல் காணலாம். ''எண்ணகத் தாய், உலகுக்கு உயிர் ஆனாய் எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே'' என வரும் திருவாசகம் ஈண்டுக் கருதியுணரற்பாலது.

(2) புனல் தரு புணர்ச்சி :

அகப்பொருட்குரிய துறைகளில் 'புனல்தரு புணர்ச்சி'' என்பது ஒன்று. தலைவி மலைநிலத்துள்ள சுனைப் புனலில் நீராடச் செல்கின்றாள். அங்கு அதன்கண் தவறி வீழ்ந்து, ஆழத்தில் அகப்பட்டுக்கொண்டு துயருற்றுத் தத்தளிக்கின்றாள். அந்நிலையில் அப்போது அங்கு எதிர்பாராவகையிற் போந்த தலைவன், அச்சுனையின் ஆழத்தினின்று அவளை மீட்டுக் காப்பாற்றி உதவி புரிகின்றான். அந்நன்றியை நினைந்து தோழியின்பால் தலைவனின் வேண்டுகோட்கு இசைந்து, அவனையே மணப்பதற்குத் தன் உடன்பாட்டினைத் தலைவி குறிப்பினாற் புலப்படுத்துகின்றாள்.

ஓங்கும் ஒருவிடம் உண்டு, அம்பலத்து
உம்பர் உய்ய அன்று
தாங்கும் ஒருவன் தடவரைவாய்த்,
தழங்கும் அருவி
வீங்கும் சுனைப்புனல் வீழ்ந்த அன்று
அழுங்கப், பிடித்தெடுத்து
வாங்கும் அவர்க்கு, அறியேன்
சிறியேன் சொல்லும் வாசகமே''

என வரும் அரிய இனிய இவ்வகப் பொருட் பாடலில், மேற்குறித்த 'புனல்தரு புணர்ச்சி' என்னும் அகத்துறைக்குரிய பொருள் மட்டுமேயன்றி, மற்றும் ஒரு பொருளும் மாண்புற அமைந்துள்ளமை அறிந்து மகிழ்தற்குரியது.

''பிறவியாகிய பெரிய கடலில் விழுந்து, துன்பம் ஆகிய அலைகள் மோதவும், பெண்ணாசை என்னும் புயற்காற்று வீசவும், காமம் என்னும் கொடிய சுறுமீனின் வாயிலும் அகப்பட்டுக் கொண்டு வருந்தி, ஐந்தெழுத்தாகிய புணையையே நம்பிப் பற்றிக் கொண்டு கிடக்கும் தன்னந் தனியனாகிய என்னை, வீடுபேறு ஆகிய நல்ல கரையிலே சேர்த்துக் காத்தருளினாய்'' எனத்தாம் தம் திருவாசகம் திருச்சதகத்தில்(27) பாடிப்போற்றும் சிறந்த கருத்தினையே, மாணிக்கவாசகர் தம் நன்றியுணர்வு தோன்ற ஈண்டும் அமைத்தருளியிருக்கின்றார்:

''பிறவியாகிய கடலில் விழுந்து யான்
தத்தளிக்குங்கால்,
என்னைத் தாமே எளிவந்து வலித்தாண்டு கொண்டு,
பிடித்தெடுத்துக் காப்பாற்றிப் பேருதவி புரிந்தருளிய
தலைவர் ஆகிய இனிய சிவபிரானுக்கு, யான் சொல்லத்
தகுந்த நன்றியுரை யாது ? என்று, சிறியேன்
அறிகின்றிலேன்.''

என்பது, மேலைத் திருக்கோவையார் செய்யுளின் உள்ளுறை நுண்பொருட் குறிப்பாகும். திருவாசகமும், திருக்கோவையாரும், தம்முள் ஒன்றனையொன்று தழுவி யமைந்திருத்தலை, இவ்வாற்றால் இனிதுணரலாம்.

(3) ஊடல் நீட வாடியுரைத்தல் :

இவ்வாறே ''ஊடல் நீட வாடியுரைத்தல்' என்பதும் ஓர் அகப்பொருட்டுறை. 'உணலினும் உண்டது அறல் இனிது; காமம் புணர்தலின் ஊடல் இனிது'. ஆதலின், தலைவி தலைவனிடம் ஊடல் கொள்கின்றாள். தலைவியின் ஊடலைத் தணிக்கத் தலைவன் முயல்கின்றான். 'உப்பு அமைந்தற்றாற் புலவி' எனத் திருவள்ளுவர் கூறிய நுட்பம் தெளியாத தலைவி, தனது ஊடலிற் சிறிது நீடிக்கின்றாள். அதனால் வாடிய தலைவன் மிகவும் வருந்தி, ''இவள் முன்பொரு காலத்தில் என்னைக் குறிஞ்சி நிலத்தே ஓர் அழகிய சோலையிற் கண்டு, இனிய காதற்பார்வைக் குறிப்பைப் புலப்படுத்தி, இன்பம் பெரிதும் அளித்து, நெஞ்சம் நெக்கு உருகும்படி செய்து, அதனைக் கவர்ந்து கொண்டு மகிழ்வித்த பெண் அமிழ்தம் ஆகிய என் காதலியாகத் தோன்றவில்லை'' எனக் கூறி, உள்ளம் நொந்து கொள்கின்றான். அம்முறையில் அமைந்ததே பின்வரும் திருக்கோவையார் பாடல்!

''திருந்தேன் உயநின்ற சிற்றம்
பலவர், தென் அம்பொதியில்
இருந்தேன் உயவந்து இணைமலர்க்
கண்ணின் இன் நோக்கு அருளிப்,
பெருந்தேன் என நெஞ்சு உகப்பிடித்து
ஆண்டநம் பெண் அமிழ்தம்,
வருந்தேல்! அதுவன்று, இதுவோ
வருவதோர் வஞ்சனையே!''

இப்பாடலில், மாணிக்கவாசகர் தம்மை ஆட்கொண்டருளிய பெண்ணோடு கூடிய அமிழ்தம் போல்பவர் ஆகிய அர்த்த நாரீசுவரர் (சிவபெருமான்), முன்பு தமக்குச் செய்தருளிய தலையளிகளை நினைவு கூர்ந்து, இனிய முறையிற் குறிப்பிட்டு மகிழ்விக்கின்றார்.

''ஒருவாற்றானும் திருந்தாத
வனாய்த் தன்னை அடைதல் குறித்து
ஒரு முயற்சியும் செய்யாமல் வீணே
யுழன்று கொண்டு கிடந்த யான்,
பிறவித் துன்பத்தினின்றும் தப்பிப்
பிழைக்கும் பொருட்டுத்,தானே தனது
பேரருட் பெருக்கினால் எளிவந்து
தோன்றி, தனது இணைமலர்க் கண்

களின் இனிய கடைக்கண் நோக்கத்தினை என்பாற் செலுத்தி (நயன தீட்சை செய்து), பெருந்தேனைப் போன்று இனிமை மிக்கு, என் கருங்கல் மனமும் கரைந்துருகும்படி 'வா வா' என்று என்னையும் பூதலத்தே வலித்தாண்டு கொண்டான்''

என்னும் நுண்பொருட் குறிப்பு அமைந்தமேலைத் திருக்கோவையார் செய்யுளில் ''தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்'' என வரும் திருவாசகப் பாடலின் அருளனுபவமே அமைந்திருத்தல் காணலாம்.

(4) தூது கண்டு அழுங்கல் :

அகப்பொருட் குரிய துறைகள் பலவற்றுள் ''தூதுகண்டு அழுங்கல்'' என்பதும் ஒன்றாகும். தலைவன் பெருவீரன் ஆதலின், அரசனின் விருப்பத்திற்கு இணங்கி, அயல்நாட்டுப் பகைவர்களை அடக்கி வெல்லுதற் பொருட்டுப் போர் புரியச் செல்கின்றான். சென்று சில காலமாகியும் அவனிடமிருந்து கடிதமோ செய்தியோ தலைவிக்குக் கிடைத்திலது. ஆனாற் போருக்குச் சென்ற வீரர்கள் பிறரெல்லாம், தத்தம் மனைவியருக்குத் தாம் நலமே இருந்து போர் புரிந்து வரும் செய்தியினைத் தூதுவர்கள் மூலம் அவ்வப்போது அறிவித்து வருகின்றனர். இந்நிலையில், தனக்குத் தலைவன் ஏதும் செய்தி கூறித் தூது அனுப்பி வைத்திலனே என்று, தலைவி மிகவும் கவலையுற்று வருந்துகின்றாள்.

''வருவன செல்வன தூதுகள்
ஏதில; வான்புலியூர்
ஒருவனது அன்பரின் இன்பக்
கலவிகள் உள்ளுருகத்
தருவன செய்து, எனது ஆவிகொண்டு
ஏகி, என் நெஞ்சில் தம்மை
இருவின காதலர், ஏதுசெய்வான்
இன்று இருக்கின்றதே?''

இப்பாடலில், மாணிக்கவாசகர், தம்மைத் திருப்பெருந்துறையில் ஆட்கொண்டருளிய சிவபெருமான், தம்பால் 'நீ தில்லைக்கு வருக' எனக் கூறி மறைந்து பிரிந்து சென்றதன் பின்னர்ச் சில காலம் வரையில், தமக்குக் காட்சி தந்தருளாமலே இருந்து விட்டதனால் அடைந்த சோகச் சூழ்நிலையினைப் பற்றிக் குறிப்பிட்டருள்கின்றார்.

''தனது மெய்யன்பர்களைப் போல யானும் இன்பம் எய்தும்படி, உள்ளம் உருக்கும் கலவிகளை (அருட் செயல்களை) எனக்குச் செய்து, பின்பு என் உயிர் பிரிந்தாற் போலத் தாம் பிரிந்து சென்று, மீண்டும் ஒரு ஞான்றும் கட்புலனாகாமல் மறைந்து நின்று, இடையறாப் பேரன்பால் யான் தன்னை நினைந்து நினைந்து வருந்தும்படி செய்த என் காதலர் (சிவபெருமான்), என்பால் இன்று யாது செய்யக் கருதியிருக்கின்றனரோ ? அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமையெல்லாமும் கொண்ட அவர், எனக்கு நன்றே செய்யினும் செய்க ! அன்றித் துன்பமே செய்யினும் செய்க! எல்லா வற்றையும் அவர் திருவருள் எனவே கருதி யான் மகிழ்ந்து ஏற்றுக்கொண்டு அமைவேன்.''

என்னும் உள்ளுறை நுண்பொருட் குறிப்பு அமைந்த இத்திருக்கோவையார் செய்யுளில், ''அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்'' எனத் தொடங்கும் திருவாசகப் பாடலின் பொருள் நலம் உணர்த்தப்பெற்றிருத்தல் காணலாம்.

முடிவுரை :

இத்தகைய பல அரிய பெரிய நுண்ணிய முறைகளில், அகப்பொருளில் அருட்பொருளையும் அமைத்து ஒருசேரக் குழைத்தளித்து உவப்பினை விளைவிக்கும் உயர்ச்சி மிக்கொளிர்வது திருச்சிற்றம்பலக் கோவையார்! திருவாசகத்தின் மற்றும் ஓர் அரிய இனிய சிறந்த மக்கட் பதிப்பு அமைப்பே (A popular but profound and mystic version) திருச்சிற்றம்பலக்கோவையார் எனச் சுருக்கமாகக் குறிப்பிடலாம். அத்தகைய இவ்வித்தகப் பாடலை, நாம் அனைவரும் மிக்க பத்தியுணர்வோடு ஓதி, இம்மை மறுமை நலன்களையெல்லாம் எய்தி மகிழ்வோமாக!

(வெண்பா)

அகப்பொருளில் தூய அருட்பொருளும் தோற்றி
மிகப்பொலிந்து நன்றே விளங்கித்—தகப்பெரிதும்
செந்தமிழ்ச்சீர் சான்ற திருக்கோவை யார்சிறப்பை,
எந்தவகை யிற்புகழ்கேம் யாம்?

காதல் உணர்வைக் கடவுள் உணர்ச்சியொடு
தீதறச்சேர்த் துக்கோவை செய்தளித்து,—ஓதுலக
மக்களெல்லாம் உய்யவைத்த மாணிக்க வாசகர்தாள்
எக்காலும் போற்றியுய்வோம் யாம்!

—ஆசிரியர்.

கந்த புராணம்

திருமுருக கிருபானந்தவாரியார்.

தட்ச காண்டம்

கருணையே வடிவாகிய கந்தவேள் சிவ பெருமானுடைய நெற்றிக் கண்களிலிருந்து அருட்பெருஞ் சோதியாகத் தோன்றியருளினர். இவ்வாறு எம்பெருமான் தோன்றியதற்குக் காரணம், சூராதி அவுணர்களையடக்கும்பொருட் டேயாகும்.

சூரபன்மன் 1,008 அண்டங்களையும், 108 யுகங்கள் ஆட்சி புரிந்தான். தேவர்களையும் தேவ மாதர்களையும் சிறையில் இட்டுத் துன் புறுத்தினன். அமரர்கள் சூரனிடம் பலப் பல யுகங்கள் அளவற்ற அல்லல்பட்டார்கள். இதற்கு என்ன காரணம்?

சிவநிந்தை செய்த தட்சயக்ஞத்தில் அமரர்கள் கலந்து கொண்ட புன்மையேயாகும் என உணர்க. எனவே, தட்சனைப் பற்றி நாம் முதலில் அறிந்து கொள்ள வேண்டும். அதனுல் தட்சனுடைய வரலாற்றை எழுதுகின்றேன்.

பிரமதேவர் :

உலகங்களுக்குள் உயர்ந்து தவ மயமாய் விளங்குவது சத்திய லோகம். இதன் தலைநகரம் மனேவதியாகும். தேவர்களும் முனிவர்களும் புதல்வர்களும் புடை சூழ மணித் தவிசில் பிரம தேவர் வீற்றிருந்தார். அவர் ஜெபமாலை, கமண்டலம் , வேதம் இவைகளைக் கரத்தில் ஏந்திப் படைப்புத் தொழில் புரிந்து கொண்டு இருந்தார்.

படைப்புத் தொழில் மேலும் இனிது நடை பெறும் பொருட்டுத் தமது கட்டை விரலில் இருந்து தட்சன் என்ற புதல்வனை உண்டாக்கி னர். பின்னும் மரீசி முதலிய ஒன்பது புதல்வர் களை யுண்டாக்கினர்.

தட்சன் தந்தையிடம் வினவினன்!

தட்சன், ''தந்தையே! மூவருக்குந் தேவ ருக்குந் தலைவரும், ஞானமூர்த்தியும், உயிர்க்கு யிராகியும் உள்ள இறைவர் யார்? அதனை எனக்கு உரைத்தருளும்'' என்று கேட்டான்.

பிரமதேவர் ''மகனே! நாராயணரும் நானும் ''யாமேபிரமம்'' என்று கூறி மலைந்த போது அருட்பெருஞ்சோதியாகத் தோன்றி யருளிய சிவமே பரம்பொருள். சிவமூர்த்திக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை'' என்ருர்.

தட்சன் ''பிதாவே! படைப்புத் தொழில் புரிகின்ற உம்மையும், காத்தல் தொழில் புரி கின்ற நாராயணரையும் பார்க்கிலும், சங்காரத் தொழில் புரியும் சிவமூர்த்தி உயர்ந்தவர் என்ப தற்குக் காரணம் யாது? என் மனம் தெளியக் கூறுவீர்'' என்று மீண்டுங் கேட்டான்.

பிரமதேவர் கூறுகின்ருர், ''மகனே! நீ என்பால் வேதங்களையெல்லாம் ஓதியும் உனக்குச் சிந்தையில் தெளிவு ஏற்படவில்லை. சங்காரத் தொழிலில் சிருஷ்டி ரக்ஷகம் என்ற இரு தொழில்களும் அடங்கும். சிவபெருமான் ஒருவரே சர்வசங்கார காலத்திலே அகில உல கங்களையும் எங்களையும் ஒடுக்கம் செய்கின்ருர். சூரியன் முன்னே ஆம்பல் குவிதலும் பயிர் தழைப்பதும் தாமரை மலர்தலும் போலே சிவ சந்நிதியில் ஐம்பெருந் தொழில்களும் நடை பெறுகின்றன. பிரமன், திருமால், உருத்திரன் என்ற மூவர்க்கும் சிவமே தலைவர். அவரை வேதத்தில் ''சதுர்த்தம்'' (நான்காம் பொருள்) என்று கூறப்பட்டிருக்கின்றது.

''மகனே! வேதத்தில் மற்றவரைப் பிரமம் என்று கூறுவது முகமனுகும். நதிகள் யாவும் கடலையேயடைவதுபோல் ஆன்மாக்கள் யாரை வணங்கினுலும் அவ்வணக்கங்கள் சிவபெரு மானையே சேரும். சிவபெருமான் ஆதியும் நடுவும் அந்தமும் இல்லாதவர், எங்கும் நிறைந் தவர். உயிர்க்குயிரானவர். முழு தொருங் குணர்ந்தவர்.''

சிவத்தையன்றி எங்களைப் பரம்பொருள் என்று கருதி எமக்குச் சிவ மூர்த்தியைப் பார்க் கிலும் அதிகச் சிறப்பு செய்பவர்கட்கு நன்மை கள் விளையாது. நரகமே விளையும். சிவத்துடன் சமம் என்று எங்களைக் கூறுவது பிழை. அப் பெருமான் தனக்குவமையில்லாதவர். அவரே பசுபதி; நாங்கள் பசுக்கள். வேதங்கள் இவ்வாறு

கூறுகின்றன. நாங்கள் சிவமூர்த்தியை வழிபட்ட ஆலயங்கள் பலப்பல. அவற்றைக் காண்பாயாக. சிவனருள் பெருது முத்தியடைந்தவரில்லை. சிவனருள் பெருது வாழ்ந்த தேவரும் இல்லை. ஆதலால் நீ தவத்தைச் செய்து சிவத்தை அடைவாயாக'' என்று கூறினர்.

''பதியரன், பாசந் தன்னில்
பட்டுழல் பசுநாம் என்றே,
விதியொடு வேதங் கூறும்
மெய்ம்மையைத் தெளிய வேண்டின்,
இதுவென உரைப்பன்: யாங்கள்
இவ்வர சியற்ற ஈசன்,
அதிர் கழல் அருச்சித் தேத்தும்,
ஆலயம் பலவுங்காண்டி''

''அவனருள் பெருது முத்தி
அடைந்தனர் இல்லை; அல்லால்
அவனரு ளின்றி வாழும்
அமரரும் யாரும் இல்லை.
அவனருள் எய்தின் எய்தா
அரும் பொருள் இல்லை; ஆணை
அவனலது இறைவன் இல்லை
அவனை நீ அடைதி யென்ருன்.''

தட்சன் தவம் :

பிரமதேவரால் சிவபெருமானுடைய பெருமையைக் கேட்டும், தட்சனின் பண்டை வினைப் பயனுல் அவனுடைய உள்ளம் முத்தி நலத்தை விரும்பாது, ஆட்சிப் பதவியை விரும்பியது. தந்தையிடம் விடைபெற்று, பிரமதேவருடைய மனத்தினின்றுந் தோன்றிய மானச சரோவரத்தை யடைந்தான். பிராணவாயுவால் மூலத் தழலை யெழுப்பி, மனத்தை ஒருமுகப் படுத்தி, ஆயிரம் ஆண்டுகள் அரிய பெரிய மாதவஞ் செய்தான்.

அவனுடைய தவத்திற்கு இரங்கிய சிவ பெருமான் வெள்ளியங்குன்றில் பவளக்குன்று தோன்றியதுபோல், வெள்விடை மீது தோன்றி யருளினர். தட்சன் பட்சத்துடன் பரமனைப் பலமுறை பணிந்து போற்றினன்.

தயாநிதியாகிய சிவபெருமான், 'தவத்திற் சிறந்த தட்சனே! உனக்கு என்ன வரம் வேண்டும்; கேள்'' என்ருர்.

தன்னேரில்லாத தலைவராகிய சம்புவிடம் தட்சன் பிறவிமாசற முத்திநலம் கேட்டானில்லை. காமதேனுவிடம் காடி நீரை ஒருவன் கேட்டது போலவும், கற்பகத்தினிடம் ஒருவன் கண்ணுடித் துண்டைக் கேட்டது போலவும், தட்சன் வரங்கேட்கின்ருன்.

''கண்ணுதற் கடவுளே! நிலவுலகம், கந்தர்வவுலகம், சத்தியலோகம், வைகுந்தம் முதலிய எல்லாவுலகங்களிலும் நான் ஆணை செலுத்தி ஆட்சி புரிய வேண்டும். உம்மை வணங்குவோர் யாவரும் என்னை வந்து வணங்க வேண்டும். தானவரும், வானவரும் என் கட்டளைக்கு அடங்கி நடக்க வேண்டும். உமது பாகம் பிரியாத பராசக்தி எனக்கு மகளாகவும், அந்த அம்பிகையைத் தேவரீர் மணந்து எனக்கு மருமகன் ஆகவும் வேண்டும் என்று வரம் கேட்டான். எம்பெருமான் அவ்வரங்களை வழங்கி விட்டு மறைந்தருளினர். தட்சன் மிக்க மகிழ்ச்சி யடைந்தான்.

தட்சன் பிரமதேவரைத் தன்னிடம் வருமாறு எண்ணினன். பிரமதேவர் தட்சன் பெற்ற வரங்களை நினைந்து வருந்தினர். அமுதத்தைத் தடவினுலும் வேம்பு கசக்கவே செய்யும். ''அந்தோ! அரிய பெரிய தவஞ் செய்து ஆல முண்ட நீலகண்டமூர்த்தியிடம் வீடுபேறு வேண்டாது நாடுபுரக்கும் நவையைப் பெற்ருனே? என்னே இவன் அறிவு? விதியின்விளைவு'' என்று எண்ணித் தட்சனிடம் வந்துஆசிகூறினர்.

தட்சன், ''தந்தையே! நான் இருந்து ஆட்சி புரிய மாட்சிமை தங்கிய அழகிய நகரத்தை உண்டு பண்ணுக'' என்ருன். பொன் நகரும், மற்ற நகரமும் நாணுமாறு ஓர் விசித்திரமான 'தட்சமாபுரி'யைப் பிரம்மதேவர் உண்டாக்கினர். தட்சன் அங்கு அமைத்த நவமணி மாளிகையில் அரியணை மீது அமர்ந்து ஆட்சி புரிந்தான்.

தேவகுருவாகிய வியாழ பகவானும் இந்திரன் முதலிய எண்திசை அதிபர்களும் ஏனைய தேவர்களும் தட்சனிடம் வந்து அவனைவணங்கி, அவனுடைய ஆட்சிக்கு அடங்கி அவன் இட்ட ஏவலின் வழி நின்ருர்கள்.

தட்சனுடைய வரபலத்தால் இந்திரனுதி இமையவர்கள் அடங்கியதைக் கண்டு அசுர குருவாகிய சுக்கிரன் மகிழ்ந்து அசுரேந்திரனை யணுகித் தட்சனிடம் சென்று நட்புக் கொள்ளுமாறு ஏவினன். அசுரேந்திரனும் ஏனைய அசுரர்களும் தட்சனிடம் வந்துவணங்கிப் பணிபுரிந்தார்கள். ஆதித்தன் முதலிய ஒன்பது கோள்களும், யட்சர்களும் வந்து போற்றிப் பணி செய்து, அவனைப் புகழ்ந்து தட்சனுடைய அன்பைப் பெற்ருர்கள். இவ்வாறு அரனுர் வரபலத்தால் அயன் முதலிய அனைவரும் தன் ஏவலுக்குள்ளாகுமாறு செய்து தட்சன் வெண் கொற்றக்குடை நிழலிலிருந்து செங்கோலோச்சிப் பெருமிதத் துடன் ஆட்சி புரிந்தான்.

தட்சன் மகப்பேறு :

அயனுருடைய அடிமலரில் தோன்றிய அருந்ததிக் கற்பின் மிக்க, வேத வல்லியைத் தட்சன் திருமணஞ் செய்து கொண்டான்.

நாகம் பல ரத்தினங்களை யீன்றதுபோல் ஆயிரம் மைந்தர்களைப் பெற்ருன். அப்புதல்வர்கள் முப்புரிநூல் தரித்து வேதங்கள் அனைத்தும் ஓதியுணர்ந்தார்கள்.

தட்சன் அம்மைந்தர்களை நோக்கி, "நீங்கள் மானசவாவியை யடைந்து சிவத்தை வேண்டித் தவத்தைச் செய்து எல்லாவற்றையும் படைக்கும் பரிசு பெற்று வாருங்கள்'' என்று பணித்தான்.

தட்ச குமாரர்கள் மானசமடுக்கரையில் முழுகி அதன் கரையில் நின்று, பொறிபுலன்களை வென்று தவம்புரியலானார்கள்.

நாரதர்

நாரத முனிவர் தட்ச குமாரர்களிடம் வந்து, அவர்கள் தவஞ்செய்கின்ற காரணத்தைக் கேட்டுக் கைகொட்டிச் சிரித்தார். ''தட்ச குமாரர்களே! நீவிர் உய்யும் நெறியை உரைப்பேன். ஆன்மாக்கள் தவஞ் செய்து பெறத் தக்கது பிறவாமையேயாகும். படைப்புத் தொழிலைப் பெறும் பொருட்டுச் சிவத்தை நோக்கித் தவம் செய்வது மதியுடைமையன்று. படைப்புக் கர்த்தாவாகிய பிரமதேவரின் ஐந் தலைகளில் ஒரு தலையைச் சிவபெருமான் அரிய இன்று வரை அற்ற தலையைப் படைத்துக் கொள்ள முடியாமல், இன்றும் நான்கு தலையனாக இருப்பதை நீங்கள் அறியவில்லையோ? நீங்கள் வீடு பேற்றை விரும்பாது பதவியை விரும்பித் தவஞ் செய்வது நீராடச் சென்றவர் சேருடி மீள்வதை யொக்கும். கற்றவர் போற்றும்கண்ணுதலாரிடம்பதவியை விரும்பிப் பெறுவது பொன் விலங்கு பூட்டிக் கொண்டது போலாகும். எத்துணை இன்பம் உயருமோ அத்துணைத் துன்பமும் உயரும். ஆதலால் மறந்தும் பதவியை விரும்பாது வீடு பேற்றை விரும்பித் தவஞ்செய்யுங்கள்'' என்று கூறிச் சிவ மந்திரம் உபதேசித்துச் சென்றார். நாரதருடைய நல்லுரைப்படி அம்மைந்தர்கள் பெருந் தவஞ் செய்து சிவனருளால் வீடு பேறு பெற்றார்கள்.

மக்கள் நாரதருடைய உபதேசத்தால் முத்தி நலம் பெற்றதை யறிந்து தட்சன் வருந்தினான். மற்றும் ஆயிரம் புதல்வர்களைப் பெற்றான். அவர்களுக்கு வேதங்களை ஓதுவித்து ''என் அன்புடைய மைந்தர்களே! நீவிர் சென்று தவம் செய்து சிவபெருமானிடம் படைப்புத் தொழிலைப் பெற்று வாருங்கள்'' என்றான்.

அம்மைந்தர்கள் மானச சரோவரம் போய் மன ஒருமைப்பாட்டுடன் பசுபதியை நாடித் தவஞ் செய்தார்கள். நாரத முனிவர் அங்குச் சென்று அவர்களிடம் ''மாதவம்புரியும் மைந்தர்காள்! நீங்கள் வருந்தித் தவஞ் செய்கின்றீர்கள். கரும்பிருக்க இரும்பை மெல்லலாமோ? பதவியை விரும்புவது பிறவிக்கு ஏதுவாகும். ஆதலால் உம்மீதுள்ள காதலால் கூறுகின்றேன். பற்றற்றுத் தவஞ்செய்து பரமன்பால் முத்தி நலம் பெறுவீர்களாக என்று கூறி, உபதேசித்துச் சென்றார். அவர்களும் அவ்வாறு தவஞ் செய்து பற்றறுத்துப் பசுபதியருளாசியால் முத்தி நலம் பெற்றார்கள்.

தட்சன் பெண் மக்களைப் பெறுதல்

தட்சன் தன் மக்கள் நாரதரால் மனம் மாறிச் சிவத்தினைச் சேர்ந்ததை யறிந்து பெருஞ் சீற்றம் அடைந்தான். ''என்னுடைய விருப்பத்தை மாற்றி ஈராயிரம் புதல்வர்களையும் எனக்கு உதவாமல் செய்த நாரதன் நிலை பேறு இன்றி எங்கும் உழல்வானாக'' என்று தட்சன் சாபமிட்டான். ''இனி நான் ஆண் மைந்தரைப் பெறாது பெண் மக்களைப் பெறுவேன்'' என்று எண்ணினான், தட்சன்.

ஐம்பது பெண்களைப் பெற்றான். சுபுத்தி, புத்தி, சுரசை, திருது, துட்டை, கிரியை, கீர்த்தி, சிரத்தை, இலச்சை, பேதா, சுத்தி, சாந்தை, வடி என்ற பதின்மூன்று புதல்வியர்களைத் தரும தேவதைக்குத் திருமணஞ் செய்து தந்தான்.

கியாதி என்ற புதல்வியைப் பிருகு முனிவருக்குத் தந்தான். பிருகு கியாதியிடம் விதாதா, தாதா என்ற புதல்வர்களைப் பெற்றான். பிருகு மீண்டும் கியாதியிடம் மகாலட்சுமியைப் பெற்று நாராயணருக்குத் தந்தார்.

சம்பூதி என்ற புதல்வியை மரீசிக்குத் திருமணஞ் செய்து கொடுத்தான். மரீசி காசிபர் முதலிய மக்களைப் பெற்றார்.

சன்னதி என்ற கன்னிகையைப் புலத்தியருக்குத் தந்தான்.

மிருதி என்ற மகளை அங்கிராவுக்கு அளித்தான். இவர்களிடம் அங்கிதீரன், பரதன் என்ற புதல்வர்களும் நான்கு புதல்வியர்களும் தோன்றினார்கள்.

பிருதி என்ற புத்திரியைப் புலகன் என்ற முனிவருக்கு ஈந்தான். புலகர் தத்தாத்திரியைப் பெற்றார். இவரிடம் கும்பன் பிறந்தான்.

ஊற்சை என்ற மகளை வசிட்டருக்கு வழங்கினான். வசிட்டரிடம் ஒரு பெண்ணும் ஏழு புதல்வர்களும் பிறந்தார்கள்.

அநசூயை என்ற புதல்வியை அத்திரி முனிவருக்கு நல்கினான். அத்திரி முனிவர் அநசூயையிடம், சத்திநேத்திரன், சந்திரன், சனி, சங்கதானன் என்ற மக்களைப் பெற்றார்.

சுவாகா என்ற பெண்ணை அக்கினி தேவனுக்கு ஈந்தான். அக்கினி சுவாகாவிடம் மூன்று புதல்வர்களைப் பெற்றான்.

கமை என்ற புதல்வியைக் கிரது என்ற முனிவருக்குத் தந்தான். இவர்களிடம் சிறந்த மூன்று பாலகர்கள் பிறந்தார்கள்.

சுவதை என்ற பெண்மணியைப் பிதரா என்பவருக்குக் கொடுத்தான். பிதரா சுவதையிடம் மேனை, தரணி, என்ற புதல்வியரைப் பெற்றார். மேனையை இமவான் திருமணஞ் செய்து கொண்டான். தரணியை மேரு மணந்து மந்தரகிரியைப் பெற்றது. மந்தரகிரி தவஞ் செய்து சிவமூர்த்தி தன்பால் இருக்கும் பெரும் பேற்றைப் பெற்றது. மேரு பின்னர் வேலை என்ற புதல்வியைப் பெற்றுச் சமுத்திரத்துக்கு நல்கியது.

தட்சன் இவ்வாறு இருபத்து மூன்று பெண்களைத் திருமணஞ் செய்து தந்த பின் கார்த்திகை* முதலிய இருபத்தேழு நட்சத்திரங்களைச் சந்திரனுக்குத் திருமணஞ் செய்து கொடுத்தான்.

சந்திரன் ஒவ்வொரு நாள் ஒருத்தியிடம் கூடி மகிழ்ந்தான். பின்னர் கார்த்திகையும் உரோகிணியும் மிக்க அழகுடையவர்களாக விளங்கியதால் அவர்களிடமே மிகவும் விரும்பியிருந்தான்.

மற்ற இருபத்தைந்து மாதர்களும் தம்பால் சந்திரன் அணுகாதது குறித்துப் பெரிதும் வருந்தினார்கள். பலகாலும் பொறுத்து, கணவனை வெறுத்துத் தந்தையாகிய தட்சனிடம் போய் அவனுடைய பாதத்தில் வீழ்ந்து அழுது தங்கள் அல்லலை உரைத்தார்கள்.

தட்சன் கோபமும், சந்திர சாபமும்

தட்சன் பெருங்கோபம் அடைந்தான். ''சந்திரன் பேரழகன் என்று கருதி உங்களை அவனுக்குத் தந்தேன். மனைவியர்களிடம் சமமாக நடவாமல் என்னையும் உங்களையும் உதாசீனஞ் செய்தான். அவனுடைய அகந்தை என்னே? அந்த மூடன் நாளுக்கு ஒரு கலையாகத் தேய்ந்து, ஒய்ந்து மாய்ந்து போவானாக'' என்று சாபமிட்டான்.

சந்திரனுக்கு நாளுக்கொரு கலையாகத் தேய்ந்தது. அறவழியில் வராத செல்வம் போல் ஆயிற்று. இன்னும் ஒரு கலைதான் எஞ்சியிருந்தது. அவன் அஞ்சி இந்திரன்பால் சென்று தன் குறையைக் கூறி முறையிட்டான்.

இந்திரன் அவனைத் தழுவி, ''சோமனே! உனக்கு இப்படி ஒரு துயரம் நேர்ந்ததா? நீ முன்பு ஒரு சமயம் திருக்கயிலாய மலையில், விநாயகரது பெருவயிற்றையும், அவர் கையில் இருந்த மோதகத்தையும் பார்த்துச் சிரித்தாய். விநாயகர் வெகுண்டு உன்னைச் ''சண்டாளனாகக் கடவது'' என்று சபித்தார். அதனால் அனைவரும் உன்னைக் காணவும் வெறுத்தார்கள். பிரமதேவர் வேண்ட விநாயகர் கருணைகூர்ந்து ஆண்டுக்கு ஒரு நாள்—ஆவணி மாதம் சதுர்த்தி 'யன்று மட்டும் நீசனாக இருக்கட்டும் என்று அருள்புரிந்தார். ஆவணி சதுர்த்தியில் மட்டும் உலக மக்கள் உன்னைப் பார்க்காமல், விநாயகரை வழிபட்டு வருகின்றார்கள். இப்படி ஒரு துயரம் உனக்கு இருக்க, இப்போது மேலும் ஒரு துயரம் நேர்ந்தது. பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்'' என்ற பழமொழி போல், உன் நிலையமைந்தது. ''மதியே! நீ மதியற்றாய். பிரம தேவனிடம் போய்த் தஞ்சம் அடைவாய். அவர் தன் மகனாகிய தட்சனிடம் கூறிச் சாபத்தை மாற்றுவார் என்று இந்திரன் இயம்பினான்.

சந்திரன் இந்திரன் உரைத்தபடி சத்திய லோகம் போய்த் தாமரை மலரில் மேவும் நாமகள் கொழுநனுடைய பாதத்தில் வீழ்ந்து தனக்குற்ற சாபத்தைக் கூறி, ''ஐயனே! தங்கள் மைந்தனிடம் இனிது கூறி எனக்குத் தந்த சாபத்தையும் கோபத்தையும் மாற்றி என்னைக் காப்பாற்றுவீராக'' என்று கூறினான். சந்திரனுடைய அவல நிலையைக் கண்டு உள்ளம் நொந்த பிரம தேவர் கூறுகின்றார்.

''திங்களே! தட்சன் என் மகனாக இருந்தும் வர பலத்தாலும் ஆட்சியின் அகந்தையாலும் என்னைச் சிறிதும் மதிக்கின்றானில்லை. பழைய தட்சன் அல்லன்; முன்னே என்னிடம் உபதேசம் பெற்றுத்தான் இந்த ஆட்சியைப் பெற்றான். ஆனால் அவன் இப்போது சிவ மூர்த்தியையும் மதியாது மமதை யுற்றிருக்கின்றான். அதிகாரச் செருக்கால் தட்சன் தலைநிமிர்ந்து நடக்கின்றான். அவனிடம் இன் சொல் இல்லை. அவன் அகந்தையால் யாரையும் மதிக்கிறானில்லை. அதனால் அவன் ஆட்சி நிலை பெறாது.

சந்திரனே! கருணைக் கடலாகிய சிவபெருமான் ஒருவரே உன்னை உய்விக்க வல்லவர். தஞ்சம் புகுந்த மார்க்கண்டேயற்காக மறலியை மாய்த்த மகாதேவர். அடைக்கலம் புகுந்த அமரர் பொருட்டு ஆலமுண்ட நீலகண்டர். உமாதேவியாருடைய திருவிரல்களில் தோன்றி உலகங்களை யழிக்க வந்த கங்கை வெள்ளத்தைக் கண்டு நாங்கள் அஞ்சியபோது கங்காநதியைத் தலையில்தாங்கிக் காத்தருளினவர். சிவபெருமானுடைய பெருமை அளவிடற்கரியது. நீ கயிலாயம் சென்று செஞ்சடைக் கடவுளைத் தஞ்சமடைக'' என்றார்.

சந்திரன் உடனே விரைந்து சென்று கயிலை மலையை யடைந்து, திருநந்திதேவருடைய அனுமதி பெற்று, சிவபெருமானுடைய சேவடியில் வீழ்ந்தான். ''கருணைக் கடலே! தட்சன் தந்த சாபத்தால் கலைகள் தேய்ந்து நிலை குலைந்தேன். எஞ்சிய கலையும் இன்று அழியும். என் உயிர் அழியும். காத்தருள் புரியும்'' என்றான்.

கோமதியின் நாயகர் (சிவபெருமான்) தாமதியாது அந்த மாமதியின் எஞ்சிய ஒரு கலையை எடுத்துச் சென்னியில் சூடிக்கொண்டார். அடியில் வீழ்ந்தவனை முடிமேல் வைத்துக் கருணை புரிந்தார். இந்த ஒரு கலை என்றும் அழியாது. சோமனே! உன் மாமன் தந்த சாபத்தால் தினம் ஒரு கலை தேயும். நம் அருளால் தினம் ஒரு கலை வளரும் என்று கூறி அருள் புரிந்தார். இறைவனுடைய சம்மதியால் அம்மதி நிம்மதி அடைந்தான்.

---

*பழங்காலத்தில் கார்த்திகைதான் முதல் நட்சத்திரமாக இருந்தது. பிருகத் ஜாதகம் முதலிய நூல்களால் அறிக.

அன்றி, ஆவணிதான் முற்காலத்தில் முதல் மாதமாக இருந்தது. இன்றும் மலையாளத்தில் ஆவணி வருஷப் பிறப்பாக இருக்கின்றது.

மனமும் வாக்கும்

கே.எஸ்.ஜெகன்னாதன்

உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேச முடியும்.

புறம் பேசுவதை உள்ளம் உணர்ந்து கொள்கிறது.

உள்ளத்து உணர்ச்சிகளை அடக்கி வெளிக் காட்டாமல் இருந்திட முடியும்.

வாக்கினை மறைத்திட முடியாது.

சொற்கள் வில்லிலிருந்து விடப்பட்ட அம்பு, வார்த்தைகளைக் கொட்டிவிட்டால் அது திரும்பாது.

தீயினால் சுட்ட புண் ஆறும். நாவினால் சுட்ட புண் ஆறாது.

சிந்திக்காது வார்த்தைகளை உதிர்ப்பது தீதாகும்.

உள்ளத்திலிருத்தி உண்மையை உணர்ந்து பின் உரைப்பதே சிறந்த வழியாகும்.

மனம் வாக்கிற்கு எட்டாத அழிவற்ற பரம்பொருள், நமது நிலையற்ற உடலினுள் தங்கி தமக்கு வேண்டுவனவற்றை எல்லாம் தருகிறது.

தருகின்ற நன்மை படைத்ததினால் மனம் ஒரு கோயிலாகத் திகழ்கிறது.

தீமைகளை உண்டாக்கும் துர்க்குணங்களே நீங்கள் இப்போது செயல்பட முடியாது.

செயல் திறன் அனைத்தையும் நல்லெண் ணங்கள் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன.

உலகத்தைப் படைத்துக் காத்து அருள் பாலிக்கும் ஆண்டவன் உள்ளத்தில் தாமரை யாய்ப் பூத்திருக்கிறார்.

உள்ளொளியில் சுடர் விட்டு ஜொலிக்கின் றார். அவரது ஒளிக்கிரணங்கள் எங்கும் பிரவாக மாக இருக்கின்றன.

துன்பக் கடலில் என்னை ஆழ்த்துகிற வினை களே உங்களுக்கு இனி எந்த விதமான ஆதரவும் கிடையாது.

ஆதரவற்ற நிலையில் தவிக்கின்ற துர்க் குணங்களே இன்னுமா தயக்கம், என்னை விட்டு ஓடிவிடுங்கள்.

ஞானஒளியைத் தருகின்ற நல்லெண் ணத்தை என்றும் அழித்திட முடியாது. அது அழிந்திடுமேயானால் அப்போது இந்தக் குவல யமும் அழிந்துபோகும்.

ஆண்டவனின் திருப்பெயரை உச்சரிப்பத னாலேயும், அதன் சுவையையும் ஆனந்தத்தை யும் அறிந்திருப்பதினாலேயும் உள் மனம் தூய் மையுடையதாகிறது.

தூய்மையான உள்ளத்திலிருந்து எழுகின்ற எண்ணங்கள் அனைத்துமே நல்லனவாக அமை கிறது.

நல்ல எண்ணங்களிலிருந்து பிறக்கின்ற சொற்கள் நன்மை பயக்கும் வகையில் அமை கின்றது.

நெஞ்சில் தூய்மை இல்லையானால் அவனு டைய வாழ்வில் துன்பம் சுழன்றடிக்கும்.

எத்துணை முயற்சிகள் எடுத்துக் கொண்டா லும் துன்பத்திலிருந்து மீளமுடிவதில்லை.

வாக்கும் மனமும் ஒன்றிச் செயல்படாத தால் தீவினைகள் சூழ்கிறது.

முயலை விட்டுக் காக்கையின் பின்போவது என்பது பழமொழி. அதுபோல நல்லெண் ணத்தை மனதில் இருத்தாமல் துர்க்குணங்கள் தலைதூக்கியதால் ஏற்பட்ட இடர்களே இத்துன் பங்களுக்கு மூலமாகும்.

மூலத்தைத் தெரிந்து கொண்டபின் அதைப் போக்கிடஆதிமூலத்தைத் தொழுதிடவேண்டும்.

உள்ளத் தூய்மையோடு ஆதிமூலத்தைத் தொழும்போது அவன் அருள் சுரக்கின்றான்.

செய்த தீவினைகளை வேரறுக்கின்றான். வாழ்வில் நல்லன நடந்திடக் கருணை மழை பொழிகிறான்.

பிறவி எனும் பெருங்கடலில் கிடந்து துன்பப்படும் நாம் முதலில் ஆணவத்தால் பல வித வழிகளிலும் முனைந்து கடைத்தேறலாம் என்று நினைக்கிறோம்.

நினைப்பதெல்லாம் இப் புவியில் நடந்திட முடியுமா?

கடலிலே நாலா பக்கங்களிலும் அலைந்து திரிந்து கரை சேர முடியாமல் சோர்ந்து போய்க் கப்பலில் உள்ள பாய்மரத்தின் மீது அமர்ந்து இளைப்பாறி, பின் சுகமாகக் கரை சேர்கின்ற பறவைகளைப்போல நாமும் இயன்ற வரை முயல்கிறோம். நம் முயற்சி பயன்படாது போவது கண்ட பின்பே இறைவனது திருவடிகளையே புகலிடமாக்கிக் கொள்கிறோம்.

புகலிடம் போனதும் புது எண்ணங்கள் தோன்றுகின்றன. மனம் தூய்மையடைகிறது.

இது நாள் வரை இருந்து வந்த துர்க்குணங்கள் மெல்ல மெல்ல விலகுகிறது.

எண்ணிப் பார்த்துச் சொல்கின்ற தன்மை வளர்கிறது.

இத்தன்மை வளரும்போது இத்தன்மை கொண்ட மனிதன் சூரியனைப் போலாகிறான்.

பார்த்த இடம் எங்கும் சூரியனுடைய கிரணங்கள் பரந்து விரிந்து கிடக்கின்றது.

துர்க்குணமெனும் நட்சத்திரங்கள் நல்லெண்ணம் நல்ல வாக்கு எனும் சூரியன் ஒளிப் பிரவாகத்தின் முன் ஒளி இழந்து எங்கோ மறைந்துவிடுகிறது.

தான் என்ற அகந்தை இருளில் மூழ்கிக் கிடந்தவன் ஞான ஒளியால் அருள் வழங்கப் பெறுகிறான்.

காலை இளங்காற்றில்

பசுமையான சோலையில்

பெறுகின்ற சுகத்தைப்போல

தெளிவான எண்ணத்தால்

புதிய உணர்வுகளைப் பெறுகிறான்.

இரசம் பூசிய ஒரு கண்ணாடித் துண்டிலே ஒரு மனிதன் தனது முகத்தின் பிரதிபிம்பத்தைப் பார்க்க முடிவதைப்போல உள்ளத்தில் எண்ணுகின்ற எண்ணத்தை வாக்கு பிரதிபலிக்கிறது.

பிரதிபலிக்கின்ற வாக்கு உள்ளத்தின் நல்லெண்ணத்திலிருந்து வருமானால் நன்மைகளே உருவாகும்.

ஆயிரம் வருடங்கட்கு மேலாக அந்தகாரமே சூழ்ந்திருக்கும் ஒரு அறைக்குள்ளே கொண்டு வரப்பட்ட ஒரு தீபமானது, உடனே அந்தகாரத்தை அகற்றி விடுவதைப்போல, ''ஞானஜோதி'' மனிதனிடம் குடி கொண்டிருக்கும் துர்க்குணங்களை அகற்றி நற்குணங்களுக்கு வித்திடுகிறது.

சிறிய வித்துமுளை விட்டுப் பூத்துக் குலுங்கிக் கனிகளைத் தரும் மரமாவதைப்போல, உருவாகும். நற்குணம் நாளடைவில் நன்மைகள் பெருகிட வகை செய்கிறது.

மூங்கிலை எரித்ததனால் உண்டாகும் தீ இடைவிடாது ஊதப்படாவிட்டால் சீக்கிரத்தில் அணைந்து போகும். இது போலவே உள்ளத்தில் உருவாகும் நல்லெண்ணத்தையும் ஆன்மஞானத்தால் நிலைத்திருக்க இடைவிடாத வைராக்கியம் கொள்ளவேண்டும்.

நெல் பயிரிட வயலில் எரு இட்டு, மாடு கொண்டு பறம்படித்து, நாற்றிட்டு அதை எடுத்து நடவு செய்து, நெற் கதிர் காணுகிறான் உழவன். உழைப்பில் கிடைத்த பலன் கண்டு பூரிக்கின்றான்.

அதுபோல

வைராக்கியம் மிகுந்து இருந்தால் உள்ளம் பண்படுகிறது.

பண்பட்ட உள்ளம் பயன்தரும் காரியங்களைச் செய்கிறது.

அந்த உள்ளத்திலிருந்து பிறக்கின்ற வாக்கு மென்மையாக ஒலிக்கிறது.

மென்மை பிறரைக் கவர்கின்றது. அவனிடத்திலே மதிப்பை உருவாக்குகிறது.

உருவாகும் மதிப்பு மனிதனைத் தெய்வமாக நினைவு கொள்ளச் செய்கிறது.

மனிதன் தெய்வமாகிறான்.

அவன் வடிவிலே தெய்வம் வந்திருக்கிறது என்று சொல்கிறோம்.

உள்ளத்திலே உள்ள எண்ணங்களை பிரதிபலிப்பது வாக்கு.

அந்த வாக்கும், மனமும் தூய்மையானதாக இருந்தால் அவன் ஆண்டவனுக்கு அவனை அறியாமலேயே ஆட்பட்டு விட்டான் என்று பொருள்.

நாமும் மனமும் வாக்கும் தூய்மையுடையதாகச் செய்வோம், அவனுக்கே ஆட்படுவோம்.

ஓம்

அருள்திரு சிவசுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

செங்குந்த கோட்டம்,

40, வாத்தியார் சுப்பராய முதலி தெரு,

சைதாப்பேட்டை :: சென்னை - 600015

தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையைச் சேர்ந்த சைதாப்பேட்டையில், மின் வண்டி நிலையத்திற்கு மேற்கே, சுமார் ½ கிலோ மீட்டர் தூரத்தில், அருள்திரு வள்ளிநாயகி—தெய்வநாயகி உடனுறை அருள்திரு சிவ சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் அமைந்துள்ளது.

இத் திருக்கோயிலில், ஒவ்வோர் ஆண்டும் ஆனி மாதம் அருணகிரிநாத சுவாமிகள் விழாவும், ஐப்பசி மாதம் கந்தர் சஷ்டி விழாவும், மாசி மகத்தினைப் பத்தாம் நாளாகக் கொண்டு பிரம் மோற்சவப் பெருவிழாவும், மிக்க சீரும் சிறப்புமாக நடைபெற்று வருகின்றன.

இத்திருக்கோயிலின் பிரதான வடக்கு வாயிலில் தற்போது புதியதாக எழில் மிக்க இராச கோபுரம் அமைக்கப்பட்டும், பழைய விமானங்கள் புதுப்பிக்கப்பட்டும், சுமார் இரண்டு இலட்ச ரூபாய் அளவில் திருப்பணி வேலைகள், செவ்வனே நடைபெற்று வருகின்றன. மேற்படி வேலைகள் சீரிய முறையில் முடிக்கப்பட்டு இராட்சச ஆண்டு, வைகாசி மாதம், 9-ஆம் தேதி (23—5—75) அன்று, வெள்ளிக்கிழமை காலை 6—7½ மணியளவில் திருக்குடமுழுக்கு விழா நடைபெற இருக்கிறது.

அன்பர்கள் அனைவரும், இந்தப் புனிதத் தெய்வத் திருப்பணியில் பங்கு கொண்டு, தங்கள் தங்களால் இயன்ற வகைகளில் எல்லாம், பெரிய அளவில் உதவிகள் பல புரிந்து, திருக் குடமுழுக்கு விழா சிறப்புற நிறைவு பெறச் செய்து, திருமுருகப் பெருமானின் திருவருளைப் பெற்று உய்யுமாறு, பெரிதும் அன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,

திருப்பணிக் குழுவினர்.

திருக்கோளூர் வைத்தமாநிதி

டாக்டர் ந. சுப்புரெட்டியார் M.A.

இந்த உலகில் ஒருவன் ஒரு பொருளின் மீது பற்று வைத்திருந்து, அப்பற்றும் அளவற்றதுமாக இருந்தால், அப்பற்று அப்பொருளுடன் நின்றுவிடாமல், அதனோடு சம்பந்தம் பெற்ற பொருள்களிலும் பெருகிச் செல்லும் என்பதை நம் அநுபவத்தால் அறியலாம். அங்ஙனமே, பாகவத பக்தி என்பது பகவத் பக்தியின் எல்லை நிலமாக உண்டாகும். இன்னும் தெளிவாகக் கூறினால், பகவத் பக்தியின் உறைப்பையே பாகவத பக்தி வெளிப்படுத்தும் எனலாம். எம்பெருமானுடைய பாதுகைகளில் நாம் ஆதரம் வைத்து அவற்றைக் கண்களில் ஒற்றிக் கொள்வதும், அவற்றைத் தலை மீது அணிந்து கொள்வதும், அவற்றை நீராட்டிய தீர்த்தத்தைப் பருகுவதும் செய்கின்றோமன்றோ? இதற்குக் காரணம் நாம் எம்பெருமானிடம் கொண்டுள்ள அளவற்ற பக்தி அல்லவா?

மயர்வற மதிநலம் அருளப் பெற்ற நம்மாழ்வார் அருளியுள்ள திருவாய்மொழியில்,

> அடியார் அடியார்தம்
> அடியார் அடியார்தமக்கு
> அடியார் அடியார்தம்
> அடியார் அடியோங்களே (1)

என்று பாகவத சேஷத்துவ அதிசயத்தைப் பேசுவது பகவத்சேஷத்தின்(2) உறைப்பையே பேசின படியாகும் என்பது நாம் அறிய வேண்டியது ஒன்றாகும். ஆழ்வாரும் தம்மை,

> நேர்பட்ட நிறைமூ வுலகுக்கும்
> நாயகன்தன் அடிமை
> நேர்பட்ட தொண்டர்தொண்டர் தொண்டர்
> தொண்டன் சடகோபன் (3)

என்று தம்மைச் சொல்லிக் கொண்டிருப்பதும் இதனாலேயன்றோ?

'ஓம் நமோ நாராயணாய' என்னும் திருமந்திரத்தில் அகங்காரமும் மமகாரமும் நீங்கப் பெற்றுப் பகவத் சேஷத்துவம் உள்ளபடி பிரகாசிப்பது 'நமஸ்சிலே' என்று சாத்திரங்கள் பகரும். அந்தப் பகவத் சேஷத்துவத்தின் எல்லை நிலமாகப் பாகவத சேஷத்துவம் இந்த 'நமஸ்சிலே' அநுசந்திக்கப் பெற வேண்டும் என்பதை அவை வற்புறுத்துகின்றன. இந்தப் பாகவத சேஷத்துவம் திருமந்திரத்தினுள் பிரணவத்தின் உள்ளீடான அகாரத்தில் தோன்றும் என்று சிலரும், உகாரத்தில் தோன்றும் என்று சிலரும் சொல்வார்கள். (4) இதனை விளக்குவோம்.

ஒரு பொருள் ஒருவனுக்குச் சொந்தமாக உள்ளதென்று வைத்துக் கொள்வோம். அந்தப் பொருள் அவனுக்கும், அவன் வழி வருவோருக்கும், அநுபவித்தற்கும் விற்றற்கும் பிறருக்குத் தானம் செய்தற்கும் இன்னும் தன் விருப்பத்திற்கேற்பப் பயன்படுத்திக் கொள்ளற்கும் உரித்தாக இருக்கும் போதுதான், அஃது அவனுடைய சொந்த சொத்து எனக் கூறுவதற்கு இடம் தரும். அதைப் போலவே, பகவானுக்கு உடைமைப் பொருளாக இருக்கும் சீவன், அப்பகவானும் அவன் சம்பந்தம் பெற்ற பாகவதரும் அநுபவிக்கவும் தங்கள் இச்சைக்கேற்ப விநியோகம் கொள்ளவும் தகுதியுடையவனாயிருக்கும் நிலையிதோன் சேஷத்துவ பூர்த்தி பெற்றவனாகின்றான். இவ்வாறு பாகவத சேஷத்துவம், பகவத் சேஷத்துவத்தைச் சொல்லும் அகாரத்தில் புணர்ந்து கெட்ட வேற்றுமையில் கிடைக்கும்.

இனி, உகாரத்தில் பாகவத சேஷத்துவம் கிடைக்கும் விதத்தை விளக்குவோம் 'நறுமணம்' என்ற சொற்றொடரை எடுத்துக் கொள்வோம். இதில் 'நறு' 'மணம்' என்ற இரு சொற்கள் உள்ளன. இவற்றுள் மணம் போன்றது சீவனுடைய சேஷத்துவம். அம்மணத்தின் தன்மையான நன்மையைப் போன்றது சேஷத்துவத்தின் அநந்யார்ஹத்துவம்(5). அதைக் குறிப்பதே உ என்னும் பதம். இச்சேஷத்துவத்தைத் தெரிவிப்பது அகாரத்தில் புணர்ந்து கெட்ட வேற்றுமை, அதன் தன்மையான அநந்யார்ஹத்துவத்தைத் தெரிவிப்பது உகாரம். அநந்யார்ஹசேஷத்துவம் என்பது பிறருக்கு உரியனாயிருத்தல் அன்றி, ஈசுவரனுக்கே உரியனாயிருத்தல். இங்குப் பகவத் சம்பந்தம் பெற்ற பாகவதர்களைக் கழித்து, மற்றவர்களைப் பிறர் எனக் கொள்வது பொருத்தமுடைத்து. எனவே, இவ்வாறு பாகவத சேஷத்துவம் வரையிலும் உள்ள பகவத் சேஷத்துவத்தின் அநந்யார்ஹத்துவத்தை உகாரம் தெரிவிப்பதாகத் தோன்றுவதால் இப் பாகவத சேஷத்துவம் உகாரத்தில் கிடைக்கும் பொருள் என்பது சிலரது கருத்தாகும்.

---

1. திருவாய்—3-7 : 10
2. சேஷத்துவம்—அடிமைநிலை. இதன் எதிர்ப்பதம் சேஷித்துவம், அதாவது தலைமை நிலை.
3. திருவாய்—8-9 : 11
4. முமுட்சுப்படி—சூத். 90
5. அநந்யார்ஹத்துவம் — பிறருக்கு உரியனல்லாதிருத்தல். அதாவது ஈசுவரனுக்கே உரித்தாயிருத்தல்.

திருமந்திரத்திற்கு முக்கியமான பொருள் பாகவத்சேஷத்துவமே என்பதைத் திருமங்கையாழ்வார் பாசுரத்தாலும் அறியலாம். ''மற்றெல்லாம் பேசிலும் நின்திருவெட்டெழுத்தும் கற்று உற்றதும் உன்னடியார்க்கு அடிமை''(6) என்ற பாசுரப் பகுதியைக் காண்க. இதனை மேலும் தெளிவுபடுத்துவோம். உலகில் தமக்குத் தொண்டு புரிவதைக் காட்டிலும், தம் குழந்தைகளுக்கு அன்புடன் தொழில் புரியும் போதல்லவா பெற்றோர் மிக்க மகிழ்ச்சியடைகின்றனர். அங்ஙனமே, ஈசுவரனும் தன் அடியார்க்குத் தொண்டுபுரியும் போதுதான் பூரணமான முக மலர்ச்சியை அடைகின்றான். இதனைத் திருமுருக கிருபானந்த வாரியார் கூறும் உவமையைத் துணை கொண்டும் விளக்கலாம். கடிதங்களை நேரே அஞ்சல் நிலையங்களில் சேர்த்தால் வீதிகளில் உள்ள அஞ்சல் பெட்டிக்கு வருவதில்லை. ஆனால் வீதிகளில் உள்ள அஞ்சல் பெட்டிகளில் இடும் கடிதங்கள் அஞ்சல் நிலையத்தை அடையும். அஞ்சல் நிலையம், திருக்கோயில் உள்ள இறைவன். அஞ்சல் பெட்டிகள் அடியார்கள்; பாகவதர்கள். ஆகவே, இறைவனுக்கு அடிமை செய்வதை விடப் பாகவதர்கட்கு அடிமை செய்வது உயர்ந்தது என்பது தெளிவாகின்றதல்லவா?

இந்த எண்ணங்கள் நம் மனத்தில் குமிழியிட்டவண்ணம் ஆழ்வார் திருநகரியிலிருந்து கிழக்கே இரண்டு கல் தொலைவில் உள்ள திருக்கோளூர் என்ற திவ்விய தேசத்திற்குப் புறப்படச் சித்தமாகின்றோம். திருக்கோளூர் நவ திருப்பதிகளுள் ஒன்று. நம்மாழ்வாரின் அந்தரங்க சீடரான மதுரகவியாழ்வார் அவதரித்த திவ்விய தேசம். இது வரலாறு : தீர்த்த யாத்திரை திவ்விய தேச யாத்திரைகளில் திருவுள்ளமுடைய மதுரகவியாழ்வார் பல திருப்பதிகளையும் சேவித்து வடநாட்டுத் திருப்பதிகளைச் சேவித்துக் கொண்டு திருவயோத்தியை அடைந்தார். அந்தப் பரிசுத்த பூமியில் வாசம் செய்யக் கருதிச் சில காலம் அங்கு வாழ்ந்து வரலாயினர்.

அக்காலத்தில் ஒரு நாள் இரவில் அவர் திருக்கோளூர் எம்பெருமானைத் திசை நோக்கித் தொழக் கருதியவர் தென் திசை நோக்கிக் கண் செலுத்தினர். அப்பக்கத்தில் வானுற வளர்ந்து விளங்கும் திவ்வியமான பேரொளியைக் கண்டு வியப்புற்றார். இப் பேரொளி இங்ஙனமே இரண்டு மூன்று நாட்களிலும் தொடர்ந்து காணப்பெற்றது; அச் சுடர்த் திரள் முச்சுடரொளியிலும் மிக்குத் திகழ்ந்தது. அதனை அருகிற் சென்று பார்த்துத் தெளியக் கருதினர் மதுரகவி. அப் பெருஞ் சோதியைக் குறியாகக் கொண்டு அதிவிரைவாக நெடுவழி கடந்து ஆழ்வார் திருநகரியை அடைந்தார். அடைந்தவர் அந் நகரில் அவதரித்தருளியுள்ள யோக நிலையிலிருந்த நம்மாழ்வாரின் திருமேனி விளக்கத்தைச் சேவித்து இதுவே அத் தொலை தூரம் பிரகாசித்த சோதி என்பதை அறிந்து வியந்தார். அவருடைய திருமேனியும் தான் கேள்வியுற்றிருந்தபடியே பிரகிருதி சம்பந்தமற்றிருப்பதையும் கண்ணுற்றார்.

வியப்புடன் நின்ற மதுரகவி, அத் திருமேனிக்குக் கட்புலன் உண்டோ என்று சோதிக்கும் பொருட்டு அத் திருமேனியின் முன்னிலையில் ஒரு சிறு கல்லை எடுத்துப் போட்டார். கல் விழுந்த ஒலியைக் கேட்ட நம்மாழ்வார் தன் திருக்கண்களை விழித்துப் பார்த்தருளினர். உடனே மதுரகவிகள் வாய்ப்புலனும் உண்டோ என்று எண்ணி,

''செற்றதின் வயிற்றிலே சிறியது பிறந்தால்
எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?'

(செற்றது—அசேதமான உடல்; சிறியது — அணுவளவான சீவான்மா)

என்று விண்ணப்பித்தார். நம்மாழ்வாரும்,

'அத்தைத் தின்று அங்கே கிடக்கும்'

(அத்தை—உடலைச் சார்ந்த சுகதுக்கங்களை ; தின்று—அநுபவித்துக்கொண்டு ; அங்கே—அந்த உடலிலேயே)

என்று விடையருளிச் செய்தார். அது கேட்டு மதுரகவிகள் மிக மகிழ்ந்து, நம்மாழ்வாரின் ஞானத்தைக் கொண்டாடி இவரை யடைந்து தான் கடைத் தேறக் கருதி இவர் திருவடிகளில் தாளும் தடக்கையும் கூப்பி விழுந்து தண்டனிட்டு அவரையே ஞான குருவாகக் கொண்டார்.

அது முதல், மதுரகவிகள் தான் ஆழ்வாரிடம் உபதேசம் பெற்ற திவ்வியப் பிரபந்தங்களைக் கைத்தாளமெடுத்துப் பண்ணிசையோடு பாராயணம் செய்து கொண்டு திருக்குருகூர் நம்பிக்கு முதல் சீடராய், பரதாழ்வானுக்குப் பணிவிடை புரிந்தொழுகிய சத்துருக்காழ்வானைப்போல், பகவத் பக்தியைவிடப் பாகவத பக்தியையே சிறப்பாக அநுட்டித்துக் கொண்டு வாழ்வாராயினர். அப்பொழுது ஆழ்வார் விஷயமாகக் ''கண்ணிநுண் சிறுத்தாம்பு'' என்ற திவ்வியப் பிரபந்தத்தையும் பாடியருளினர்.

தேவுமற்று அறியேன் குருகூர் நம்பி
பாவின் இன்னிசை பாடித் திரிவேனே (7)

என்ற பாசுரப் பகுதியினால், மதுரகவிகளின் வாழ்க்கையை ஒருவாறு அறியலாம். பரம பாகவதரான ஆழ்வாரையே அன்னையாயும் அத்தனும் தெய்வமாயும் கருதிக் கைங்கரியம் புரிந்து வந்த மதுரகவிகளின் பிரபந்தம் வைணவர்களால் 'நமப்பதத்தின்' பொருளைக் காட்டுகிறதாகப் போற்றப்படுகின்றது.

இங்ஙனம் மதுரகவிகளைப் பற்றிச் சிந்தித்த வண்ணம் நெல்லை எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் உதவிய வேனின் (Van) துணையால் 'நல் வளஞ்சேர் பழனத் திருக்கோளூரை

---

6. பெரிய திருமொழி—8-10 : 3

7. கண்ணிநுண்—2

நோக்கி வருகின்றோம். வருங்கால் இத் திவ்விய தேசம் பற்றிய நம்மாழ்வாரின் திருவாய்மொழியும்(8), நம் மனத்தில் குமிழியிடத் தொடங்குகின்றது. இத் திருவாய்மொழி தாய்ப்பாசுரமாக அமைந்துள்ளது. திருக்கோளூர் சென்று அவ்விடத்து எம்பெருமானுடன் கலந்து அனுபவிக்க வேண்டும் என்ற ஆழ்வாரின் விருப்பம் இத் திருவாய்மொழியாகப் பரிணமித்துள்ளது.

பராங்குச நாயகியின் படுக்கையில் அவளுடன் படுத்துக் கொண்டு அவள் விரகதாபத்துக்கு உபசாரங்கள் பண்ணிக் கொண்டிருந்த திருத்தாயார், படுக்கையைத் தடவிப் பார்க்கிற போது, தன் மகள் காணப் பெற்றிலள். தன் மகளுக்குத் திருக்கோளூர் எம்பெருமானிடத்திலிருந்த கழிபெருங் காதலினை (வியாமோஹம்) நன்கு அறிந்தவளாதலின் அப் பதிக்கே தன் மகள் சென்றிருத்தல் வேண்டுமென்று அறுதியிட்டுரைப்பதாகச் செல்கின்றது இத் திருவாய்மொழி. தனியே சென்ற தன் மகளின் போக்கை நினைந்து கவல்கின்றாள் திருத்தாயார்.

பெரிய திருமொழியில் வயலாலிமணவாளன் பரகால நாயகியின் கையைப் பிடித்துக் கொண்டு போகிற நிலையைக் கண்டு திருத்தாயார் பேசுகின்றதாக உள்ள ''கள்வன்கொல் யானறியேன்'' (9) என்ற திருமொழி இத் திருவாய்மொழியுடன் ஒரு புடை ஒத்திருப்பதை எண்ணுகின்றோம். அகப்பொருள் நூலார் இதனை 'உடன்போக்கு' என்று வழங்குவதையும் சிந்திக்கின்றோம்.

ஆளவந்தார் கோஷ்டியிலே நிகழ்ந்த ஓர் இதிகாசமும் நம் நினைவிற்கு வருகின்றது. 'உண்ணுஞ் சோற்றிற்' பிராட்டிக்கு அஞ்ச வேண்டுவது அதிகமோ, 'கள்வன் கொல்விற்' பிராட்டிக்கு அஞ்ச வேண்டுவது அதிகமோ என்ற ஆராய்ச்சி நிகழ்ந்ததாம். அவண் குழுமியிருந்த முதலிகள் '' 'கள்வன் கொல்லில்' இருவராய்ப் போனமை சொல்லுகிறது; 'உண்ணுஞ் சோற்றில்' மகள் தனியே போனமை சொல்லுகிறது. இருவராய்ப் போனவர்களுக்கு வயிறு எரிய வேண்டுவது அத்தனை அவசியமன்றே; தனியே வழி போனவர்களுக்கன்றோ அதிகம் வயிறெரிய வேண்டுவது'' என்றார்களாம். அப்பொழுது ஆளவந்தார், ''அங்ஙனன்று காண்மின். தனியே போனவளைப் பற்றி ஒரு பயமில்லை; இருவராய்ப் போனவிடத்திற்குத்தான் வயிறெரிய வேணும்'' என்று அருளிச் செய்தாராம். இதன் கருத்தை விளக்குவோம். தனியே போனவள் தான் கருதிச் செல்லும் இடத்திற்கு யாதொரு இடையூறும் இன்றிச் சென்று சேர்ந்திடுவள். இருவரும் செல்லுங்கால் ஒருவரோடொருவர் கொண்டுள்ள காதலுக்கு ஊற்றுவாயாகையாலே ஒருவரால் ஒருவர் மயங்கிவிழுந்து 'என்னாகுமோ! என்னாகுமோ!' என்று வயிறெரிய வேண்டியிருக்கும் என்பதாம்.

இத் திருவாய்மொழியின் இன்சுவை மிக்க ஈட்டின் உரை : ''ஆனாலும் எங்கேனும் போகிலும் இருவராயல்லதிராது அங்கு; தனியே போன இவள் என்படுகிறாளோ என்று மிகவும் நொந்து கூப்பிடுகின்றாள் இவளுடைய திருத்தாயார்.'' இது சுவைத்து மகிழத்தக்கது.

திருத்தாயார் இவ்வாறு பேசுகின்றாள் :

உண்ணும் சோறு பருகும்நீர்
தின்னும்வெற் றிலையுமெல்லாம்
கண்ணன் எம்பெருமான் என்றென்
றேகண்கள் நீர்மல்கி
மண்ணினுள் அவன்சீர் வளமிக்
கவன்ஊர் வினவித்
திண்ணம் என்இள மான்புகும்
ஊர்திருக் கோளூரே (10)

[வினவி—விசாரித்து ; புகும் ஊர்—சேர்ந்த இடம்]

முன்னிரண்டடிகளில் ஆழ்வாருடைய உண்மையான தன்மை கூறப்படுகின்றது. சோறு, நீர், வெற்றிலை இவற்றின் அடைமொழிகளின் நயம் உய்த்துணரத் தக்கது. வயிறு நிறைய உண்டவனுக்கு அறுசுவை உண்டி கிடைப்பினும் அஃது உண்ணும் சோறாகாது; கங்கைக் கரையில் திரிபவனுக்குக் கிணற்று நீர் பருகு நீராகாது; ஆகவே, பெரும் பசியனுக்குக் கிடைத்த சோறு தான் உண்ணும் சோறு; பெருவிடாயனுக்குக் கிடைத்த நீர்தான் பருகு நீர் என்று கொள்ள வேண்டும். பெரும்பசியனுக்குச் சோற்றிலும் விடாய்த்தவனுக்கு நீரிலும் எப்படிப்பட்ட அவா இருக்குமோ அப்படிப்பட்ட அவா ஆழ்வாருக்குப் பகவத் விஷயத்தில் இருந்தது என்பது கருத்து.

தனக்கு 'எல்லாம் கண்ணன்' என்று பலகால் சொல்லிக் கொண்டு நீர்மல்கு கண்ணினராயிருப்பதே ஆழ்வாருடைய இயல்பாகும். இப்படிப்பட்ட பராங்குச நாயகி ''அப் பெருமானுடைய திருக்குணங்களும் திவ்வியமான ஐசுவரியமும் மிக்கு விளங்கும் திருக்கோளூர் எங்கு உளது? எவ்வளவு தூரம் நடக்க வேண்டும்?'' என்று வினவிக் கொண்டே திருக்கோளூர்க்கே சென்று சேர்ந்திருப்பாள். ''வேறு எங்கும் போவதற்குக் காரணம் இல்லை. இது திண்ணம்'' என்கின்றாள் திருத்தாயார்.

'புகுமூர்' என்றவிடத்து ஈடு : ''காட்டுத் தீயிலே அகப்பட்டவன் பொய்கையும் பொழிலும் தேடிப் புகுமாப்போலே சம்சாரமாகிய பாலைநிலத்தில் காட்டுத் தீயிலே அகப்பட்டவனுக்கு உகந்தருளின நிலங்களானவை பொய்கையும் பொழிலும் போலேயிறே. 'புகுமூர்' என்கையாலே புக்கார் போகுமூர் அன்றென்கை''. இன்சுவை மிக்க இதனை எண்ணி எண்ணி மகிழ்க. எம்பெருமானார் திவ்விய தேச யாத்திரையாக எழுந்தருளுகையில் திருக்கோளூரை நோக்கிச் செல்லுங்கால் அப்போது அவ்வூரினின்றும் வெளியேறுகின்றாளொரு அம்மையாரைக் கண்டார். அவரைப் பார்த்து 'எங்கு நின்றும்

8. திருவாய்மொழி—6-7 : 1
9. பெரிய திருமொழி—3-7 : 3
10. திருவாய்—7-7 : 1

புறப்பட்டபடி?' என்று வினவ, அந்த அம்மையார் 'திருக்கோளூரில் நின்றும்' என்று பதிலுரைத்தார். அது கேட்டு யதிராசர் 'அவ்வூரில் புக்க பெண்களும் வெளியே போகக் கடவராயிருப்பார்களோ?' என்ருராம். 'புகுமூர்' என்ற சொல்லின் சுவடறிந்து அருளிச் செய்த ஆசாரியரின் வினவின் உட்பொருளைச் சிந்தித்து மகிழ்க.

அடுத்து, பராங்குச நாயகியின் விளையாடு கருவியாக அமைந்த பூவைகளை நோக்கி, ''என் பக்கலில் என் மகள் நசையற்று ஒழிந்தாளாகிலும் உங்களை நினைத்தாவது இங்கு மீண்டு வரக் கூடுமோ? சொல்லுங்கள்'' என்கின்ருள் திருத்தாயார். ''இங்கிருந்தபோது தன்னைப் போலவே தன்னைச் சேர்ந்த எல்லோரையும் எம்பெருமானுடைய திருநாமங்களையும் சின்னங்களையும் இடையருது சொல்லிக்கொண்டிருக்கும்படி செய்தவளல்லவா என் மகள்? இங்கே ஆட்கள் இலர் என்ற குறையால் அங்குப் போனுளா?'' என்கின்ருள். (11)

மேலும் பேசுகின்ருள் : ''பூவைகள், பைங்கிளிகள், சிறு சோறு சமைக்கும் பானைகள், பூவிடும் குடலைகள் முதலானவற்றைக் கண்டால் விளையாடும் இன்பம் (மகிழ்ச்சி) பெற வேண்டிய பருவத்திலும் எம்பெருமான் திருநாமத்தையே சொல்லிப் பெறுகின்றவள் அல்லவா என் மகள்?'' என்கின்ருள். ''அங்ஙனம் போன பின்பு இனிச் செய்யலாவதொன்றில்லை. போன இடத்திலாவது நன்ருக இருக்க வேண்டுமே. ஒரு பேச்சுப் பேச வாய் எடுத்தாலும், வாய்விட்டுப் பேச முடியாதபடி உதடு நெளிக்குமே. கண்ணீர் வெள்ளமிட்டுப் பெருகுமே. இப்படி என்ன பாடுபடுகின்ருளோ?'' என்று தடுமாற்றம் அடைகின்ருள் (12)

தன் மகள் பிரிந்து சென்ற செய்தியறிந்த வம்பளக்கும் இயல்புடைய ஊர்ப் பெண்கள் உகப்பார்களோ? அன்றி வெறுப்பார்களோ? என்று ஐயுறும் திருத்தாயார்(13) ''தன் வயதுக்குரிய விளையாட்டிலும் பொருந்தாத என் மகள் எம்பெருமானுடைய ஊரில் சோலைகளையும் தடாகங்களையும் அவனுடைய திருக்கோயிலையும் கண்டு தன் நெஞ்சம் குளிரும்படி எங்ஙனம் களித்திருக்கின்ருளோ? அறிகிலேன்'' என்று தளர்கின்ருள். (14)

தன் மகள் நிலையைக் குறித்துத் திருத்தாயார் இங்ஙனம் ஊகிக்கின்ருள் : ''துணையின்றி வருந்திச் சென்றவள் தன்னைச் சிறப்பாகக் கவர்ந்த எம்பெருமானின் திருக்கண்களை முந்துற முன்னம் நோக்குவள். அர்ச்சாவதார சமாதியையும் கடந்து விம்மி வெளி விழுகின்ற, தெளிவாகாத, இனிய புன்முறுவல் பொங்கு மிடமான செவ்வாயைப் பிறகு காண்பள். இந்த இரண்டு திவ்விய அவயவங்களையும் கண்டவள் பெரு வெள்ளத்தில் இளகின கரைபோலே உடைகுலைப்பட்டு நைந்து கொண்டிருப்பள்.'' (15) ''நீர் நிரம்பிய கண்களையும் கழிபெருங் காதலை உடைய நெஞ்சையும் உடைய என் மகள் அல்லும் பகலும் 'நெடுமாலே'! என்று கூவிக் கொண்டிருந்தாள். இப்போது ஒடுங்கி யொடுங்கி அசைந்து நடந்து தளர்ந்த நிலையில் அத் திருக்கோளூர்க்கு எப்படிப் போய்ச் சேர்ந்திருப்பாளோ?'' என மனங் கவல்கின்ருள்.(16)

தன் மகள் வழியில் நடந்து செல்லும் நிலையை, அவள் மேனியின் மெலிவை, ஈர நெஞ்சினை, கண்ணநீர் பெருகும் காட்சியை அநுசந்திக்கும் திருத்தாயின் வாக்கு இது :

''ஒசிந்த நுண்ணிடை மேல்கையை
வைத்து நொந்துநொந்து
கசிந்த நெஞ்சின ளாய்க்கண்ண
நீர்துளும்பச் செல்லுங்கொல்?''

[ஒசிந்த—துவண்ட; நொந்து—நோவு பெற்று; கசிந்த—ஈரமான; துளும்ப—பெருகும்படி.]

வழி நடக்கும்போது சிறிதும் சிரமமின்றி நடந்து செல்பவர்கள் கையை வீசிக்கொண்டு போவர்; சிரமத்தில் இளைத்துச் செல்பவர்கள் இடுப்பின் மீது கையை ஊன்ற வைத்துக் கொண்டு சிரமம் தெளிவாகப் புலனாகும்படி செல்வர். உலகிற் காணும் இந்த இயல்பினை எண்ணுகின்ருள் திருத்தாயார். ''திருக்கோளூர் எம்பெருமான் மீது கழிபெருங் காதல் கொண்டவள் ஊராரின் பழிமொழிகட்கும் அஞ்சாமல் எம்மையும் ஒரு பொருளாக மதியாமல் சென்றனளே''(18) என்கின்ருள். இங்ஙனமெல்லாம் தன்னருகில் உள்ளாரைப் பார்த்துச் சொல்லி அலமந்த திருத்தாயார் இறுதியாக ஆகாயத்தை நோக்கி, ''அந்தோ! திருக்கோளூர்க்குப் போனவள் எம்பெருமானைச் சேவித்துத் திரும்பலாகாதோ? அவ்விடத்திலேயே மண்டிவிட்டாளே! அவன் உறையும் செந்தாமரைக் கண்ணனை ஒரு கண நேரமும் விட்டுப் பிரியாத நிலையிலுள்ளாளே! இக்குடிக்கு வரும் பெரும் பழியையும் நினையாமல் கிடக்கின்ருளே!'' என்கின்ருள்.(19)

இங்ஙனம் இத் திவ்விய தேசம் பற்றிய திருவாய் மொழியில் ஆழங்கால்பட்ட வண்ணம் திருக்கோயிலை அடைகின்ருேம். கிடந்த திருக்கோலத்தில் புயங்கசயனம் கொண்டு கிழக்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன் சேவை சாதிக்கும் வைத்தமா நிதியையும் கோளூர்வல்லி நாச்சியாரையும் வணங்குகின்ருேம். திருவாய் மொழி முழுவதையும் சந்நிதியில் மிடற்ருெலியாக ஓதி உளங்கரைகின்ருேம். இத் திருவாய் மொழியை,

---

11. திருவாய்—6-7 : 2
12. திருவாய்—6-7 : 3
13. திருவாய்—6-7- : 4
14. திருவாய்—6-7- : 5
15. திருவாய்—6-7 : 6
16. திருவாய்—6-7 : 7
17. திருவாய்—6-7 : 8
18. திருவாய்—6-7 : 9
19. திருவாய்—6-7 : 10

'சித்தம் வைத்து ரைப்பார்
திகழ்பொன் னுலகாள்வரே' 20

[பொன்உலகு—பரமபதம்].

என்ற பலனையும் சிந்திக்கின்றோம். இந்நிலையில் திவ்விய கவியின் பாசுரமும் நம் நினைவிற்கு வருகின்றது.

'பிறப்புஅற்று மூப்புப்
பிணியற்று நாளும்
இறப்புஅற்று வாழ
இருப்பீர்—புறப்பற்றுத்
தள்ளுங்கோள் ஊர்அரவில்
தாமோ தரன்பள்ளி
கொள்ளுங்கோ ளூர்மருவுங்
கோள்'21

[அற்று—ஒழிந்து; மூப்பு—கிழத்தனம்; பிணி—நோய்; அரவு—பாம்பு; தாமோதரன்—திருமால்; மருவுங்கோள்—சென்று சேருங்கள்.]

என்ற பாசுரத்தையும் ஓதுகின்றோம்.

இத் தலத்து எம்பெருமானின் குணம் பற்றிய ஆசாரிய இருதய சூத்திரத்தையும் எண்ணுகின்றோம்.

''கைம்முதல் இழந்தார் உண்ணும்
நிதியின் ஆபத்சகத்வம், புகும்ஊரிலே
சம்ருத்தம்''22

[ஆபத்சகத்வம்—ஆபத்துக்குதவுதலாகிற பெருங் குணம்; சம்ருத்தம்—நிறைவு.]

திருக்கோளூர் இறைவனுக்கு வைத்தமாநிதி என்பது திருப்பெயராதலாலும், நிதி ஆபத்துக் குதவுமாதலாலும், மேல் திருப்பதிகத்தால் (6.6) இழந்தமை கூறி (23) 'உண்ணும் சோறு' என்று இத்திருப்பதிகம் தொடங்குவதனாலும் இத் திவ்விய தேசத்தில் ஆபத்சகத்வம் (ஆபத்துக்குதவுதலாகிற பெருங் குணம்) விளங்கும் என்கிறார். கைம்முதல் இல்லாதவர்கள் எடுத்து உண்ணும் தகையதாக இருப்பது நிதி ஆகையால் இந்த வைத்தமாநிதியும், மேல்திருப்பதிகத்தில் 'ஏலக்குழலி இழந்தது சங்கே' (6-6 : 1) என்று தொடங்கி ''கற்புடையாட்டி இழந்தது கட்டே'' (6-6- : 10) என்று முடிக்கையாலே போலி உபாய உபேயங்கள் எல்லாம் தன்னடையே விட்டுக் கழிந்தமை பெறப்படும். இத்திருப்பதிகத்தில் தொடங்கும் முதல் திருப்பாசுரம் 'உண்ணும் சோறு' என்பதாகையாலே 'உண்ணும் நிதி' என்கிறார். 'இளமான் புகுமூர் திருக்கோளூரே' (6-7 : 1) என்ற திருப்பாசுரத்தைத் திருவுள்ளம் பற்றிப் 'புகுமூர்' என்கிறார். 'செல்வம் மல்கியவன் கிடந்த திருக்கோளூர்' (6-7 : 4) என்ற திருப்பாசுரப் பகுதியைத் திருவுள்ளம் பற்றி 'சம்ருத்தம்' என்கின்றார்.

இங்ஙனம் ஆழங்கால்பட்ட நிலையில் திருக்கோயிலின் உட்புறம் திருவாயிலின் அருகில் அமர்ந்து எம்பெருமான் திருப்பெயரையும் திவ்விய தேசத்துத் திருப்பெயரையும் பற்றிய சிந்தனையில் ஆழ்கின்றோம். புதைத்து வைக்கப் பெறும் பொருள் 'நிதி' எனப்படும். தைத்ரீய உபநிடதத்தினுல் எம்பெருமான் நிதியாக அறியப்படுவன். நிலத்தினுள் புதைத்துவைத்து ஆளவேண்டியதாயிருக்கும் நாட்டிலுள்ள நிதி; எம்பெருமானுகின்ற நிதி அங்ஙனமின்றி நெஞ்சிலே புதைத்து ஆளத்தக்கது என்ற வேற்றுமை கண்டு மகிழத்தக்கது.

நிதியானது தன்னை யுடையவர்களை இரவும் பகலும் கண்ணுறங்க வொட்டாது; எந்த நேரத்தில் யார் கொள்ளை கொள்வரோ என்ற அச்சத்தால் துஞ்சாதிருப்பர் நிதியுடையார். எம்பெருமானும் அப்படியே; 'கண்ணாரக் கண்டு, கழிவதோர் காதல் உற்றார்க்கும் உண்டோ கண்கள் துஞ்சுதலே.'(24) காண்பதற்கு முன்பும் உறக்கம் இல்லை; கண்டாலும் காதல் மிகுதியால் உறங்குவதில்லை. நிதியானது 'சித்தாஞ்சனம்' அணிந்த சில பாக்கியசாலிகட்கே கிடைக்கும்; எம்பெருமானும் 'பக்தி சித்தாஞ்சனம்' பெற்ற ஆழ்வார்கள் போன்ற சில பாக்கியவான்களுக்கே கிடைப்பன்.

நிதியுடையவன் மார்பு நெறிப்பன்; எம்பெருமானைக் கைக்கொண்டவர்களும் 'எனக்கு ஆரும் நிகரில்லையே',(25)'மாறுளதோ இம் மண்ணின் மிசையே',(26) 'இல்லையெனக் கெதிரே' (27)என்றுசெருக்கிப் பேசுவார்கள். நிதி படைத்தவனை உலகமெல்லாம் போற்றிப் புகழும். எம்பெருமானைக் கைக் கொண்டவர்களையும் அறிஞர் புகழ்வர்.

நிதியை இழந்தவன் கதறிக் கதறியழுவன்; எம்பெருமானை இழந்தவனும் அப்படியே. சீராமனுகிய வைத்தமாநிதியை இழந்த பரதாழ்வான் சபையில் கதறி அழுதானன்றோ? 'பழுதே பலபகலும் போயின என்று அஞ்சி, அழுதேன்', (28)'இன்பத்தை இழந்த பாவியேன் எனதாவி நில்லாதே'(29), 'எழில்கொள் நின் திருக்கண்ணினை நோக்கந் தன்னையும் இழந்தேன் இழந்தேனே'(30), 'உன்னைக் காண்பான் நான் அலப்பு ஆய் ஆகாயத்தை நோக்கி யழுவன்'(31), 'என் சொல்லிப் புலம்புவனே' (32) என்றெல்லாம் கதறியழுவார்கள். எம்பெருமானுடைய சிந்தனையை இழந்து ஒரு கணப்பொழுது கழியப் பெற்றாலும் கள்வர் எல்லாச் சொத்துக்களையும் கொள்ளை கொண்டால் எப்படி கதறி அழக் கூடுமோ அப்படிக் கதறி அழ வேண்டும் என்பர் அறிவுடையோர்.

இங்ஙனம் எம்பெருமான் திருப்பெயரில் ஆழங்கால்பட்ட நம் மனம் ஊர்ப் பெயரை எண்ணுகின்றது. நவநிதிகள் இங்கு ஒளித்துக் கொண்டுள்ளன என்று, அதருமம் குபேரனுக்குக் கோள் சொல்லிய இடமாதல் பற்றி இத்திருத் தலம் 'திருக்கோளூர்' என்ற திருப்பெயரால் வழங்குகின்றது என்ற புராண வரலாற்றையும் அறிகின்றோம்.

**

20. திருவாய்—7-7 : 11
21. நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி—58
22. ஆசாரிய இருதயம்—169
23. இழந்தது சங்கே—(6-6 : 1) இத்யாதி
24. திருவிருத்தம்—47
25. திருவாய்—
26. திருவாய்—
27. திருவாய்—
28. முதல் திருவ்ய்—16
29.
30.
31. திருவாய்—5-8 : 4
32. திருவிருத்தம்—86

கவின்மிகு காஞ்சிநகர்

புலவர் நடேச நாராயணன்

தெய்வக் காமாட்சி திகழும் பிரமர்தம்
சிந்தை வாழ்த்தும் நகராம்
மெய்ம்மைச் சோழர்களும், விசயர், பல்லவரும்
மேன்மை செய்த நகராம்
சைவ வைணவரும் சமண பௌத்தர்களும்
சார்ந்து காத்த நகராம்
உய்யும் ஆமைமுதல் உள்ள உயிர்கள்பல
உயர்ந்த காஞ்சி நகராம்

சிவகாஞ்சி விஷ்ணுகாஞ்சி ஜைனகாஞ்சி ஒன்ருய்ச்
சேர்ந்திருக்கும் அதிசயந்தான் காஞ்சியிலே யன்ருே?
சிவவிஷ்ணு ஆலயங்கள் ஜைன பௌத்தக் கோயில்
திகழ்ந்தொருங்கே இருப்பதுவும் காஞ்சியிலே அன்ருே?
பவமொழிய முப்பத்தோ டிரண்டறங்கள் நாளும்
பயன்மிகவே நடந்ததுவும் காஞ்சியிலே அன்ருே?
தவமுடைய கொள்கைகளைச் சாற்றிடுவோ ரெல்லாம்
சார்ந்தொருங்கே வாழ்வதுவும் காஞ்சியிலே அன்ருே ?

கோட்டங்கள் நாட்டினிலே பலவிருந்த போதும்
குறைபோக்கும் கோட்டங்கள் நான்கேதான் உண்டு!
வாட்டத்தை நீக்குகின்ற எழில்வரத ராசர்
வளர்'புண்யக் கோட்ட'மொடு, நம்குமரக் கோட்டம்,
வீட்டுப்பே றளிக்கின்ற நற்காமக் கோட்டம்,
வினை நீக்கும் ஏகம்பர் வாழ்ருத்ர கோட்டம்,
நாட்டவர்கள் வந்துதொழும் இந்நான்கும் ஒன்ருய்
நற்புகழோ டிலங்குவது காஞ்சியிலே அன்ருே?

வரதராசர், உலகளந்தார், யதோக்த காரி,
வைகுண்டர், அஷ்டபுஜர், ஒளிவி ளக்கர்,
அறம் வளர்க்கும் காமாட்சி, சித்ர குப்தர்,
அருள்மிக்க கைலாசர், கச்சபேசர்,
திறம் வளர்க்கும் ஏகம்பர், குமரக் கோட்டர்
சேர்ந்தொருங்கே காஞ்சியிலே வீற்றிருந்து,
வரமளிக்கும் நலங்கண்டோம்; அதனுல் யாரும்
வந்துவந்து பயன் பெற்றுவாழ்வா ராக!

தெய்வத்துச் சைவர்கள்தாம் சிறப்பெய்த வேண்டின்
சென்றிடுவார் விருப்பமுடன் கைலாயம் நோக்கி;
மெய்வைத்த வைணவரோ சிறப்பெய்த வேண்டின்
மிகவிரும்பிச் சென்றிடுவார் வைகுண்டம் நோக்கி;
பொய்வைத்தோர் இவ்விரண்டும் இருதுருவம் என்பார்;
புன்மையுரை நம்பாதீர்; இவை இணைந்தே நந்தம்
உய்விக்கும் காஞ்சியினில் உள்ளனவே யன்ருே?
உலகத்தீர் பதமிரண்டும் ஒருங்கெய்த வம்மின்.

புத்திதரும் காஞ்சி; நல்ல முத்திதரும் காஞ்சி;
புகழ்ஆழ்வார் நாயன்மார் போற்றியநற் காஞ்சி;
பத்திதரும் காஞ்சி; எழிற் சக்திதரும் காஞ்சி;
பாவலர்கள் புகழ்ந்தேத்தும் பார்புகழும் காஞ்சி;
சித்திதரும் காஞ்சி; உயர் உத்திதரும் காஞ்சி;
திகழ்ந்திட்ட முடிமன்னர் சீர்செய்த காஞ்சி
தத்திவரும் கடலலையை ஒத்திருக்கும் வாழ்வில்,
சஞ்சலங்கள் சேராமல் அஞ்சலெனும் காஞ்சி!

உலகுபுகழ் சங்கரரின் உயர்மடமும்; நாளும்
ஒளிர்ஞானப் பிரகாசர் தம்மடமும், ஓங்கி
இலகுபிற பலமடமும், இணையில்புகழ் அண்ணு
இனிதுதித்து வாழ்ந்திருந்த இல்லமும்உண்டு இங்கே;
அலகில்சீர் காஞ்சிநகர் மக்களெல்லாம், அதனுல்
அறிவாற்றல் பண்பொழுக்கம் அமைந்துவிளங் கிடுவர்!
திலகமென நாட்டுக்கே சிறந்துதிகழ்ந் தோங்கும்
சிறப்பான நம் காஞ்சிக்(கு) ஈடுண்டோ சொல்வீர்!

தடமாடும் நெஞ்சுக்குத் தக்கவுணர்(வு) ஊட்டும்
தனிச்சமயப் பலமடங்கள் சார்ந்திருக்கும் இங்கே,
நடமாடும் கோயிற்கும் நற்றெண்டே செய்யும்
நாரணசே வாச்சிரமம் நனி விளங்கி, நாளும்
உடல்நோயர் அனைவர்க்கும் உகந்தமருந்(து) ஈந்தே
உற்றபிணி தனைப்போக்கும் உண்மையையும் காண்பீர் :
உடம்புக்கும் உளத்துக்கும் ஒருங்கேநற் பயன்கள்
ஒப்பில்லாக் காஞ்சியிலே எப்போதும் பெறலாம் !

தருமவேத ஞானயோக இட்டசித்தி ஈசர்கள்
சார்ந்திருக்க விளங்குகின்ற கச்ச பேசர்ஆலயம்,
சிறுமையான ஆமைதானும் தேவன்பாதம் ஏத்திடில்,
செம்மைபெற்று வாழும்என்னும் உண்மைதன்னைச் செப்புமால்;
ஒருமையோடிவ் ஆமைபோல ஐந்தடக்கி ஈசனை
ஊக்கமோடு வந்துநாளும் உண்மையோடு தொழுதிடில்
பெருமையாவும் நல்குகின்ற பஞ்சசித்தி மேவுமே;
பீடுமிக்க அறமும் பொருளும் இன்பும்வீடும் வாய்க்குமே!

பொய்யாமை கள்ளாமை புறங்கூறுமை
பொங்காமை குடியாமை பொச்சா வாமை
தொய்யாமை கொல்லாமை அழுக்காறுமை
தொலையாமை வேண்டுமெனின், கச்ச பத்து
மெய்ஆமை தன்னைப்போல் ஈசன் தாளை
விரும்பிமிக உறுதியுடன் தொழவே வேண்டும்!
ஐயா!மெய் நான்சொன்ன சொற்கள் எல்லாம்!
அறிஞர் அண்ணு பிறந்தநகர் காஞ்சி யன்றே?

சீவர்களின் செய்கைகளில் நன்மை தீமை
தெரிந்(து) உண்மைக் கணக்குகளை நாளும்தீட்டிப்
பாவமெனப் புண்யமெனப் பகுத்(து) அவர்க்குப்
பாழ்நரகம் சொர்க்கமெனப் பரிந்த ளிக்கும்
சேவைசெயும் சித்ரகுப்த தெய்வந் தன்னைத்
திகழ்காஞ்சி நகரிலன்றிக் கண்ட துண்டோ?
ஆவலினுல் நற்செய்கை நாளும் செய்தே,
அக்கணக்கில் புண்ணியத்தை வரவு வைப்பீர்!

அருள்அமுத சுரபியினுல் மேகலைதான் இங்கே
அன்னதான அறமொன்றே அகமுவந்து செய்தாள் ;
இருள்கடியும் காமாட்சி அன்னையவள் தானே
இருபதினு றறங்களினை இனிமையுடன் செய்தாள் ;
பொருளுடையார் எல்லாரும் நல்லறங்கள் செய்யப்
புகழ்மிக்க வழிகாட்டி நம்காஞ்சி யன்றே?
உருள்கின்ற பொருளீந்தே உருளாமல் நிற்கும்
உயர்புண்யந் தனைச்சேர்ப்பீர் காஞ்சிநகர் உற்றே !

திருக்கோயில்களும் மகளிரிட்ட திருவிளக்குகளும்

செந்தில்செல்வக்குமரன். M.A.,

கோயிற் கல்வெட்டுகளில் மிகுதியானவை, கோயிலுக்காகக் கொடுக்கப்பட்ட நிலதானம் பற்றியும், ஒளி மயமாக வீற்றிருக்கும் இறைவனின் கோயிலுக்கு ஒளிதரும் விளக்கு எரிப்பதற்காக வைத்த தானம் பற்றியும் பேசுகின்றன. சில கல்வெட்டுகள் நில விற்பனை பற்றியும் கூறுகின்றன. தானங்களுள் பல, ஆண்களாலேயே வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும் பெண்கள் தனித்து நின்று தானம் வழங்குவதற்கான உரிமைகள் மறுக்கப்படவில்லை என்பதனை, இவர்கள் கொடுத்த கொடையினைப் பற்றிக் கூறும் கல்வெட்டுகள் தெளிவுறுத்தி நிற்கின்றன. தங்கள் வாழ்வினை ஒளி மயமாகச் செய்த இறைவனுக்கு ஒளியிட, மகளிர் விளக்குகள் எரிப்பதற்குத் தானம் கொடுத்து மகிழ்ந்தனர். மகளிர் விளக்குகளுக்கு அளித்த அத்தகைய கொடைகளைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பல்வகை விளக்குகள்

வைக்கப்படும் இடத்திற்கும், அமைப்பிற்கும், காலத்திற்கும் ஏற்ப விளக்குகள் பலவகையாகப் பிரித்துப் பெயரிடப்பட்டன. கல்வெட்டுகள் பல வகையான விளக்குகளைக் குறிப்பிடுகின்றன. நிலை விளக்கு, தாரா விளக்கு, தாராக் குத்துவிளக்கு, சந்தி விளக்கு, நொந்தா விளக்கு, வாயில் திருவிளக்கு, வெள்ளி விளக்கு, செப்பு விளக்கு, ஈழநிலை விளக்கு, திருவிளக்கு, ஈழச் சியல் விளக்கு, தூங்கு விளக்கு, மலையான் சியல் விளக்கு, சோழியச்சியல் விளக்கு, அனந்தலை விளக்கு, ஆர்குட விளக்கு எனப் பலவகை விளக்குகளைக் குறிப்பிடுகின்றன. இவற்றோடு மட்டுமல்லாமல் சில விளக்குகள் மன்னனின் பெயரோடு விளங்கியிருக்கின்றன. எடுத்துக் காட்டாக 'வரகுணமகா ராஜா திருவிளக்கு', 'தெள்ளாற்றெறிந்த நந்திப் போத்தரையர் திருவிளக்கு' என்று கல்வெட்டுகள் குறிப்பிடுவதைக் காணலாம். இவ்விளக்குகள் அல்லும் பகலும் எரிவதற்காக இறவாத்தானங்கள் அளிக்கப்பெற்றன. தானம் எந்த வகையான விளக்கிற்கு அளிக்கப்பட்டது என்பதில் விளக்கின் பெயரும் இடம்பெற்றுள்ளது.

அரசகுல மகளிர்

சோழர் வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்திய பராந்தகச் சோழனுக்குப் பின்பு, இவன் மகன் கண்டராதித்தன் ஆட்சி பீடம் ஏறுகிறான். இவன் சில காலமே ஆண்டாலும் இவன் புகழை நீண்ட நெடுங்காலத்திற்கு நிலைபெறுமாறு செய்தவள் இவன் மனைவி செம்பியன் மாதேவியார். இவர் செய்த பல தானங்களும், திருப்பணிகளும் சோழ அரசியருள் இவருக்குத் தலைமையான இடத்தை ஈட்டித் தந்தன என்று கூறின் அது மிகையல்ல. இவ்வம்மையாருக்குக் 'குலமாணிக்க நம்பிராட்டியார்' என்று மற்றொரு பெயரும் உண்டு. இவர் திருவையாற்று மகாதேவர்க்கு நொந்தா விளக்கு எரிப்பதற்காகத் தொண்ணூற்று ஆறு ஆடுகளைத் தானமாகக் கொடுத்தது பற்றித் திருவையாற்று கல்வெட்டொன்று குறிப்பிடுகிறது. மேலும் இவர் தானே எழுந்தருளிவிச்ச அமர சந்தேவர்க்கும் உமா பட்டாரகியாருக்கும் திருவிளக்கு எரிப்பதற்காக காசுகள் தானம் கொடுத்ததை மற்றொரு கல்வெட்டு பகர்கிறது.

பராந்தகனின் மனைவியருள் ஒருவராக வளவன் மாதேவியார் என்பவர் குறிக்கப்படுகிறார். இவர் நிறனுய்ப்பாடியார் என்பவரின் மகள். இவ்வம்மையார் திருவையாற்று மகாதேவற்கு இரவும் பகலும் எரிப்பதற்காகத் தானம் வழங்கியுள்ளார். இவ்விளக்கிற்காக நித்தம் உழக்கு நெய்க்காக ஐம்பது கழஞ்சு பொன் கொடுத்ததைக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. விளக்கிற்கான நெய்க்கு மட்டுமல்லாமல் விளக்கினையே தானமாகக் கொடுத்திருக்கிறார். வளவன் மாதேவியார் வைத்த வெள்ளி விளக்காகிய இவ்விளக்கின் எடை ஐம்பத்தேழு பலம் என்றும் குறிப்பிடுகிறது.

பராந்தகன் மனைவியின் தாயார் முள்ளூர் நங்கையார் என்ற பெருமாட்டி, திருப்பழனத்து மகாதேவர்க்கு அல்லும், பகலும் விளக்கெரிப்பதற்காக முப்பது கழஞ்சுப் பொன் தானமாகக் கொடுத்ததைத் திருப்பழனத்துக் கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகிறது.

திருவையாற்றுக் கல்வெட்டு ஒன்று, கன்னர தேவரின் தாயாரான கடம்ப விடரி என்பவள், திருவையாற்று மகாதேவற்கு விளக்கு எரிப்பதற்காக முப்பது கழஞ்சுப் பொன் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது.

இராஜராஜனின் மனைவியர் பலர். இவருள் பட்டத்தரசியாகக் கொலு வீற்றிருந்தவள் ஒலோகமதேவியார். இவருக்குத் தந்தி சக்தி விடங்கி என்ற மற்றொரு பெயரும் உண்டு. இவ்வரசியார் ஒலோகமாதேவி ஈச்சுவரமுடைய மாதேவற்குப் பல தானங்கள் கொடுத்ததைக் குறித்துத் திருவையாற்று வட கைலாசம் கோயிலில் உள்ள ராஜராஜனின் 24-வது ஆட்சியாண்

டுக் கல்வெட்டொன்று கூறுகிறது. இத் தானங்களுள் ஒன்றுகத் திகழ்வது விளக்குத் தானம். இவர் தூங்கு விளக்கு, தாரா விளக்கு, ஈழச் சியல் விளக்கு, மலையான் சியல் விளக்கு, சோழிச் சியல் விளக்கு, அந்தலை விளக்கு, ஆர்குட விளக்கு போன்ற விளக்குகளை இவ் விறைவனுக்குத் தானமாகக் கொடுத்துள்ளார். இவற்றின் எடைகளையும் கல்வெட்டு துல்லிய மாகக் குறிப்பிடுகிறது.

அடுத்து குறிப்பிடத்தக்க வகையில் அமைந்துள்ளது, கோமாறஞ் சடையன் கல் வெட்டு ஒன்றில் காணப்படும் செய்தி. விளக் கொன்று எரிப்பதற்காகப் பலரிடமிருந்து தானம் பெறப்படுகிறது. இவ்விளக்கின் பெயர் 'வரகுண மகாராஜா திருவிளக்கு' என்பதாகும். தானம் கொடுத்தவருள் ஒருவராகக் குறிக்கப் படுபவர் கோமாறஞ் சடையனின் மனைவியும் ஒருவர். இவரிடமிருந்து விளக்கு எரிப்பதற் கான தானமாக இருநூறு காசுகள் பெறப்படு கின்றன. மொத்தம் இவ்விளக்கெரிப்பதற் காகப்பெறப்பட்ட காசுகள் இருநூற்று இருபது. இக்காசால் நித்தம் நாரச நாழி என்னும் நாழி யால் நாலு நாழி நெய் கொடுக்கப்படல் வேண் டுமென்று முடிவு செய்யப்பட்டதைக் கல் வெட்டு குறிப்பிடுகிறது.

இதே போன்று திரிபுவன மாதேவியார், நேரியன் மாதேவியார் சோழமானுர் போன்ற அரச குல மகளிர் விளக்கெரிப்பதற்காகத் தானங்கள் கொடுத்துள்ளனர்.

நடுநிலைப் பெண்டிர்

அரச குலப் பெண்டிர்களுக்கு மட்டும் தானம் வழங்கும் உரிமை உரித்தானதல்ல, எங்களுக்கும் உரிமை உண்டு என்று கூறுவது போல் அமைந்துள்ளது நடுநிலைக் குடும்பத்தைச் சார்ந்த பெண்டிர்கள் விளக்கு எரிப்பதற்காக வைத்த தானங்கள்.

திருமறைக் காட்டில் எழுந்தருளியிருக்கும் இறைவனுக்குப் பாண்டி நாட்டு அள்ளூரைச் சார்ந்த நக்கன் தூணி என்பவள் நொந்தா விளக்குஒன்றினுக்குத் தானம் வழங்கியுள்ளாள். இதே நாளில் பாண்டி நாட்டினைச் சார்ந்த கவையப்பி என்பவளும் இவ்விறைவனுக்கு நிலை விளக்கு எரிப்பதற்காகத் தானம் கொடுத்துள் ளார்.

திருமறைக் காட்டு மகாதேவற்கு, நின்றி யூர்நாட்டு வண்டாழச்சேரி உடையான் சாத்தன் தேவியார் மானிநக்க பிராட்டியார் ஒரு நொந்தா விளக்கு எரிப்பதற்காகத் தொண் ணூறு ஆடுகள் தானமாகக் கொடுத்ததைக் கல் வெட்டு ஒன்று குறிப்பிட்டுள்ளது.

திருமறைக் காட்டில் வடகற்றளியில் உள்ள விஷ்ணு தெய்வத்திற்காக அளநாட்டுக் கிளையி லிருக்கும் வெள்ளாட்டி சாத்தன் மல்லி என் பவள் விளக்கு எரிப்பதற்காகத் தொண்ணூறு ஆடுகள் தானமாகக் கொடுத்துள்ளார்.

பள்ளியாழ்வி என்ற ஒரு பெண் இறைவ னுக்கு நொந்தா விளக்கு எரிப்பதற்காகக் கால் வேலி நிலம் தானமாகக் கொடுத்துள்ளார். இப் பெண் திருச்சிற்றம்பலமுடையான் என்பவனின் தங்கையாகக் கல்வெட்டில் குறிக்கப்படுகிருள்.

திருத்தான்தோன்றி ஈச்சுவரமுடைய பரம சுவாமிக்கு அவியூரில் வாழ்ந்த உய்யவந்தாள் என்பவள் திருநொந்தா விளக்கு எரிப்பதற் காகப் பூமி தானம் கொடுத்துள்ளார்.

இதேபோன்று நடுநிலைப் பெண்டிர், சாதா ரண குடும்பத்தைச் சார்ந்த மகளிர் பலரும் இறைவனுக்கு விளக்கு எரிப்பதற்காகக் கொடுத்த தானத்தைப் பற்றிக் கல்வெட்டுகள் பல, உணர்த்தி நிற்கின்றன.

பிறர் பொருட்டு

இறைவனுக்கு விளக்குகள் தன் நலம் கருதி யும் வைத்திருக்கலாம், பிறர் நலம் கருதியும் வைத்திருக்கலாம். தன் நலம் கருதி வைத்த விளக்குத் தானங்கள் பற்றிக் கல்வெட்டுகள் வெளிப்படையாகக் கூருவிடினும், பிறர் நலம் பொருட்டு வைத்த தானங்கள் சிலவற்றைக் கல்வெட்டுகள் வெளிப்படுத்துகின்றன. கண வன் மனைவி நலத்திற்காகவும், மகன் தன் தாய் நலத்திற்காகவும், காதலன் தன் காதலி நலத் திற்காகவும், மனைவி தன் கணவன் நலத்திற் காகவும் விளக்குகள் வைத்துள்ளதைக் கல் வெட்டுகள் மூலம் அறியமுடிகிறது.

அழகிய சோழ பல்லவரையன் என்பவனின் மனைவி, தமருடையாள் என்பவள் தன் கணவ ருடைய நலனுக்காகத் திருவக்கரை உடைய மகாதேவற்கு வைத்த சந்தி விளக்கு ஒன்றிற்குப் பன்னிரண்டு ஆடுகள் தானமாகக் கொடுத்துள் ளாள்.

ஈசான தேவி என்பவள் தன் மகள் பிள்ளை யாழ்வாள் நலத்தின் பொருட்டுத் திருத்தான் தோன்றி ஈச்சுவரமுடையாருக்கு விளக்கு எரிப் பதற்காக ஐம்பது ஆடுகளும், ஒருநிலை விளக் கும் தானமாகக் கொடுத்ததைக் கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகிறது.

எவ்வாறு குறிப்பிடப்படுகிருர்கள்

பெண்கள் தானங்கள் கொடுப்பதற்கு உரிமையிருந்தாலும் தானம் கொடுத்த அவர் கள் பெயர்களைத் தனியே குறிப்பிடுவதற்கு உரிமை அளிக்கப்படவில்லை அல்லது அப்படித் தனியே பெண்டிர் பெயர்களைக் குறிப்பிடுவது நாகரிகமல்ல என்பதனுலோ என்னவோ இப் பெண்டிர் பெயர்கள் பெரும்பாலும் தனித்துக் குறிப்பிடப்படுவதில்லை. இவன் மனைவி இவள், இவனுடைய தங்கை இவள், இவன் மனைவியி னுடைய தங்கை இவள், இவன் பாட்டன் மனைவி இவள், இவன் மகன் மனைவி இவள் என்று இவ்வாறு ஆண்களோடு தொடர்பு படுத்தியே தானம் கொடுத்த பெண்டிர் பெயர் கள் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

158601

கண்டராதித்தன் மனைவி செம்பியன் மாதேவியார் கொடுத்த தானத்தைப் பற்றிக் குறிப்பிடும் ராஜராஜன் கல்வெட்டொன்று, ராஜராஜனின் பாட்டன் மனைவி செம்பியன் மாதேவியார் கொடுத்த தானத்தைப் பற்றிக் குறிப்புடுள்ளது.

இச்செய்தியினைக் கல்வெட்டு,

''சோழப் பெருமான் பட்டகள் தேவியார் செம்பியன் மாதேவியாரான குலமாணிக்க நம் பிராட்டியார்'' என்று குறிப்பிடுகிறது.

குறுங்கை நாட்டுக் காவிரி மங்கலத்துக் கடம்ப விடரி என்பவள் விளக்கிற்காகத் தானம் கொடுக்கிருள். இவளைக் கல்வெட்டு,

''கன்னரதேவரின் தாதியான கடம்ப விடரி'' என்று மகனின் பெயரோடு இணைத்துக் கூறுகிறது.

பெருமாள் திருவரங்கி என்பவள் திருவையாற்று மகாதேவற்கு விளக்கு எரிப்பதற்குத் தானம் கொடுத்துள்ளார். இவரைப் பராந்தகன் மனைவிக்குத் தங்கை என்று கல்வெட்டு குறிப்பிடுகிறது.

ஒலோகமாதேவி ஈச்சுவரமுடையார்க்குத் தானம் கொடுத்த தந்தி சக்தி விடங்கியைக் குறிப்பிடும் கல்வெட்டு ''உடையார் ஸ்ரீராஜ ராஜதேவர் நம்பிராட்டியார் தந்தி சக்தி விடங்கியாரான ஸ்ரீஒலோக மாதேவியார்'' என்று இராஜராஜனின் பெயரோடு இணைத்தே கூறுவது நோக்கத்தக்கது.

இவ்வாறு பெரும்பாலும் பெண்கள் பெயர்கள் ஆண்கள் பெயருடன் சேர்த்துக் கூறப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கவொன்ருகும்.

என்னென்ன தானங்கள்

பெண்கள் விளக்கு எரிப்பதற்கான தானப் பொருள்களாக, ஆடுகள், பொன், காசுகள், நிலம் ஆகியவற்றைக் கொடுத்துள்ளனர். இவற்றுள் பல தானங்கள் ஆடுகளாகவே கொடுக்கப்பட்டிருக்கின்றன. அரச குல மகளிர் பெரும்பாலும் விளக்கு எரிப்பதற்குப் பொன்னையே தானமாகக் கொடுத்துள்ளனர்.

கோமாறஞ்சடையன் மனைவியிடமிருந்து விளக்கு எரிப்பதற்குத் தானமாக இருநூறு காசுகள் பெறப்பட்டன.

நங்கை பள்ளியாழ்வி என்பவள் விளக்கு எரிப்பதற்காகக் கால் வேலி நிலத்தினைத் தானமாகக் கொடுத்துள்ளார். சில இடங்களில் பொன்னுகக் கொடுக்கப்பட்ட தானத்தினை நிலமாக மாற்றிக் கொள்வதுமுண்டு.

இதில் குறிப்பிடத்தக்கது வெள்ளாட்டி உய்யவந்தாள் என்பவள் விளக்கு எரிப்பதற்காகக் கொடுத்த பூமித் தானமாகும். இப்பூமி இலுப்பை மரங்களால் நிறைந்தது. இம்மரங்கள் விளக்கு எரிப்பதற்கான எண்ணெயினை வழங்குவதால் இவள் இம்மரங்கள் நிறைந்த பூமியைத் தானமாகக் கொடுத்துள்ளார். இத்தானம் மற்ற தானப் பொருட்களிலிருந்து வேறுபட்டு நிற்கிறது.

முடிவுரை

இவ்வாறு பெண்டிர் திருக்கோயில்களுக்காகத் திருவிளக்கிட்டத் தானங்கள் பெண்களின் உரிமையை வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளன. இவர்கள் பெண்களாய் இருந்தாலும் பெண் தெய்வங்களுக்காக இவர்கள் தானங்கள் அமையாமல் ஆண் தெய்வங்களுக்காக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இத்தானங்கள் பெரும்பாலும் சிவன் கோவில்களுக்கே அமைந்துள்ளன. மிகச் சிலவே விஷ்ணு கோயில்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. பெண் தெய்வங்களுக்காகப் பிற்காலத்திலேயே அதிகமான கோயில்கள் ஏற்பட்டன. ஆதலால் இவர்கள் தானங்கள் ஆண் தெய்வங்களுக்காக அமைந்தன என்று ஒரு காரணம் கூறலாம்.



1—1—75-ம் தேதியன்று அருள்திரு இலக்குமி **நரசிம்ம சுவாமி** திருக்கோயில், **சோளிங்கர்** (வ. ஆ. மாவட்டம்) நடைபெற்ற 20-ஆம் **ஆண்டு படிவிழாவின்** போது தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை துணை ஆணையர் உயர்திரு. **K.** இராசா B.A.B.L., அவர்கள் கலந்து கொண்டு திருப்பாவைப் போட்டியில் வெற்றி பெற்றவர்கட்கு பரிசுகள் வழங்கினர். அருகில் இருப்பவர் திருக்கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் வழக்கறிஞர் **K. M.** நடராசன் B.A.B.L.,

ஆழ்வார்கள் காட்டும் நானிலக்காட்சி

என். எஸ். தாதாசாரியார்

முன்னுரை

''கவிதையே கலையின் அழகு'' என ஸ்ப்ராட் (Sprat) என்ற ஆங்கிலக் கவி கூறினார். கவியில் காணும் எத்தகைய நுண்கருத்துகளும், மக்கள் தேன்போலப் பருகப் பாங்காகிவிடும். ''The poetical mind is one, full of eternal forms of beauty and perfection'' ''பரிசுத்தமான அழகிய உறுதியான உண்மைகளின் நிறைவே கவி இதயமாய் மருவியுள்ளது'' என நியூஸ்மென் என்பவர் கூறினார். உலகிலேயே அருமறை துணிந்த வேதாந்தத்தின் பிறப்பிடம் நம் பழம் பாரத நாடு என்பதை உலகமே ஒப்புக்கொண்டுள்ளது. அந்த வேதாந்த விழுப்பொருள் ஓர் அருமருந்தானால், அதனை இனிய கலை மருந்தாக்கிச் செந்நாத்தித்திக்கவும், செம்மனம் குலாவவும் இனிய தமிழ்ப் பாலுடன் கூட்டிக் குழைத்துத் தந்த பெருமை பொதுவாகச் சமயத்துறை வீரர்களான நாயன்மார்களுக்கும் ஆழ்வார்களுக்குமே உரியதாகும். ''பாலாழிநீ கிடக்கும் பண்பையாம் கேட்டேயும்'' என்ற நம்மாழ்வார் அருளிச் செயலில் ''பாலாழி'' என்பதினால் பழகு தமிழ்ப் பெருவெள்ளத்தையே குறிப்பிட்டார் எனலாம். அவர்கள் தந்த மருந்து ஒருபுடை இலக்கிய இன்னகைக் கட்டழகியாகவும், மறுபுடை ஒரு பண்பட்ட பழங்கால முதுபெரும் பெண்ணுகையும் காட்சி தரும் எனலாம். அவர்கள் நாவில் தமிழ் ஒருகால் குழந்தை எனத் தவழும், மறுகால் அன்ன நடை பயிலும், கரும்பு கசக்கக் கனிமொழி பேசும் இளம் மங்கையாகப் பையநடக்கும். வேறொருகால் முதுமங்கை போல் அசைந்து நடமாடும் எனலாம். ஆழ்வார்களின் திவ்வியப் பிரபந்தங்களில் பழம் தமிழ்ப் பொருள் இலக்கண விளக்கம் சொல்லுக்குச் சொல், புகுந்து விளையாடும் நேர்த்தியைக் கண்டால், தமிழ்த் தாய் இவர்களின் மொழிப் பூங்காவில் ஒளிந்து விளையாடுகிறாளோ என்னத் தோற்றும். ஸ்ரீவைணவ சமயத்தில் ஆலயங்களிலும், வீடுகளிலும் தமிழ்ச் சொற்களும், தமிழிலக்கிய வழக்க ஒழுக்கங்களும் விரவி இருக்கும் அருமையைக் காணலாம்.

மட்டையடித் திருவிழா

அகநானூற்றில் நல்லாவூர்க்கிழார் என்பவரால் இயற்றப்பட்ட 86-வது செய்யுளை நோக்கலாம். அது மருதத் திணைக்கு உரிய பாடலாகும். பரத்தையரோடு தொடர்பு கொண்டதாகக் கருதப்பட்ட தலைவன் புறத்தே இருந்து மனை திரும்பியதும் தலைவியின் வாயிலண்டை காத்திருக்கத் தாளிட்ட கதவைத் தோழி திறக்க மறுக்கவும், தலைவன் முன்பு தலைவிக்கும் தனக்கும் தனிமையில் நடந்த அகநிகழ்ச்சியை அறிவுறுத்தி உள்ளே சென்றதாகக் கூறப்பட்ட சங்கச் செய்யுளின் வழியைப் பின்பற்றிச் சில திருமால் ஆலயங்களில் இன்றும் ''மட்டையடித் திருவிழா'' ஒன்று நடப்பதைக் காணலாம். தலைவியை ஊடல் தீர்க்கும் தலைவன், தலைவி தன்னிடம் முகம் கொடுத்துப் பேசாமையால், முன்பு தலைவி தன் மீது கொண்டிருந்த அன்பு நிலையை எண்ணி அப்படி அன்பாக இருந்தவள் இப்பொழுது இவ்வாறு ஊடல் கொண்டவளாக ஆனாள் என்று தன் நெஞ்சிற்குக் கூறியது எனவும் இச்செய்யுளின் துறையை வகுப்பதுண்டு.

நானிலம்

தமிழர்கள் கண்ட தனிப் பெருமை பெற்ற ஐவகை இலக்கணங்களில் ''திணை'' என்பது ஒன்று உணர்த்தப்படுவதைப் புலவர் பெருமக்கள் நன்கறிவார்கள். திணை (ஒழுக்கம்) என்று பிரித்துச் சொல்லப்படுபவைகளில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன பெருந் திணையாகும். இவைகளுள் பாலை என்பதைக் குறிஞ்சியும் முல்லையும் கலந்து மருவியதாகக் கூறுவதுண்டு. இந் நான்கு திணைகளில் மலையும் மலையைச் சார்ந்த பகுதியைக் குறிஞ்சி எனவும், காடும் காட்டைச் சார்ந்த பகுதியை முல்லை எனவும், வயலும் வயலைச் வயலைச் சார்ந்த பகுதியை மருதம் எனவும், கடலும் கடலைச் சார்ந்த பகுதியை நெய்தல் எனவும் கூறுவார்கள். இத்தகைய நானிலக் காட்சிகளைச் சங்க நூல்களில் இலக்கிய மணம் கமழக் கேட்டோம். ஆனால் அக்காட்சிகளை ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் தெய்வ மணம் கமழ நுகர்வது ஒரு தனி இன்பம் தரும். ஆழ்வார்களுள் நம்மாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் ''ஞானத்தில் தன்பேச்சு பிரேமையில் பெண்பேச்சு'' எனக் கூறும் முறையில் தலைவி, தாய், தோழிப் பேச்சுகளாக அருளிச் செய்த அருமையை நெஞ்சம் படைத்தவர்கள் படித்தின்புற வேண்டியது. நம்மாழ்வாரின் ''மின்னிடை மடவார்'' திருமொழியிலும், திருமங்கையாழ்வாரின் 'காதிற்கடிப்பு'த் திருமொழியிலும், குலசேகராழ்வாரின் 'ஏர்மலர் பூங்குழல்' திருமொழியிலும் பேசியிருப்பன தமிழுலகமே வியந்து இன்புற வேண்டிய ஊடல் துறையாகும். அவ்வாழ்வார்கள் காட்டிக் கொடுத்த நானிலக் காட்சிகளின் இன்பத்தை எடுத்துக் காட்டாகச் சில இடங்களில் காணலாம்.

ஆழ்வார்களின் அருளிச்செயலான பால்வாய்ப் பசும் தமிழ் வடிவான திவ்விய பிரபந்தங்கள் இறைவனையும் நம்மையும் ஒரு படியில் இணைய வைத்து நீராய்க் கரைய உருக்க வைக்க வல்லது என்பதை நம்மாழ்வார் சுட்டிக் காட்டினார். இந்தத் திவ்வியப் பிரபந்தங்கள் கண்ணுளனும் திருமாலைக் காண வைக்கும் தொலைக்கண்ணாடி எனவும் ஸ்ரீவேதாந்த தேசிகன் அருளினார். இவர்களுடைய பக்திப் பைந்தமிழ்ப் பாடல்களில் நானிலக் காட்சியுடன் அகக் கற்பனையும் புறக்கற்பனையும் விரவியுள்ளதென்பதை நன்கு உணரலாம். முதலில் திருமங்கை ஆழ்வாரின் காட்சி இன்பத்தை நுகரலாம். பெரிய திருமொழியில் திருநறையூர் என்ற நாச்சியார் கோயில் பதிகத்தில் புறக் கற்பனையில் மருத நிலக் காட்சியை எடுத்துக் கொள்ளலாம். ஒரு நன்னாள் திருமங்கை ஆழ்வார் சோழ நாட்டுத் திருப்பதிகளின் எம்பெருமான்களை மங்களா சாசனம் செய்துகொண்டு எழுந்தருளுகிறார். அவருடைய பயணத்தில் திருநறையூர் வருகிறது. பாதையின் நடுவில் அழகான மருத நிலக் காட்சி. மாலை நேரம். ஒரு நீர் ததும்பும் நீண்ட குளம். குளத்தின் இருபக்கத்திலும் ஒழுங்காக அல்லி மலர்களும், தாமரை மலர்களும் விளங்குகின்றன. அல்லி மலரில் இரு நண்டுகள் தலைவனும், தலைவியுமாய்க் கற்பு மிகக் குடித்தனம் நடத்துகின்றன. பெண் நண்டுக்கு அதாவது நள்ளிக்கு நிறை கர்ப்பம். சூலுற்ற மங்கைக்கு ஏற்படும் மசக்கை ஏற்பட்டது. தலைவனிடம் கூற வெட்கி நிற்கும் நள்ளியின் கருத்தைக் கருத்துக்கினிய தலைவன் அலவன் அதாவது ஆண் நண்டு குறிப்பால் உணர்ந்தது. தன் மனையாளுக்காகத் தேன் கொண்டுவரத் தாமரையை நாடி அதிகாலை புறப்பட்டது. பகல் எல்லாம் தாமரையின் தேனை மாந்தியது. ஆசை அடங்கவில்லை. இரவும் வந்தது. அறியவில்லை. இரவெல்லாம், தன் தலைவிக்குத் தேன் ஈந்த தாமரையிடமுள்ள பரிவால் அங்கேயே தன் தலைவியை இரவெல்லாம் நினைத்து இராக் கண் விழித்திருந்தது. அதிகாலை சிறிது தாமரை அலரத் துவங்கியது. உடனே சட்டெனக் குதித்துச் செங்கண்ணுடன் தலைவிரி கோலத்துடன் உடல் தளர்வுற்று ஆடி அசைய மனைவியை நோக்கி விரைந்தது. இங்கு அல்லியில் தங்கி இருந்த தலைவி இராவெல்லாம் பிரிவாற்றாமையால் முல்லை நிலத் தலைவி போல் ஆற்றி இருந்து விடியவும் தலைவன் வரும் வழியில் விழி வைத்து நின்றது. அதோ தலைவன்! கண்களில் மகிழ்ச்சி பொங்கியது. மனம் களிப்புற்றது. சிந்தை தெளிந்தது. கண் உற்று நோக்கியது. ஆ! என்ன மாற்றம்! களி கொண்ட தலைவியின் உள்ளத்தில் சினத் தீ பறந்தது. தெளிவுறும் வேளையில் கலக்கம் கலந்தது. தலைவியை நாடித் தாவி வரும் அலவனை (ஆண் நண்டினை)த் தவறாக நினைத்தது. பரத்தையர் படுக்கையிலிருந்து பாசாங்கு காட்டி வருவதாக நினைத்தது. தலைவன் அருகே வருகிறான். அகத்தில் நுழைந்துவிடுவான் என நினைத்தது. காலை நேரமானதால் இயற்கையில் அல்லி மலர் இதழ்கள் கூம்பின. அந்நிகழ்ச்சியை அத்தலைவி ஊடல் கொண்டு வீட்டின் கதவைத் தாளிட்டாள் போலும் என்று கற்பனையில் ஒரு மருத நிலக் காட்சியை ஆழ்வார் கண்டார். ஆழ்வார் எழுந்தருளும் இடம் திருநறையூர் என்ற நாச்சியார்கோவில் ஆனதாலும், அந்த எம்பெருமானிடத்தே ஆழ்வார் அரிய அகத்துறைப் பாடல்களைப் புனைந்ததாலும், நாச்சியார் ஆட்சியில் மாட்சிமை தலைவிக்குத் தானே என்ற உரையாசிரியர் திருவுள்ளத்திற்கிணங்க இவ்வருணனையை அனுபவிக்கலாம். அந்தப் பாடல் வருமாறு :

''பள்ளிக் கமலத்து இடைப்பட்ட
பகுவாய அலவன் முகம்நோக்கி
நள்ளி ஊடும் வயல் சூழ்ந்த நாரையூரே''

என்பதாகும். இப்பாசுரம் ஓதும்பொழுது ஒரு புலவர் ''ஆராய்ந்து குற்றம் நிரம்பினால் அன்றோ தண்டிப்பது'', ''இவ்வாறு நள்ளி நடந்து கொண்டது பிழையன்றோ'' என்றாராம். அதற்குத் திருநறையூர் அரையர் என்பவர், பட்டர் என்ற ஆசிரிய வள்ளலிடம் தெளிவு கேட்டாராம். அதற்குத் தெளிவாகப் பட்டர் ''கேள்வி இல்லாதபடி பெண் அரசு நடாத்தும் நாச்சியார்கோவில்'' என்று விடை யிறுத்தாராம்.

புறக்கற்பனையில் முல்லைநிலக் காட்சி

அடுத்தபடியாகத் திருவாய்மொழியில் திருப்புலியூர்ப் பதிகத்தில் வரும் காட்சியாவது: திருப்புலியூரைச் சுற்றி ஒரே அடர்ந்த சோலை. சோலையின் கண்ணே சிறந்து ஓங்கித் தளிர்த்து வளரும் பாக்கு மரம். அருகே ஒரு இளம் பிணைப்பில்லா வெற்றிலைக் கொடி. அவ் வெற்றிலைக் கொடி தானே தாவி அப் பாக்கு மரத்தைத் தழுவிக் கொள்கிறது. இவையிரண்டும் பிணைந்திருக்கும் காட்சி, கடல் வண்ணனும், கடல் மங்கையும் இறுகப் புல்லி இருப்பதுபோல் காட்சி தருகிறது. முல்லை நிலமல்லவா. தாவரங்களும் பக்தி நெறியில் பரவசப்பட்டிருக்கின்றன. அருகே ஒரு தளிர்ந்த சூல் கொண்ட வாழை மரம். அம்மரம் இக்காட்சியைக் கண்டதும் அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கையுறை மார்பனை நினைத்து விடுகிறது. பக்தி மேலிடக் கனிந்துவிடுகிறது. கனிந்த வாழைத் தாரையே இத் தம்பதிகளின் திருவடியில் காணிக்கை இடுவதுபோல் தளர்ந்து, தாழ்ந்து, தகைய நிற்கிறது. தாம்பூலம் ஏந்தும் ''காளாஞ்சி'' போன்ற இலை மடலையும் தாங்கி நிற்கிறது. தென்னை மரங்கள் கொடித் தலைவிக்குப் பாங்கிகள் போல் ஆடாமல், அசையாமல் வரிசை கோத்து நிற்கின்றன. உடனே தென்றலும் மெல்லிசை பாடி வீசுகிறது.

இதோ அந்தப் பாடல்

''மெல் இலைச்செல்வ வண்கொடி புல்க,
வீங்கு இளம் தாட்கமுகின்
மல் இலைமடல் வாழை ஈன்கனி
சூழ்ந்து மணம் கமழ்ந்து
புல் இலைத் தெங்கின் ஊடு கால்
உலவும் தண் திருப்புலியூர்
மல் அலம் செல்வக் கண்ணன்
தாள் அடைந்தாள் இம்மடவரலே''

கற்பனையில் குறிஞ்சி நிலக்காட்சி

ஆண்டாள் நாச்சியார் கற்பனை நோன்பு நோற்கிறாள். மார்கழி நீராடத் தன் தோழிப் பெண்களை எழுப்பி அழைத்துக் கொண்டு, நந்த கோபரின் திருமாளிகைக்குள் சென்று ஓர் சிறிய அறையில் கோட்டுக் கட்டிலின் மேல் மெத் தென்ற பஞ்ச சயனத்தில் நப்பின்னைப் பிராட்டி யுடன் உறங்கி விழித்திருக்கும் கண்ணனைக் காண்கிறாள். கண்ணனும் இளம் சிங்கம்போல் தோன்றுகின்றான். அப்பொழுது ஆண்டாள் திருவுள்ளத்தில் ஓர் கற்பனை தழைக்கிறது.

ஓர் மலைக் குகை. மழைக் காலம் சென்றது. குகைக்குள் தன் பேடையுடன் படுத்திருந்த சிங்கம், தீக்கண் விழிக்கிறது. சீரிய சிங்கம் அறிவுற்றுப் புலால் வாடை வீசும் தன் பிடரி மயிரைச் சிலிர்த்துக் கொள்கிறது. மிடற் றோசை எழுப்பி முழங்குகிறது. உடனே அங் கிருந்தவண்ணமே, ஒரே தாவலாகத் தாவி வெளியே உள்ள மேடையில் வந்து மிடுக்குடன் அமர்கிறது. ''கண்ணா நீயும் இவ்வாறே வெளி வந்து எங்களுக்கு அருள் காட்ட வேண்டும்'' என்கிறாள் அன்னை ஆண்டாள்.

''மாரிமலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துஉறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரிமயிர் பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலே பூவைப் பூவண்ணா! உன்
கோயில் நின்று இங்ஙனேபோந்தருளிக்கோப்புடைய
சீரிய சிங்காதனத் திருந்து யாம் வந்த
காரியம் ஆராய்ந் தருளேலோர் எம்பாவாய்''

அகக் கற்பனையில் நெய்தல் காட்சி

பிறிதோர் இடம் காணலாம். நம்மாழ் வார் அருளிச் செய்த திருவிருத்தம் என்னும் நூலில் ஒரு கற்பனை வரும். பெண் தன்மை யெய்திய நம்மாழ்வார் அருளிச் செய்த அருளிச் செயல்: திருமால் ஒரு கொடியவராம். பாற் கடலில் பள்ளி கொண்ட அண்ணல் திருமக ளுடன் கூடிக் குலாவுகிறார். இதனைக் கண் ணுற்ற நிலமங்கை வருந்தி அழுகிறாள். திரு மால் பாற்கடலில் வந்து பள்ளி கொள்கிறார். கடலரசன் ஓசை எழுப்பித் தன் மகளான இலக்குமியைத் தன் அலைக்கையினால் பிடித்துக் கொண்டு மேகவண்ணனுக்குக் கன்னிகாதானம் செய்கிறார். இலக்குமியும் மகிழ்ச்சிக் கண்ணீர் அரும்பக் கடலரசனின் அலைகளாகிய படிக்கட் டில் ஏறித் திருமாலின் பக்கத்தே அமர்கிறாள். இதனைக் கண்ட நிலமங்கை, நான் ஏங்கிக் காத் திருக்க, இத்திருமால் மற்றோர் பெண்ணுடன் குலாவும் கொடிய தன்மையைப் பாருங்கள் என்று விண்மீது சென்று முகிலாய் அசைந்து, கண்ணீர் விட்டழுகிறாள்! நிலமங்கையின் கண் ணீராகிய அம் மழை அம் மங்கையின் திரு முலைத் தடமாகிற மலைகளின் வழியே ஆறுபோல் பெருகி வழிகிறது.

''அழைக்கும் கருங்கடல் வெண்திரைக்
கைகொண்டுபோய் அலர்வாய்
மழைக்கண் மடந்தை அரவணை ஏற,
மண்மாதர், விண்வாய்
அழைத்துப் புலம்பி, முலைமலைமேல்
நின்றும் ஆறுகளாய்
மழைக்கண்ண நீர் திருமால்
கொடியானென்று வார்கின்றதே''



திருநெல்வேலி அருள்திரு நெல்லையப்பர் காந்திமதி அம்பாள் திருக்கோயிலின் ஆயிரங் கால் மண்டபத்தில் அமைக்கவிருக்கும் கலைக் கூடத்திற்கு 29—10—74ஆம் நாள் கால்கோள் நடத்திட வந்த தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கு அறங்காவலர் திரு. கல்யாணசுந்தரம் மாலையணிவிக்கிறார். அருகில் அறங்காவலர் குழுத் தலைவர் திரு. ப. இலக்குமணன் எம். சி. இருக்கிறார்.

குறளமுதம்

த. நாகராசன், B.Sc.



வள்ளுவரது நூலாகிய திருக்குறள் ஓர் ஒழுக்கக் களஞ்சியம் (Encylopaedia of Morals). அவரது ஒழுக்க நீதிகள் இயேசுநாதரின் மலைச் சொற்பொழிவையும் (Sermon on the Mount), மோசஸ்சின் பத்துக் கட்டளைகளையும் (Ten Commandments) நிகர்த்தன என்று, அவரை அறம், மெய்யறிவு என்ற இரு கண்களைக் கொண்டு பார்த்த அறிஞர்கள் ''வள்ளுவர் ஓர் அரசியல் வித்தகர்; அரசியல் அறிஞர்களுள் தலைசிறந்தவர்'' என்றே கூறுகிறார்கள். வள்ளுவர் பல கோணங்களிலிருந்து பார்க்கக் கூடிய அறிவியல் ஒளிமணி. அவர் காலத்தும் அவருக்கு முன்னும் இவ்வுலகில் வாழ்ந்தாராகக் கருதப் படும் அரசியலறிஞர்கள் கிரேக்க நாட்டினராகிய பிளேட்டோவும், அரிஸ்டாட்டிலும், 'அர்த்த சாத்திரம்' எழுதிய சாணக்கியரும் வெளியிட்ட அரசியற் கருத்துக்களுக்கு ஒப்ப, வள்ளுவர் வகுத்துத் தந்த அரசியற் கருத்துக்கள், காலம் பல கடந்து நின்று, எக்காலத்துக்கும் உரியனவாய் இலங்குகின்றன.

அறம் பொருள் காமம் என்று குறள் மூன்று பாலுடையது என்றாலும், பொருட்பாலே 70 அதிகாரம் கொண்ட பெரும்பால். அது பல பொருள்களுக்குப் பொதுவான பால் என்று பெயர் பெறினும், உண்மையாகப் பார்க்குமிடத்துப் பொருட்பால் ஓர் அரசியற்பால். நாட்டின் ஆட்சிக்கும் மக்களின் வாழ்வுக்கும் பொருட்பாலில் பல்வேறு கொள்கைகளும் சிக்கலறுக்கும் வழிகளும் காணலாம். பொருட்பால் வள்ளுவரின் அறிவுப்பால்.

திருவள்ளுவரின் பொருட்பாலில் உள்ள மூன்று பகுதிகளுள் முதற் பகுதியாக அமைந்தது அரசியல். அடுத்தது அங்கவியல். மூன்றாவது ஒழிபியல். அரசியலில் ஆளும் தலைவனைப் பற்றிக் கூறுகிறார். திருவள்ளுவர் வாழ்ந்த காலமோ உலகெங்கும் முடியாட்சி இருந்து வந்த காலம். அவர் தமிழ் நாட்டில் கண்டதும், மூவேந்தர் ஆண்ட முடியாட்சிக் காலம்தான். முடியாட்சி அகன்று குடியாட்சி வந்தாலும் அரசியலுக்கு அடிப்படையான தேவைகளும் முறைகளும் மாறுவதில்லையே. திருவள்ளுவர் மக்களின் நல்வாழ்வு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு பொருட்பால் எழுதியவர். ஆகையால் அரசுக் கட்டிலில் அமருவோருக்கும் அறிவுரை பகர்வனவாகவே எழுதினார். முடியாட்சிக் காலத்தில் அரசர்கள் போற்றத்தக்க உண்மைகளாக அவை இருந்தாலும் குடியாட்சிக் காலத்திலும் அமைச்சர்களும், மன்றத் தலைவர்களும் மற்ற உறுப்பினர்களும் போற்றத்தக்க உண்மைகளாக அவை இன்றும் நின்று ஒளிர்கின்றன.

வள்ளுவர் காணும் அரசு, நல்லரசு வேண்டுவது, அல்லது கடிவது. முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறையென்று வைக்கப்படும் நிலையிலே முகிழ்க்கும் அரசே நல்லரசு. அரசன் அல்லதைச் செய்வானாயின் அறமே கூற்றாக அமையும். அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் படையாகி அவனை அழிக்கும். அரசனே நாட்டின் தனிப் பெருந் தலைவன் என்பது வள்ளுவர் கருத்தன்று. குடி மக்களுள் அறிவார்ந்த பெரியவர்களைத் துணையாகக் கொண்டு அரசோச்ச வேண்டும் என்று மன்னனுக்கு அறிவுரையும் அச்சுரைகளும் கூறுகிறார் வள்ளுவச் செம்மல்.

அணி தேர்புரவியும் ஆட்பெரும்
படையும் வேந்தனுக்கு வலிமையல்ல

வாளும் காலாளும் மன்னனுக்கு வலிவும் பொலிவும் தருவனவல்ல. அவன் செங்கோலே அவனுக்குச் சிறந்த வலிமையாகும்; வெற்றியாகும். அந்தச் செங்கோல் வளையாதிருக்க, வள்ளுவர் கூறும் வழி, நம்மைவிட ஆற்றலாற் பெரியவர்களை நமக்குத் துணையாகக் கொண்டு ஆட்சி நடத்த வேண்டும் என்பதுதான்.

எல்லோரும் எப்போதும் எந்தக் காலத்துக்கும் தம்மினும் பெரியவர்களுடைய அறிவுரையின் துணை கொண்டுதான் நடக்க வேண்டும். என்றாலும் குறிப்பாக ஓர் அரசன் அறனறிந்து மூத்த அறிவுடைய பெரியோர்களுடைய ஆலோசனைகளும் ஒத்துழைப்பும் இல்லாமல் எதையும் செய்தல் கூடாது என்ற கருத்தில், உலகோர் செய்த உயர் தவப் பயனாய்த் தோன்றிய புலவர் பெருமான்,

''தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை''

என்று கூறிப் போந்தார்.

இக்குறட்பாவில் 'தமரா ஒழுகுதல்' என்னுந் தொடர், சிந்தனைக்குரியதாய்ச் சிறக்க நிற்பது.

தம்மிலும் பெரியவரைத் துணையாகக் கொள்ளுகையில், அவரை வெறும் பற்றுக்கோ, உலக நட்புக்கோ என்று நினையாமல், தம்மவ

ராகவே நினைக்க வேண்டுமாம். அவ்வுயர் தொடர்பே, ஆன்ற வலிமையாவதோடு ஈன்ற புகழுக்கு இனிது துணை நிற்குமாம்.

தம்மைவிட வயதில், அறிவில், ஆற்றலில் சிறந்த பெரியவர்களைத் தமக்குச் சுற்றத்தா ராக்கிக் கொள்ளுதல், வலிமை எல்லாவற்றிலும் முதன்மையானது; பொருள், படை, அரண் ஆகிய மூன்று வலியினும் இத்தகைய வலிமை சிறந்தது என்கிறார் பரிமேலழகர்.

''நட்பானதொரு அறிவுரை பல எதிரிகளை முறியடிக்கும்'' என்ற பொருளில், ''Friendly counsel cuts off many foes'' என்று ஷேக்ஸ் பியர் கூறியதும் இதனையொட்டித்தான்.

நல்லாட்சி மலர்ந்திட நாடாளுபவர்கள் பெரியாரைத் துணைக்கோடல் வேண்டும் என்று, ஒப்பில் புலவர் திருவள்ளுவர் தம் அஃகி அகன்ற அறிவின் திறத்தால் அரசியல் அதிகாரத்தில் வகுத்துப் பகுத்து வடித்துத் தந்துள்ளார். பரந்த பொருளெல்லாம் பாரறியச் சுருங்கிய சொல்லால் விரிந்துப் பொருள் விளங்கச் சொல்ல வல்லார் யார்? வள்ளுவரல்லால்.

திருக்குறள் தனி மனித வாழ்வு, சமுதாய வாழ்வு, நாட்டு வாழ்வு, ஞால வாழ்வு அனைத் தும் முழுதுறத் தழுவிய வாழ்வியல் நூல். எந் நிலைய வாழ்வுக்கும் வழிகாட்டும் முதல் நூல். அது வறட்டு வேதாந்தம் பேசும் கற்பனைப் பனுவலன்று.

வள்ளுவர் ஓர் அற நெறியாளர், மெய்யறி ஞர். நீதி நெறி விளக்கத்தைப் போதிக்கப் பிறந்த கண்ணபிரான், இயேசுபிரான், புத்தர், மகாத்மா காந்தியைப் போன்ற தத்துவஞானி என்றாலும், வள்ளுவர் உளுத்துப்போன சமுதா யம், உயிர்த்தெழ நாட்டரசியல் அடிப்படை களை ஐயம் திரிபற வெளியிட்ட அரசியல் வித்த கராவார்.

உலக மக்களது வேதமாகிய குறளினிடத்து மில்ட்டனின் மாட்சியும், தாந்தேயின் அருள் நோக்கும், ஷேக்ஸ்பியரின் அகிலத்துவமும், அரிஸ்டாட்டிலின் மேலாந்திறமும், பிளாட்டோ வின் உயர் குறிக்கோளும், மார்க்கஸ் அரேலிய சின் ஒழுக்க ஆர்வமும் நன்றாய்க் கலந்து இயைந்து நிற்கிறது என்று பிறநாட்டு அறிஞர் வீறுகொண்டு கூறியதிலிருந்து

''எல்லாப் பொருளும் இதன்பாலுள இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால் . .''

என்ற மதுரைத் தமிழ் நாகனார் கூற்றின் பெருமை புலப்படுகின்றது.

முப்பாலில் சிறந்த பொருட்பாலில், அரசி யலில் அரசன் அறிய வேண்டிய அறிவுகளையும், அரசாட்சி நடத்த வேண்டிய முறையினையும் வள்ளுவர் வடித்துத் தருகிறார். அரசியலிலும் அங்கவியலிலும் அரசனைக் குறித்துச் சொல்லப் பட்டிருந்தாலும், ஒவ்வொரு குறளும் இல்லற வாசியாகிய ஒவ்வொரு குடிமகனுக்கும் சொல் லப்பட்டதுதான். குடிமகன்களுக்கெல்லாம் முதன்மையான குடிமகன் அரசன் ஆனதால் அரசனுக்குச் சொல்லும் நீதிகளும் அறிவுரை களும் எல்லோருக்குமே பொருந்தும்.

வள்ளுவர் காணும் அரசு முடியரசுமல்ல. குடியரசுமல்ல, படையரசு கூட அல்ல. செங் கோல் அரசே வள்ளுவர் விரும்பிய நாட்டரசு. வள்ளுவப் பெருமானே தம் காலத் தமிழக மாகிய நந்தமிழ் நாட்டின் இன்றைய நிலையை உட்கொண்டே தமது கருத்துக்களை வழங்கியுள் ளார். அரசியலைப் பற்றி அரசியலறிஞர்கள் வெளியிடுங் கொள்கைகள், அவர்தம் கால அமைதியைப் பொறுத்தனவாகவே இருக்கும் என்றும், அவர் காலநிலை யறியாமல் அவர் கருத்துக்களை விளக்கமாக அறிதல் இயலாதென் றும் கூறுவார் 'இலாஸ்கி' என்ற அறிஞர் பெரு மான். அன்றைய மூவேந்தரும் குறுநில மன்ன ரும் குறையின்றிக் கோலோச்ச, அன்று அவர் தந்த அறிவுரை 2,000 ஆண்டுகட்கு முன்பு இருந்த தமிழக அரசின் காலக் கண்ணாடியாக விளங்குவதைக் காண்கிறோம்.

அறிவு—அரசனுக்கு இறுதி வராமல் காக் கும் அருங்கருவியாகும். அதுவே பகைவரால் அழிக்க முடியாத அரணுமாகும். இத்தகைய அறிவு அமையப் பெற்ற அரசு, பெரியாரைத் துணைக் கொண்டு சிற்றினஞ் சேராது அரசியல் நடத்த வேண்டும். விண்ணிலிருந்து பொழியும் மழை எந்நிலத்தில் வீழ்ந்து சேருகின்றதோ அந் நிலத்தின் திறத்தையும் பண்பையும் ஏற்றுக் கொள்ளுதல் போல, அரசனது மனப் பண்பும் அவன் சார்ந்த மக்களது இயல்பால் மாறுத லடையும். நல்லாரைத் துணை கொண்டால் அரசன் நன்னெறியில் நின்று செங்கோல் செலுத்துவான்.

தீயாரைத் துணை கொண்டால் தீய நெறி யில் நின்று கொடுங்கோல் மன்னவனுவான். ஆதலால் அரசன் எப்போதும் அறனறிந்து மூத்த தம்மிற் பெரியாரைத் துணையாகக் கொண்டு அரசியல் நடத்த வேண்டும். நம் பண்டைத் தமிழரசனைச் சூழ்ந்து எப்போதும் ஐம்பெருங் குழுவும், எண்பேராயமும் இருந்தன என்று சிலப்பதிகாரம் முதலிய சங்க நூல்கள் செப்புகின்றன. எண்பேராயத்தில் நாட்டில் வாழும் மக்களாகிய நகர மாந்தரும் அங்கம் பெற்றிருந்தார்கள் என்பது,

''கரணத் தியலவர் கரும காரரர்
கனகச் சுற்றம் கடை காப்பாளர்
நகர மாந்தர் நளிபடைத் தலைவர்
யானைவீரர் இவுளி மறவர்
இனையர் எண்பேராயமென்ப''

என்னும் திவாகரக் குறிப்பால் தெரிய வரு கிறது. அதுவே குடியரசின் முளையாக விளங்கி யதென்று நாம் கொள்ளலாம்.

அரசன் அறிவுள்ளவர்களையே அமைச்சர் களாகக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத் திய வள்ளுவப் பெருந்தகை,

''சூழ்வார் கண்ணாக ஒழுகலான், மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்''

என்றார். ஆராய்கின்றவர்களையே கண்ணாகக் கொண்டு உலகம் நடப்பதால் அரசன் அறிவுள்ளவர்களையே நன்கு ஆராய்ந்து தெளிந்து ஒற்றர்களாகக் கொள்ள வேண்டுமென்கிறார். கொண்டால், கொடிய வலிய பகைவர்களும் அவனுக்கு ஒன்றும் செய்ய முடியாது.

''கற்ற மாந்தரைக் கண்ணெனக் கோடலும்
சுற்றம் சூழ்ந்து பெருக்கலும்
அரசர்க்கு அழகு''

"Wise Kings generally have wise counsellors and he must be a wise man himself who is capable of distinguishing one." —*DIOGENES.*

''அறிவுள்ள அரசர்கள் பொதுவாக அறிவு மிக்கவர்களையே ஆலோசகர்களாகப் பெற்றிருப்பார்கள். அரசனும் அவ்விதம் தேர்ந்தெடுக்கும் திறமையுள்ள அறிவுள்ளவனாகவும் இருத்தல் வேண்டும்'' என்றார் டயோஜினஸ் என்ற பேரறிஞர்.

ஆராய்ந்து அறிவு சொல்லக்கூடியவர்களே அரசர்களுக்கு வழிகாட்டும் கண்கள் போல உதவ வேண்டியவர்கள். அப்படிப்பட்ட ஆலோசகர்களை அரசன் அவர்கள் பெரியவர்களா என்பதை ஆராய்ந்து தனக்குத் துணையாகக் கொள்ளத்தக்கவர்களைக் கொழித்து எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். அங்ஙனம் அறிவான்ற பெரியோர்களைத் துணையாகக் கொண்டால் எதிரிகளால் எந்த துன்பமும் வராது என்று அறுதியிட்டுக் கூறுகிறார் வள்ளுவர்.

''பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ! பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர் செய் நூலாமோ!!''

H. R. & C. E.

BOOKS AND FORMS

Stationery and Account Books for Business Concerns readily available with us at all times.

இந்து சமய அறநிலைய ஆலயங்களுக்கு

தேவையான

எல்லாவித (H. R. & C. E.) கணக்குப் புத்தகங்களும்

நமூனாக்களும்,

வியாபாரிகளுக்கு வேண்டிய சிட்டா, குறிப்பு, பேரேடு

ஸ்டேஷனரி வகைகளும் உயர்தரக் காகிதத்தில் தயார் செய்தவை

கிடைக்குமிடம் :-

G. G. **சீதாராம் ஏஜன்ஸீஸ்,**

நெ. 3-B/8, எல்டாம்ஸ் ரோடு, (Eldams Road - near Post Office)

தேனாம்பேட்டை, சென்னை-18.

வேலை நேரம் : **9 A. M. to 1 P. M. — 3 P. M. to 7 P. M.**

வெளியூரில் இருந்து ஆர்டர்கள் அனுப்புவோர், தயவு செய்து அருகில் உள்ள T. V. S. லாரி அல்லது இரயில்வே நிலையம் பெயர் குறித்து அனுப்பவும்.

பஞ்சாமிர்தம்

டி.என்.சுகிசுப்பிரமணியன்

(தெய்வத் திருப்பாடல்கள், திருக்கோயில்கள், தெய்வ வழிபாட்டு முறைகள், அறிவிற்கு விருந்தான கேள்வி—பதில்கள்—ஆத்திகத்தை வலியுறுத்தும் நாடோடிக் கதைகள்—சான்றோர் தம் கருத்துச் சுடர்கள்—சிந்தனைப் பொறிகள் போன்றவற்றைச் சுவையுடன் அமைத்துக் காட்டுகிறது இக்கட்டுரைத் தொடர்.

கட்டுரை ஆசிரியரின் சமுதாய—பொருளாதார சிந்தனைக் கட்டுரைகளைத் துய்த்த தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் பிரான்மலைப் பாரி விழாவில் பாராட்டி எழுத்து வேந்தர், என்னும் பட்டத்தையும் வழங்கியுள்ளார். தெய்வ பக்திமிக்க இவரது கட்டுரைகள் பக்தி நெறி செல்லும் அனைவரும் படித்துப் பயன்பெறுதல் வேண்டும் என்று விரும்புகிறோம். அடிப்படையில் இக்கட்டுரைத் தொடர் துவங்கப்படுகின்றது).

—ஆசிரியர்.

தோற்றுவாய் :

என் எண்ணங்களின் வித்துக்களை உரை நடையில் சொல்வது எனக்கும் எளிது. உங்களுக்கும் படிப்பதும் எளிது.

சமய சாரங்கள் அனைத்தும் கவிதை வடிவில் இருக்கின்றன. கடவுளைப் பற்றிய விதை கவிதை என்று பொருள் கொள்ளும் அளவிற்குக் கவிதைகள் தமிழில் களஞ்சியம் களஞ்சியமாக இருக்கின்றன.

இந்தத் தொடரில் நான் கூறப்போகிறவை யாவும் என் சுய சிந்தனைகள் அன்று. உலகத்தில் பல காலமாய், பல வடிவமாய் எத்தனையோ ஞானிகள் சொல்லிப் போயினர்.

நான், மேற்கோள்களாக எடுத்தாளப் போகிறேன்.

என் நினைவில், மிதக்கும் வெண்ணெயைத் திரட்டி உங்கள் முன் காணிக்கையாக வைக்கப் போகிறேன்.

சொல்லிய என் மீது நீங்கள் வெறுப்பும், விருப்பும் கொள்வதைவிட, சொல்லப்பட்ட விஷயங்கள் மீது பிரியங் கொள்ளுங்கள்.

நமக்குப் புதிதாக உதயமாகும் கருத்துக்களை, நமக்கு முன்னதாகப் பலரும் சொல்லியிருக்கிறார்கள். சொல்லும் சொல்லமைப்பு மாறியிருக்கலாம். தங்கத்தை அழித்து நகையோ, நகையை அழித்து வேறு நகையோ செய்வது போலச் சமய தத்துவங்கள் சொல்லப் பட்டு வந்துள்ளன.

மெருகும், வேலைப்பாடுகளும் புதியவை. உள்ளீட்டுப் பொருள் மிகப் பழமையானவித்து.

தத்துவம், ஞானம் தெரிவதற்காக ஞானிகள் பாடிய பாடல்கள் நமக்குத் தேவை. இத்தோடு வாழ்க்கையை ஊன்றிப் பார்க்கும் அறிவும் நமக்குத் தேவை.

பழைய கவிதைகளில் புதிய வாழ்க்கை நெறிகளைக் காணலாம். புதிய வாழ்க்கை நெறியில் பழைய கவிதைகளைக் காணலாம்.

நாம் வாழ்வதற்கும், நம்மை வாழ்விப்பதற்கும் தத்துவதரிசிகள், ஞானிகள், பக்தர்கள் இவர்கள் தம் பாடல்கள் தேவை.

பூமி, நனவு மயம்.
சொர்க்கம், கனவு மயம்.

கண்ணுக்குக் காணப் பூமியும், கற்பனையில் காணச் சொர்க்கமும் நமக்குத் தேவை.

இவற்றை வலியுறுத்தியவர்கள் இறையன்பு அறிந்த செம்மல்கள்.

வாழ்ந்தும், ஆழ்ந்தும் யோசித்த சமயப் பாடல்கள், சமயம் பற்றிய மேற்கோள்கள், சமயச் சிந்தனைகள் இவைதாம் வாழ்க்கை.

வாழ்க்கைக்கு வழிகாட்டும் ருசியான கனிவர்க்கங்களுடன் கற்கண்டு கலந்தாற் போலத் தர முயற்சி செய்கிறேன்.

பழனி யாண்டவன் பஞ்சாமிர்தம் போன்று அமையத் திருவருள் தருக.

நல்லெண்ணம் ஒவ்வொருவருக்கும் தேவை; இதைவிடத் தன்னம்பிக்கை கொண்டு தாம் எடுக்கும் நடவடிக்கையில் துணிவும் தெளிவும் வைத்திருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள்.

சிவனும் இறைவனும் :

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி

என்னும் அருள் மொழியைத் திருவாய் மலர்ந்தருளியவர் மாணிக்கவாசகனார்.

தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன் அல்லது எந்நாட்டவர்க்கும் இறைவன் தென்னாடுடைய சிவன் என்பது இத்திருவாசகத்தின் கருத்து.

எந்நாட்டுக்கும் இறைவன் ஒருவனே அவ்வொருவனுக்குப் பல நாட்டு மொழிகளில் பல பெயர்கள் வழங்குகின்றன.

தென்னாட்டவராகிய நாம் இறைவனைச் சிவம் என்னுஞ் செம்மொழியால் வழுத்துகிறோம். சிவம் என்னுஞ் சொல் வட மொழியிலும் வழங்கப்படுகிறது. தென்மொழியிலும் வழங்கப்படுகிறது. தென்மொழி வல்லார் சிவம் என்பதற்குச் செம்மையென்று பொருள் கூறுகிறார். தென்னாட்டார் பரம்பொருளைச் செந்நிறமாகக் கொண்டதற்குக் காரணமென்னை?

நமது நாட்டின் பாங்கர் நிரட்ச ரேகை பாய்ந்து செல்கிறது. நமது நாடு வெம்மை செறிந்த நாடு. நமது நாட்டின் இயற்கையோ வெம்மையை அடிப்படையாகக் கொண்டது. ஈண்டு இறைவனுக்குரிய இயற்கை வடிவம் வெம்மைக்குரிய நெருப்பு வடிவம்.

இறைவனது இயற்கை வடிவஞ் செக்கச் செவேலெனத் திகழ்தல் நோக்கி மாணிக்கவாசகனார் ''தென்னாடுடைய சிவனே போற்றி'' என்று வழுத்தி, அச்சிவனே மற்ற நாடுகளின் இயற்கைக்கேற்ப வெவ்வேறு பெயரான் அழைக்கப்படும் இறைவன் என்பதை அறிவுறுத்தப் பொதுவாக ''எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'' என்றருளிச் செய்தார்.

திரு.வி.க.—சைவத் திறவு.

சமுகத்திற்கு வேண்டிய கடமைகளைச் செய்வோம்—இந்த அறை கூவலை அரசியல் உலகம் தருவது. உங்கள் குடும்பத்திற்கு வேண்டிய கடமைகளை நீங்கள் செய்யுங்கள். இந்த அறை கூவலைச் சமுகம் செய்கிறது. உன் ஆத்மாவுக்குரிய காரியங்களை வாய்மையுடன் செய்க. இந்த வேண்டுகோளை மதவியல் விடுக்கிறது. அடிக்கல்லான நீ உறுதியாக உழைத்தால் சமுக நலங்கள் கோபுரம் போன்று நிமிர்ந்து நிற்க இயலும்.

பிரார்த்தனை முறை :

பாவிகளுக்காக, நல்லோர் பிரார்த்தனை செய்யலாம்.

பாவிகள், தமக்காகப் பிரார்த்தனை செய்தாக வேண்டும்.

பிரார்த்தனை செய்து கொண்டு, எல்லாம் ''கடவுள் விட்ட வழி'' என நினைத்து எழுகிறவன் எல்லாவிதச் சாதனைகளையும் செய்ய முடியும்.

ஏன்?

பிரார்த்தனை என்பது உள்ளத்தை வலுப்படுத்துவது. பிரார்த்தனை என்பது உடலை மெலியச் செய்வது!

அடியார்கள்—ஆழ்வாராதிகள் ஒவியங்களைப் பாருங்கள்.

பக்தர்கள்—நந்தனார்—அறுபத்து மூன்று நாயன்மார்—நால்வர்கள்—தியாகய்யர்—புரந்தரதாசர்—துளசிதாசர் படங்களைப் பாருங்கள்.

ஒட்டி உலர்ந்த சரீரம் பிரார்த்தனையில் வைரமாய் ஒளி வீசும். இந்த சரீரத்திற்குள் ஆத்மா எஃகு போல வலிமையாக இருக்கும்.

ஆச்சாரியர்கள், மதவாதிகள், குருமார்கள், சமயவாதிகள் மெலிந்து காணப்பட வேண்டும். அப்போதுதான் இவர்களுக்கு உள்ள வலிமை அதிகம். உடல் வலிமையைச் சுருக்கினால் உள்ளத்தின் திண்மை மிகுதிப்படும்.

பிரார்த்தனை செய்பவர்கள் அமைதியாகச் செய்ய வேண்டும். உரத்தும் சப்தமிட்டும் கத்தியும் காட்டுக் கூப்பாடு போட்டும் பிரார்த்தனை செய்பவர்கள் ஆத்ம தாகம் இருந்தும் அறிவில்லாதவர்கள். இந்நாளில் கோயில்களில் ஒலிபெருக்கி வைத்து ஊரைக் கூட்டுகிறார்கள். திருக்கோயில்களில் பக்தர்கள் கூட்டம் கூட்டமாகப் புகுந்து மதிற்சுவர் பிளந்துவிடுவது போலக் கூச்சல் போடுகிறார்கள். இது இம்சைப் பிரார்த்தனை.

தொழுகையும், ஆராதனையும், பிரார்த்தனையும் நிம்மதிக்காகப் பிறந்தவை. இவற்றுள்ளே அதிகக் கூச்சல் இல்லாமல் தன்னளவில்உரத்துப் பாடுகிறவர்களும் உண்டு. நாமாவளிகளை உச்சரிப்பவர்களும் உண்டு. இதுகூட மத்திமம்தான். இனிமையாகக் குரல் இல்லாதவர்கள் துதிப் பாடல்கள் பாடாமல் இருப்பது பகவானுக்குப் பெரிய தொண்டு.

பிரார்த்தனை என்பது தனக்குள் தானே சொல்லியும் அனுபவித்தும் ஐம்புலனை அணைத்தும் அனுபோக சித்தி கொள்வது.

இதுதான் மேலான பிரார்த்தனை; இது தான் இன்ப நிலை; தானே வந்து எய்தும் மார்க்கம். புனிதம், அமைதி விளைவிக்கும் பொருள். அங்கு அழுக்கும் அசுத்தமும் கிடையா.

அமைதியாகப் பிரார்த்தனை செய்யக் கற்றுக்கொண்டால்—

பிறருக்குக் காது கேட்க வேண்டும் என்ற எண்ணம் மங்கி மறந்து போனால்—

ஆண்டவன் நம் மனத்துள் இலிங்க வடிவம் பெறுவான்.

வாய்மையே தூய்மையாகும்.

மனத்துள் மணி இலிங்கமாகும்.

ஆண்டவனுக்கும் அன்பருக்கும் நேயம் உண்டானால்,

அதுவே நெய்யும் பாலும் ஆகும்; ஏன் அந்த நேயமே தண்ணீரும் ஆகும்.

அப்பர் சுவாமிகள் உள்ளக் கோயிலில் பிரார்த்தனை செய்து அமைதி பெற்றவர்.

காயமே கோயி லாகக்
கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக
மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா
நிறைய நீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனுர்க்குப்
போற்றவிக் காட்டினேமே

ஆலயந் தொழுவது சாலவும் நன்று.
அகத்தினில் தொழுவதுஅடியார்க்கு நன்று.

மனித ஆற்றலுக்கு வரம்பு உண்டு. தன் வல்லமையைக் கொண்டு தெய்வத்தை வஞ்சிக்க மனிதனுல் ஆகாது.

— மகாபாரதம்.

பாம்பும் பதிலும் :

பாண்டவர்கள் வனவாசம் செய்த காலத்தில், பீமன் வேட்டையாடப் போனுன்.

குகை ஒன்றிலே மலைப் பாம்பின் பிடியில் அகப்பட்டுக் கொண்டான். வல்லமை மிகுந்த பீமனுல் மீள முடியவில்லை.

வேட்டைக்குச் சென்ற தம்பி பீமனைக் காணுமல் தருமர் தேடிச் சென்ருர்.

பாம்பின் பிடிக்குள் இருப்பதைப் பார்த்தார்.

''பராக்கிரமமுள்ள பாம்பே! என் தம்பியை நீ பிடித்ததின் நோக்கம் என்ன?''

''நான் சந்திர வம்சத்தில் பிறந்த நகுஷன். அகத்திய முனிவர் சாபத்தால் மலைப்பாம்பாக மாறி இருப்பவன். நான் கேட்கும் கேள்விகளுக்கு நீ பதில் சொன்னுல் விட்டு விடுவேன் தருமா!''

''உன் கேள்வியைக் கேள்.''

''யார் அந்தணன்?''

''செந்தண்மை பூண்டு ஒழுகுபவர் — உண்மை, கொடை, பொறுமை, ஒழுக்கம், இரக்கம், தவம், தயை என்னும் பண்பு இருந்தால் அந்தணன் ஆவான். இதில் எது இல்லாது போனுலும் அவன் அந்தணன் ஆகான்.''

''மனிதன் அறிய வேண்டுவது எது?''

''இன்ப துன்பம் இரண்டின் எல்லையும் கடந்தபரம்பொருளை மனிதன்அறியவேண்டும்'' என்ருர் தருமர்.

பாம்பாகிய நகுஷனுக்குப் பதில் இனிமையாக இருந்தது.

''பாம்பு வடிவில் இருக்கும் நகுஷனே! நான் கேட்கும் கேள்விக்கு நீ பதில் சொல்.''

''சொல்லுகிறேன் தருமா!''

''வேதங்களைக் கற்றுக் கரைகண்டவன் இருக்கிருன். அவனைவிட உயர்ந்த நற்கதி யாருக்குக் கிடைக்கும்?''

''தருமபுத்திரனே கேள்! உண்மை பேசுகிறவன், அதனை இனிமையாகப் பேசுகிறவன், அகிம்சையில் பற்றுடையவன், சான்ருண்மையுள்ளவரை ஆதரிப்பவன் எவனே அவனுக்கு நற்கதி கிடைக்கும்'' என்று பதில் கூறியது பாம்பு.

''சத்தியம் சிறந்ததா? தானம் சிறந்ததா? எது எதைக் காட்டிலும் சிறப்புடையது?''

''தருமா! சில சமயங்கள் தானமே சிறப்பு உள்ளது. வேறு சில சமயங்கள் சத்தியம் சிறப்புள்ளது. இடம் அறிந்து, இதனைக் காப்பாற்ற வேண்டும்.''

பாம்பின் கூர்மையான அறிவை வியந்த தருமர் மேலும் கேட்டார்.

''அகிம்சை மேலானதா? இன்சொல் சிறந்ததா?''

''முன்னைப் போலவே இதனையும் கொள்க. சில சமயம் அகிம்சை உயர்வானது. சில சமயம் இன்சொல் உயர்வானது. இடமறிந்து செயல்பட வேண்டும்.''

பாம்பின் பதிலைக் கேட்டுத் தருமர் வியந்தார். தருமரைக் கண்ட காரணத்தால் பாம்பின் வடிவம் நீங்கி, நகுஷன் தன்னுருவம் பெற்றுப் போனுன்.

தருமனுடைய தரிசனத்தால் பாம்புக்குச் சாப விமோசனம். பாம்பின் பிடியிலிருந்து பலவான் பீமன் விடுதலை பெற்ருன்.

தம்பியை மீட்க, ஞானம் அறிவு தேவைப்பட்டது. உலகத்திலிருந்து விலகி வாழவும் இவ்விரண்டும் தேவை.

'' சாவு இல்லாவிட்டால் உலகம் எத்தனை சுவையாக இருக்கும்.''

'' உலகத்தின் முக்கிய சுவைகளில் சாவும் சேர்ந்தது என்பதை வாழத் தெரிந்தவர்கள் இளமையிலேயே அறிந்து வைத்திருப்பார்கள்.''

The following particulars regarding the ownership of "THIRUKKOIL" the monthly Newspaper are published as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956.

FORM IV

(*See* Rule 8)

1.	*Place of Publication*	Nungambakkam, Madras—600034.
2.	*Periodicity of Publication*	Monthly.
3.	*Printer's Name*	Thiru M.N. Shanmugam, L.P.T., Assistant Works Manager, Tamil Arasu Press, Government Estate, Madras—600002.
	Nationality	INDIAN
	Address	Tamil Arasu Press, Government Estate, Madras-2.
4.	*Publisher's Name*	Thiru K. S. Narasimhan, B.A.,B.L.,I.A.S., Commissioner, H.R. & C.E. (Admn.) Department, Madras—600034 (Ex-Officio)
	Nationality	INDIAN
	Address	H.R. & C.E. (Admn.) Department, Nungambakkam, Madras—60034.
5.	*Editor's Name*	Thiru N. R. Murugavell, M.A., M.O.L.,
	Nationality	INDIAN
	Address	H.R. & C.E. (Admn.) Department, Madras—600034.
6.	*Names & Addresses of Individuals who own the newspaper and partners or share-holders holding more than one percent of the total Capital*	Thiru K.S. Narasimhan, B.A.,B.L., I.A.S, Commissioner, H.R. & C.E. (Admn.) Department, Madras600034.

I, K. S. NARASIMHAN, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

MADRAS-34,
Dated : 1-3-1975.

(*Sd.*) **K. S. Narasimhan**,
Publisher.



இராமேசுவரம் அருள்திரு இராமநாத சுவாமி திருக்கோயிலின் குடமுழுக்கு விழாவின்போது சுவாமிக்கு அணிவிக்கும் அணிகலன்களை மதுரைத் துணை ஆணையர் திரு. ம. அ. முருகேசன் பார்வையிடுகிறார். உடன் இருப்போர் நிர்வாக அதிகாரி எஸ். பி. முனுசாமி, வைர நுண்ணறிஞர் திரு. என். இராதாகிருஷ்ணன் ஆகியோர்.

பாண்டிமாதேவி

முதற்பரிசு பெற்ற பொற்கிழிக் கவிதை

மீனாட்சிமைந்தன்

10. அரசியார் உரையாற்றிய காதை

ஆலவாய் ஆல யத்தில்
 ஆயிரக் கால்மன் றத்தில்
கோலமாய்ச் சைவர் கூடிக்
 கூட்டமாய் உள்ள போது
சீலமாய் வந்த மங்கை
 சீரடி எடுத்து வந்தாள்
ஞாலமே புகழு மாறு
 ஞாயிறுய்ப் பொலிந்து நின்றுள்.

வாழ்கவே வாழ்க என்ருர்
 வையகம் புரக்க வந்த
தாழ்குழல் அரசி என்ருர்
 தமிழ்வளர் செல்வி என்ருர்
ஆழ்கடல் முத்தும் தோற்க
 அருஞ்சிலம் பார்ப்ப ரிப்ப
ஏழ்கடல் உலகும் கேட்க
 எடுத்துரைக் கின்ருள் சைவம்

(வேறு)

''பண்டி ருந்த சைவமே
 பாடு பட்ட தெய்வமே
கண்டி ருந்த தத்துவம்
 கடல்பு குந்து போவதோ?
மண்டி ணிந்த தாரணி
 மாறு பட்ட போதிலும்
கொண்டி ருந்த கொள்கைகள்
 கூறு பட்டு மாய்வதோ?

இன்று வந்த சைவமோ?
 ஈசன் இல்லை தெய்வமோ?
வென்று வந்த தில்லையோ?
 வேத மொன்று மில்லையோ?
கன்று பாடும் வேளையில்
 கனிக ளாடும் சோலையில்
நின்று பாடும் பாவலர்
 நேற்று வந்த பேர்களோ?

வானம் முட்டும் கோபுரம்
 வையம் எட்டும் தத்துவம்
தானம் கொட்டும் சத்திரம்
 தரையில் நந்த வனங்களும்
ஈனம் என்று சொல்வதோ?
 ஈச னில்லை என்பதோ?
சானம் என்றி கழ்வதோ?
 சாத்தி ரங்கள் நோவதோ?

உருத்தி ராக்க மாலையை
 உடைத்தெ றிந்த பேர்களோ
சரித்தி ரத்தில் ஆள்வதோ?
 சழக்கர் இங்கு வாழ்வதோ?

தரித்தி ரத்தில் வாழினும்
தத்து வத்தில் வாழ்ந்ததாம்
பொறுத்தி ருந்து பார்ப்பதா?
புதைந்த சைவம் மீட்பதா?

(வேறு)

என்றெலாம் எழுந்து கேட்டாள்
எழில் மிகும் அரசி வார்த்தை
மன்றிலே ஒலித்த போது
மக்களோ ''சைவத் தாயே''!
இன்றுநாம் மீட்போம்'' என்றூர்
எழுச்சியால் மகிழ்ச்சி கொண்டார்
குன்றென வந்து நின்றூன்
கொள்கையில் வேறு பட்டான்

வேறு

பாராளும் நாயகியைக் கைது செய்யப்
படைத்தலைவன் பார்த்திபனே வந்து நின்றூன்
சீராளும் கவிதையிலே அதனைச் சொல்லச்
சிந்தையெலாம் நோவதனுல் சிறிதே சொல்வேன்;
நீராளும் விழிகளினுல் மக்கள் கூட்டம்
நிமிர்ந்தெழுந்த வேளையிலே அரசி யாரை
ஓராளும் காணுமல் ஒருங்கே போற்றி,
ஒற்றரெல்லாம் பல்லக்கில் கொண்டு சென்றூர்.

வேறு

அன்னையைப் பிரிந்த தாலே
அகிலமே அழுத தம்மா!
புன்னையும் அழுத தங்கே!
பூவையும் அழுத தங்கே!
தென்னையும் பாளை முத்துச்
சிதறியே அழுத தம்மா!
வெண்ணெயும் அழுத தம்மா!
வெண்ணிலா மறைந்த தம்மா!

ஒற்றர் பெருந்தலைவன் உடையணனே முன்சென்றூன்;
சற்றும் எதிர்பாராச் சமயத்தில் அம்பொன்று
மார்பில் பாய்ந்ததனுல் மரணத்தின் ஓலமிட்டுப்
பார்மேல் சாய்ந்தான்; படைவீரர் கலங்குகையில்
நூறு குதிரைகளில் நொடியிமைக்கும் நேரத்தில்
வீறு கொள்ளும்—சூலப் படைவீரர் தாக்கியதால்
பல்லக்கைப் போட்டுப் பார்த்திபனின் படைவீரர்
உள்ளுக்குள் அஞ்சி ஒளிந்திட்டார் எங்கெங்கோ
மெல்லத் திரைநீக்கி மேதினியின் பேரரசி
பல்லக்கி னின்றும் பார்மீது கால்வைத்தாள்
பத்தினியின் கால்கள் பட்டதனுல் பூதேவி
சத்தியத்தைக் காக்கச் சபதங்கள் பூண்டாளோ?
சோழன் மகளாகிச் சொக்கேசன் மாமதுரை
வாழ வழிகண்டு வையத்தாய் மகிழ்ந்தாளோ?
சாய்ந்த சைவத்தின் சரித்திரத்தை மாற்றியதால்
காய்ந்த நெடுவானம் கனமழையைக் கொட்டியதோ?
கொட்டும் மழைகண்டு கோணுமல் பேரரசி
முற்றும் துறந்த முனிவரெனத் தான் நடந்து
சென்றூள் தன்மனைக்குச் செயல் வீரர் துணை நின்றூர்
குன்றூக் கனகநந்தி கோபத்தால் கண் சிவந்து
தளபதியைத் திட்டித் தறுதலையாம் வீரர்களைப்
பொழுதனைத்தும் திட்டிப் புறப்பட்டான் மடத்துக்கு!
நல்ல சமயத்தை நழுவத்தான் விட்டவர்கள்
வல்ல பிறசமயம் வாய்ப்பாகக் கருதுகிறூர்.

சோர்ந்த நந்தியவன் சூழ்ச்சியினால் புறப்பட்டான்
தீர்ந்த உடையணனின் பிணத்தோடு சிலர் வந்தார்.

இடது கையொடிந்த தென்பதுபோல் நந்தியவன்
உடலில் தெம்பிழந்தே உட்கார்ந்தான் சில நேரம்!

எண்ணும் எண்ணத்தில் எண்ணா யிரம்—அலைகள்!
கண்ணில் பலகோடிக் காட்சிகளும் கற்பனையும்!!

தோய்ந்த பிணத்திற்குத் துவராடை போர்த்தியபின்
தேய்ந்த மனத்தோடு திட்டங்கள் தீட்டுகிறான்

நாடெங்கும் செய்தி நள்ளிரவில் பரப்பியபின்
காடெங்கும் வாழ்ந்த சமணரெலாம் வந்தார்கள்

காலைநேரத்தில் கனகநந்தி தலைமையிலே
சாலை காணாத சரித்திரத்தின் ஊர்வலமாம்

மறைந்த தலைவனுக்கு மரியாதை ஊர்வலத்தில்
உறைந்த வஞ்சகத்தை உணராதார் அழுதார்கள்.

அரசவையைக் கூட்டி அமர்ந்திருந்தான் பேரரசன்
தரிசு நிலம் போலத் தலைபணிந்து வீற்றிருந்தான்

பக்கத்தில் தேவி பாண்டியர்கள் பேரரசி
சொக்கனையே போற்றிச் சுதந்திரமாய்க் கொலுவிருந்தாள்

குலச்சிறையார் மற்றும் குருமார்கள பிரபுக்கள்
பலத்துடனே வாழும் படைத்தலைவன் பார்த்திபனும்

ஊர்வலத்தை நோக்கி உட்கார்ந் திருந்தார்கள்
ஊர்வலமோ வந்ததுவே ஊர்ந்து.

தொடரும்

அருள்திரு வேணுகோபாலசுவாமி திருக்கோயில்

மன்னார்குடி, தஞ்சை மாவட்டம்

பேரன்புடையீர்!

திருப்பணி வேண்டுகோள் :

''மண்ணில் மிக்கது மன்னார்குடியே'', ''மன்னார்குடி மதிலழகு'', ''கோயில் ஒரு பாதி குளம் ஒரு பாதி'' என்ற பழமொழிகள் மன்னார்குடியின் அருள் வளத்திற்கமைந்த முதுமொழிகளாம். மன்னார்குடிக்குத் தனிப் பெருஞ் சிறப்புத் தருவது ஹரித்திரா நதி என்ற தெப்பக் குளமாகும். இக்குளமும் அதன் நடுவே விளங்கும் அருள்திரு வேணுகோபால சுவாமி கோயிலும் வரலாற்றுச் சிறப்பையுடையன.

சோழ நாட்டைப் பிற்காலத்தில் மராத்திய மன்னர்கள் ஆண்டு வருங்கால் அவர்களுக்குக் குருவாக அருள்திரு சேதுபாவா சுவாமிகள் திகழ்ந்தார்கள். ஹரித்திரா நதி திருக்குளத்தைப் பாங்குற அமைத்துத் திருப்பணி செய்த பெருமை அருள்திரு சேது பாவா சுவாமிகளையே சாரும். இத்திருக்குளத்தின் நடுவில் விளங்கும் அருள்திரு வேணுகோபால சுவாமி திருக்கோயிலுக்கு ஆண்டுதோறும் ஆனி—பௌர்ணமி அன்று தெப்பத் திருவிழா தினத்திலும், திருக்குளத்தின் வடகரையில் விளங்கும் கோதண்டராம சுவாமி திருக்கோயில் பங்குனிப் பெருவிழாவில் முதல் விடையாற்றி தினத்திலும், அருள்மிகு ராஜ கோபாலசுவாமி எழுந்தருள்வது கண்கூடு. தற்போது ஹரித்திரா நதி திருக்குளமும் அதன் நடுவே விளங்கும் ஆலயமும் நமது கவனத்தை ஈர்க்கும் அளவிற்குத் திருப்பணி செய்ய வேண்டிய நிலையில் உள்ளன. நமது ஆன்மீகச் செல்வங்களான திருக்குளம், திருக்கோயில், திருமடம் போன்றவை நன்கு விளங்க நாளும் ஆவன செய்து உதவும் பெருமனங் கொண்ட அன்பர்களுக்கு ஒரு அரிய வாய்ப்பாக அமைந்துள்ள இத்திருப்பணிக்கு இயன்ற பெரிய உதவிகளைச் செய்து, அருள்மிகு வேணுகோபால சுவாமி திருக்கோயில் புதுமையாக்கப் பெற்று, குடமுழுக்கும் கண்டு நாம் பிறந்ததன் பயனெனப் புண்ணியச் செல்வம் மல்கப் பெற்றுப் புனிதமடைய, நல்லன்பர்கள் அனைவரையும் வேண்டுகிறோம். நன்கொடைகளை

—''நிர்வாக அதிகாரி, **அருள்திரு சேதுபாவா சுவாமிகள் அறக்கட்டளை அலுவலகம்**
ஹரித்திரா நதி வடக்கு, மன்னார்குடி, தஞ்சை மாவட்டம்''

என்ற முகவரிக்கு அனுப்பி வைத்து அச்சு இரசீது பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம்.

இங்ஙனம்,
திருப்பணிக் குழுவினர்

"தமிழும் சைவமும் தழைத்தினி தோங்குக"

திருநெல்லிவனநாதசுவாமி திருக்கோயில்

திருநெல்லிக்காவல்,

மன்னார்குடி வட்டம் :: தஞ்சாவூர் மாவட்டம்

நெல்லிவன மேவும் நித்தன் திருவடியைப்
புல்லும் மனதுடனே போற்றினால்—தொல்லை
வினைத்தொகுதி யாவும் விரைந்தோடும் கண்டீர்
எனைத்தும் துயரமின்றி ஈண்டு.

இது, காவிரியின் தென்கரையிலுள்ள பாடல் பெற்ற தலங்களில் ஒன்று. இங்குக் கோவில் கொண்டுள்ள நெல்லிவனநாதரைச் சம்பந்தர் பதினொரு பாக்களில் புகழ்ந்தேத்தியுள்ளார். அப்பரும், சுந்தரரும் இத்தலத்தை முறையே சேத்திரக் கோவையிலும், திருநாட்டுத் தொகையிலும் சிறப்பித்துள்ளார்கள்.

உடலை உறுதிப்படுத்துவது நெல்லி, உயிரை உறுதிப்படுத்துபவர் நெல்லிவன நாதர். அணித்தே உள்ள திருக்குளத்தில் நீராடி இறைவனையும், மங்களாம்பிகையையும் வழிபட்டால் எல்லா நலனும் பெறலாம்.

இவ்வூர் மாயூரம், காரைக்குடிப் புகைவண்டிச் சாலையில் திருவாரூரிலிருந்து 14 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. ஆண்டு தோறும் மாசி 18ஆம் தேதியிலிருந்து 25ஆம் தேதிவரை கதிரவன் இறைவனை வழிபடும் காட்சியைக்காணலாம்,

இத்திருக்கோயிலில் குடமுழுக்குச் செய்து முப்பதாண்டுகளுக்கு மேலாகிறது. இவ்வாண்டு திருப்பணி தொடங்கி வேலை நடைபெற்று வருகிறது. ஓராண்டில் குடமுழுக்காட்டத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதைக் கண்ணுறும் அன்பர்கள் திருப்பணிக்குப் பெரும் பொருள் வழங்கி இறைவன் திருவருளைப்பெற்றுய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

திரு. டி. எஸ். கல்யாண சுந்தரம்
அறங்காவலர் குழுத்தலைவர்

திரு. டி. எ. டி. கே. பாலு
திரு. எம். எஸ். இலட்சுமணன்
அறங்காவலர்கள்

புலவர் நா. திருநாவுக்கரசு, பி. ஏ.,
நிருவாக அதிகாரி

ஆணவ மலம்

சி. என். சிங்காரவேலு எம்.ஏ.

சைவ சித்தாந்த தத்துவம் பல தனிச் சிறப்புக்களை யுடையது; அதாவது மற்ற தத்துவங்களுக்கு இல்லாத சிறப்புக்கள் பல சைவ சித்தாந்த தத்துவத்துக்கு உண்டு. முப்பொருள் உண்மையைச் சாதித்தலே இத் தத்துவத்தின் வெள்ளிடைமலை போன்ற சிறப்பு. இத்தத்துவத்தின்படி உள்பொருள்கள் மூன்று. ஒன்று, இயல்பாகவே முற்றறிவுடையது. மற்றொன்று, அறிவித்தால் அறிவது. மூன்றாவது, அறிவித்தாலும் அறிய இயலாதது. இவை பதி, பசு, பாசம் என்பன. இவை அனாதி. இது சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கை. 'மாயை' என்ற குறியீட்டுச் சொல்லுக்கு மற்ற தத்துவங்கள் கூறும் பொருள் வேறு. சைவ சித்தாந்தம் கூறும் பொருள் வேறு. மூலப் பொருள்களை முப்பத்தாறாகப் பிரித்து மிகவும் நுண்மையாக விளக்குவது சைவ சித்தாந்தமே. இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள அத்துவிதத் தொடர்பை விளக்குவது சைவத்தின் மற்றொரு சிறப்பு. உயிர்களுக்கு அடிப்படையான அனாதி குற்றம் அதாவது ஆணவ மலம் ஒன்று உண்டு என்று நிறுவி அதன் இயல்புகளை, அறிவுக்குப் பொருந்தும் வகையில் விளக்குவது சைவ சித்தாந்தத்தின் மற்றொரு சிறப்பு.

உலகில் தீமை எதனால் நிகழ்கிறது என்பது பற்றி எல்லாச் சமயங்களும் ஆராய்ந்திருக்கின்றன. சில தீமைகளுக்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் அடிப்படைக் காரணம் என்ன என்பது பற்றித்தான் தத்துவ ஆராய்ச்சி நிகழும். பௌத்தம், சமணம் ஆகிய தத்துவங்கள் தீமைக்கு வித்து ஆசை என்கின்றன. மாயாவாதம் தீமைக்கு வித்து அறியாமை என்று சொல்கிறது. கிருத்துவம் சாத்தானைப் பற்றிப் பேசுகிறது. சைவ சித்தாந்தம் எல்லாத் தீமைகளுக்கும் முதல் காரணம் ஆணவ மலம் என்கிறது. ஆணவ மலத்தின் இயல்புகளை ஆராய்வதுதான் இக்கட்டுரையின் நோக்கம்.

ஆணவ மலத்தின் இயல்புகள் சில முரண்பட்டவைகளாகத் தோன்றும். எடுத்துக்காட்டாக அறியாமை ஆணவம் என்று சொல்கிறார்கள். ஆனால் அது வெறும் 'அபாவம்' அதாவது 'இன்மை' அன்று, அது ஒரு பொருள். பொருள் என்றதால் அது சாத்தான் போன்ற ஒரு சித்துப் பொருள் அல்ல. அது அசித்து. அது உயிருக்கு அனாதியே உடன் தோன்றியது என்பார்கள். ஆனால் அது உயிருக்குக் குணம் அன்று, அது குற்றம். அது அனாதி ஆகையால் முத்திக் காலத்திலும் அழியாதது என்பார்கள். ஆனால் முத்தியில் அது வலியிழந்து இருக்கும் என்பார்கள். இவ்வாறு அது பற்றிய செய்திகள் சில புதிர்கள் போன்று இருக்கும்.

''உண்மை விளக்கம்'' என்ற நூலில் அறியாமை ஆணவம் என்று மட்டும் கூறப் பெற்று இருக்கிறது. ஆனால் அத்தொடரை அறியாமையைச் செய்வது ஆணவம் என்று விரித்துக் கொள்ள வேண்டும். உதாரணமாகக் கதிரவன் ஒளி ஒரு பெற்றித்தாக வீசிக்கொண்டே யிருக்கிறது. ஆனால் சில காலங்களில் மேக மண்டலம் மறைப்பதால் இருள் உண்டாகிறது. இராக் காலத்தில் இருள் வருவதற்குக் காரணம் சூரிய ஒளியைப் பூமியின் மற்றொரு பாகம் மறைத்துக் கொள்வதாகும். ஆகையால் சூரிய ஒளியைத் தடுக்கும் பொருள் ஒன்று உண்டு. அதுபோல அறிவை மறைக்கும் பொருள் ஒன்று உண்டு. அது ஆணவம்.

சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம், திருவருட்பயன் முதலிய சித்தாந்த சாத்திர நூல்களில் ஆணவமல இலக்கணத்தை விரிவாகக் காணலாம். மேற்கூறிய மூன்று நூல்களில் கூறப் பெற்ற கருத்துக்களை மட்டும் கீழே தொகுத்துத் தந்துள்ளோம்.

(1) ஆணவ மலம் ஒன்றே; உயிர்கள்போல எண்ணிறந்தன அன்று. அது பிறவித்துயருக்கு அடிப்படைக் காரணம்.

(2) அது ஒன்றானாலும் எண்ணிறந்த சக்திகளையுடையது. ஆகையால் அது பலவாகிய உயிர்களில் ஊடுருவி நிற்கும். உயிர்கள் பக்குவம் அடையுங்காலத்து அவற்றை விட்டு நீங்கும். உயிர்கள் வெவ்வேறு காலங்களில் பக்குவம் அடைவதால் வெவ்வேறு காலங்களில் அவற்றை விட்டு நீங்கும்.

குறிப்பு :—மின்சாரம் ஒன்றுதான். ஆனால் அது பல இல்லங்களில் ஊடுருவிப் பலவகைகளில் தொழிற்படுகிறது. ஆணவ மலத்தின் மேற்சொன்ன இரண்டு இலக்கணங்களும் இது போல என்று கொள்ளலாம்.

(3) ஆணவ மலம் உயிருக்கு அனாதியே உள்ளது. அதனால் அதற்குச் சகச மலம் என்று பெயர். (சக—கூட—ஜம்—பிறப்பு).

(4) கேவல நிலையில், அதாவது உயிர் ஆணவத்தோடு மட்டும் இருக்கும்போது, ஆணவம் அதன் அறிவு, இச்சை தொழில்கள் முழுவதையும் விளங்காமல் மறைக்கும்.

(5) சகல நிலையில், அதாவது ஆன்மா, மாயை கன்மங்களோடு தொடர்பு கொண்ட நிலையில், ஆன்மா ஏகதேச விளக்கம் பெற்று அவ்வறிவைக் கொண்டு போகம் நுகரும்

பொழுது, அம்மலச் சக்தி அவ்வான்மாவின் அறிவை விபரீதமாக்கி இப்போகத்தை நுகர்பவன் நானே என எண்ணச் செய்யும், அதாவது போக நுகர்ச்சிக்கு வினைமுதலாந்தன்மையை (போத்திருத்துவத்தை) உண்டாக்கும்.

(6) கேவலம், சகலம் ஆகிய இரண்டு நிலைகளிலும் ஆணவம் செம்பினிற் பொருந்திய களிம்பு போல அவ்வான்மாக்களோடு விரவி நின்று அஞ்ஞானத்தை உண்டாக்கும். சகல நிலையில் அது ஆன்மாவிற்கு அஞ்ஞானத்தோடு விபரீத ஞானத்தையும் உண்டாக்கும்.

(7) ஆணவமும், மாயையும் பாசத்தின் பாற்பட்டாலும் ஒருவகையில் மறுதலைப் பொருள்கள். ஆணவம் உயிர்களோடு ஒன்றித்து நின்று அவற்றின் இச்சா ஞானக் கிரியைகளை மறைக்கும். ஆனால் மாயை உயிர்களுக்கு வேறாய் நின்று அவற்றின் இச்சா, ஞானக் கிரியைகளை விளக்கும். இரவில்பொழுதுவிடியும் வரையில் விளக்கு துணைபுரிவது போல ஆணவ இருள் அறவே தொலையும் வரையில் மாயை, தனு, கரண, புவன, போகங்களாகி வந்து உயிர்களுக்குச் சிறிது அறிவை உண்டாக்கும். ஆயினும் சிவஞானப் பேரொளியாகிய கதிரவன் தோன்றினாலன்றி இருள் அறவே அகலாது.

(8) ஆணவ மலம் உயிரோடு கூடப் பிறந்தது; ஆகையால் அதற்குச் சகல மலம் என்ற பெயருண்டு என்று முன்னரே சொன்னோம். மாயையும் கன்மமும் உயிருக்கு வந்து கூடியது. ஆகையால் அவ்விரண்டும் ஆகந்துக மலம் எனப்படும். (ஆகந்துகம்—வந்து கூடியது).

(9) இருப்பினும், இம்மும்மலங்களும் ஆன்மாவிற்கு அனாதியே உள்ளனவாம். ஆணவ பந்தம் உயிர்களை மேல் நோக்கி எழாது கீழ் நோக்கி அழுத்தலின், உயிர்கள் கீழான கன்மத்தையே நோக்கும். அதனால் அவற்றிற்குப் பொது வகையாய் நிற்கும் மூலகன்மம் (முதல் வினை) உளதாகும். கன்மம் மாயையையே பற்றிக் கிடத்தலின் கன்மத்தின் வழி உயிர்களை மாயை பற்றும். ஆகையால் ஆணவத்தை 'சகசம்' என்றும், ஏனைய இரண்டையும் 'ஆகந்துகம்' என்றும் கூறுதல், ஏதுவும், விளைவும் ஆகிய முறைமை பற்றி என்க.

(10) மும்மலங்கள் நெல்லின் முளை, தவிடு, உமி போலச் சேர்ந்துள்ளன. முளை கன்மத்துக்கும், தவிடு மாயைக்கும், உமி ஆணவத்துக்கும், அரிசி உயிருக்கும் உவமை.

(11) மாயையும் கன்மமும் காரியப்படுவதற்கு ஆணவ மலம் காரணமாயிருத்தலால், அது மூலமலம் எனப்படும்.

(12) ஆணவ மலம் உயிரின் குணமன்று, அதாவது அதன் 'இயல்பு' அன்று. இயல்பாயின் ஆணவம் நீங்கும்போது உயிரும் அழியும். அது உயிரின் குற்றம், கண் படலத்தால் மறைக்கப்படுவது போல்.

(13) ஆணவ மலம் சடப்பொருள்; அதன் குணம் அறியாமை. உயிர் சித்துப்பொருள், அதன் குணம் அறிவு.

(14) புற இருள் எப்பொருளையும் காட்டாது. ஆனால் தன்னைக் காட்டிக்கொள்ளும். அக இருளாகிய ஆணவம் ஒரு பொருளையும் காட்டாது, தன்னையும் காட்டிக் கொள்ளாது.

குறிப்பு :—வாழ்க்கை அனுபவத்தில் இதன் பொருளைப் பார்க்கின்றோம். கயவர்கள் தாங்கள் கயவர்கள் என்பதை உணருவதில்லை. அவ்வாறு உணர்ந்தால் அதுவே அவர்கள் ஈடேறுவதற்கு முதற்படி.

(15) ஆணவம் உள்ளொளியாகிய சிவத்தைப்போல் உயிருடன் அனாதியே கலந்து உயிர் முத்திநிலை அடையும் வரை நிற்கும். பதி, பசு, பாசங்கள் தம்முள் வியாபக, வியாப்பிய, வியாப்திகளாக இருக்கும். அதாவது அவை கடல் பரப்பு, அதில் அடங்கிய நீர், அதில் உள்ள உப்புப் போல் ஒன்றில் ஒன்று கலந்தும் அடங்கியும் நிற்கும்.

(16) ஆணவ மலம் அனாதியன்றி இடையில் வந்தது என்னில் அதற்குக் காரணமில்லை. அவ்வாறு காரணமின்றி இடையில் வந்தது என்றால், முத்தியிலும் அது வந்து உயிரைப் பிடிக்கலாம் அன்றோ?

(17) ஆணவம் அனாதி என்றதால் முத்தி நிலையில் அது எவ்வாறு அழியும்? என்ற கேள்விக்குப் பதில் வருமாறு. முத்தி நிலையில் ஆணவம் அழிவது என்பது, அதன் சக்தி வலி அழிந்து இருப்பது என்பது பொருள். மேலும் ஆணவம் முத்தான்மாக்களை விட்டு நீங்கினும் பெத்தான்மாக்களிடத்துத் தொடர்ந்து நிற்கும். ஆகையால் அது நித்தப்பொருள்.

மேற்கூறியவற்றைப் பிழிப்பாகப் பின்வருமாறு கூறலாம். ஆணவ மலம் என்பது நடைமுறையில் 'யான்', 'எனது' என்னும் செருக்கைத் தருவது. 'யான்', 'எனது' என்னும் செருக்கறுதலே வீடு பேறாகும். இதற்குத் திருவருளின் துணை இன்றியமையாததாகும்.

"யான் எனது என்னும் செறுக்கு அறுப்
பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்.''

—திருக்குறள்.

"ஒன்றதாய், அநேக சத்தி
உடையதாய், உடனாய், ஆதி
அன்றதாய், ஆன்மா வின்றன்
அறிவொடு தொழிலை ஆர்த்து
நின்று,போத் திருத்து வத்தை
நிகழ்த்திச்,செம் பினிற்களிம்பு ஏய்ந்து,
என்றும்அஞ் ஞானம் காட்டும்
ஆணவம் இயைந்து நின்றே.

—சிவஞான சித்தியார்.

— : o : —

இறைவனின் ஐந்தொழில்கள்

சீலத்திரு மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள்

திருச்சிராப் பள்ளியில், திகழ்மலைக் கோட்டையில்,
தாயுமான சுவாமியின் தூயதிருக் கோயிலில்,
அதனை ஒட்டி, அமைந்து விளங்கித்
தருமையா தீனத்தின் சார்பில் உள்ள,
மௌன சுவாமிகள் மடத்தின் ஆதரவில்,
சிறப்புற நடைபெறும் சீர்க்கவி யரங்கிற்குச்,
சால்புடன் நன்றே தலைமை வகிக்கும்திரு.
அ.வெ.ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களே!
மற்றும்இவ் வரங்கம் மாட்சிமை ஓங்க
ஒருங்குவந் துள்ள பெரும்புலமைக் கவிஞர்காள்!
நன்கு கவிச்சுவை நலம்பெற நுகர்ந்திட
வண்டுகள்போல் திரண்டிவண் வந்துள்ள அன்பர்காள்!
உங்கள் அனைவரையும் உந்துபெரு மகிழ்வால்
அன்புடன் வருகவருக என்றுவர வேற்கின்றேன்!

சிறந்தஇந் தக்கவி அரங்கம் தன்னில்,
எல்லாம் வல்ல இறைவன் இயற்றிடும்
ஆக்கல் காத்தல் அழித்தல் முதலிய
ஐந்தொழில்கள் பற்றியும், ஐம்பெருங் கவிஞர்கள்,
தனித்தனிக் கவிதைகள், இனித்திடும் நிலையில்
சொற்சுவை பொருட்சுவை கற்பனைச் சுவைகள்
பொற்புடன் அமைய, அற்புத மாகப்
பாடி விளக்கிடக் கூடி யுள்ளனர்!

நும்மை வரவேற்கும் செம்மைநல் வாய்ப்பு
எமக்குக் கிடைத்தது இனியநற் பேறே!

இறைவனே இல்லைஎன் றியம்பும் சிலமதம்; ஒருகால்
இருப்பினும், அந்த இறைவன் யாதொரு
செயலும் செய்வதில்லை எனச்செப்பும் சிலமதம்;
உலகம், தோற்றமும் ஒடுக்கமும் உடைத்தன்று,
''மூவா முதலா உலகம்''என மொழியும்
சிந்தாமணிச் செய்யுளே செப்பும்இஃது என்று
கூறுவர் சில்லோர்; வேறுபிறர் சிலரோ,
படைப்புத் தொழில்மட்டும்தான் பரமனுக்கு உண்டு,
உலகம் தானே நிலைபெறும் என்பர்;
தலையிற் குடம்தான் நிலைபெறும் தன்மை
தாதியின் முயற்சித் தகவேயாம், ஆதலின்
காத்தற் றொழிலும் கடவுட்குண் டென்பர்சிலர்;
அழித்தல் மறைத்தல்கள், அந்தோ கொடுமை;
இறைஅருள் உளன் எனில், இயற்றான் அவற்றை
என்றே சில்லோர் இயம்பித் திகைப்பர்;

ஆயினும்,
ஆராய்ச்சி மிக்க அறிஞர் பெருமக்கள்
ஆக்கல் காத்தல் அழித்தல் மூன்றும்,
எல்லாமும் வல்ல இறைவனுக் குண்டென்றே
செவ்விதின் ஆய்ந்து தெளிந்து கூறுவர்;
''உலகம் யாவையும் தாம்உள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட் டுடையார்அவர் தலைவர்''
என்றே கம்பர் இனிது பாடினர்
அன்றோ! அஃதிதனை அறிவிக்கும் என்பர்சிலர்;

''விளையாட்டு'' என்றஅவ் வியன்கருத் துணரார்,
''விளையாட்டு என்ற வியப்பிது என்னை?

விளையாடக் கடவுளும் விரும்புவன் கொல்லோ?
குழந்தையோ நீவிர் கூறிடும் கடவுள்?''
என்றெலாம் சிலபேர் இகழ்ந்து பேசுவர்!

அத்திறம் அனைத்தும்நம் அருஞ்சைவ சித்தாந்தம்
நுட்ப மாக விளக்கி நுவன்றிடும்!
இறைவன் முத்தொழில் இயற்றுவன் என்றே
பொதுவாய்ச் சமயம் பலவும் புகலும்!
ஆனல், நம் செந்தமிழ் அரும்பெறற் பயனும்
சாரங் கொண்ட சைவசித் தாந்தமோ,
இறைவன் ஐந்தொழில்கள் இயற்றுவன் என்றே
நுண்ணிதின் விரித்துத் திறம்பட நுவன்றிடும்!

''அழிப்பிளைப் பாற்றல் ஆக்கம்'' என்று தொடங்கும்
சித்தியார் செய்யுளும், சிவப்பிர காசத்தில்
''ஏற்ற இவை அரன் அருள்''எனத்தொடங்கும் செய்யுளும்,
இறைவன் இயற்றும் ஐந்தொழில் இயல்பினை
முறையே விளக்கி மொழிந்திடல் காணலாம்;

[''அழிப்பு இளைப் பாற்றல்; ஆக்கம்
அவ்வவர் கன்மம் எல்லாம்
கழித்திடல்; நுகரச் செய்தல்
காப்பது: கன்ம ஒப்பில்
தெழித்திடல் மலங்கள் எல்லாம்
மறைப்பு; அருட் செய்தி தானும்
பழிப்பொழி பந்தம் வீடு;
பார்த்திடின் அருளே எல்லாம்''
—சித்தியார்.

“ஏற்ற இவை அரனருளின் திருவிளையாட் டாக
இயம்புவர்கள்; அணுக்கள் இடர்க் கடல் நின்றும் எடுத்தே
ஊற்றமிக அருள்புரிதல் ஏது வாக
உரைசெய்வர்! ஒடுக்கம் இளைப் பொழித்தல்; மற்றைத்
தோற்றம் மல பாகம் வரக், காத்தல் போகம்
துய்ப்பித்தல்; திரோதாயி நிறுத்தல் ஆகும்;
போற்றல் அரும் அருள் அருளே யன்றி, மற்றுப்
புகன்றவையும் அருள் ஒழியப் புகலொ ணுதே''
——சிவப்பிரகாசம்.]

திருந்திய வாதவூர்ப் பெருந்தகை தானும்
திருவெம் பாவையின் இறுதிச் செய்யுளில்,

''போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈரும் இணையாடிகள்
போற்றி மால் நான்முகனும் காணுத புண்டரிகம்
போற்றியாம் உய்ய ஆட் கொண்டருளும் பொன் மலர்கள்''

என்று முறையே நன்றெடுத் தியம்பித்
திருத்தகும் இறைவனின் ஐந்தொழில் திறத்தினை
அழகுறப் பாடி விளக்கி யருளினுர்;

இம்மட் டேயோ!
மாசிலா மணிநற் றேசிகர் அருள்பெறும்எம்
தருமையா தீனத் தவப்பெருஞ் செல்வர்
தமிழ்நலஞ் சான்ற குமர குருபரர்
சிதம்பர மும்மணிக் கோவையின் இதம்பெறப்
''பூமலி கற்பகப் புத்தேள் வைப்பும்
நாமநீர் வரைப்பின் நானில வளாகமும்
ஏனைப் புவனமும் எண் நீங்கு உயிரும்
தானே வகுத்ததுன் தமருகக் கரமே;
தனித்தனி வகுத்த சராசரப் பகுதி
அனைத்தையும் காப்பதுன் அமைத்தபொற் கரமே;
தோற்றுபு நின்றஅத் தொல்லுலகு அடங்கலும்
மாற்றுவது ஆரழல் வைத்ததோர் கரமே;

ஈட்டிய வினைப்பயன் எவற்றையும் மறைத்துநின்று
ஊட்டுவ தாகும்நின் ஊன்றிய பதமே;
அடுத்தஇன் னுயிர்கட்கு அளவில்பே ரின்பம்
கொடுப்பது முதல்வ! நின் குஞ்சித பதமே;
இத்தொழில் ஐந்தும் நின் மெய்த்தொழில் ஆகும்''
என்று பெரிதும் நன்குறப் பாடினர்:,

''தோற்றம் துடியதனில், தோயும் திதியமைப்பில்,
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்; ஊற்றமாய்
ஊன்றும் மலர்ப்பதத்தே உற்றதிரோ தம், முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு'' என்றே
உண்மை விளக்கம் எனும் உயரிய சைவநூல்
நுண்ணிதின் விளக்கி நுவன்றுளது; இங்ஙனமே
கருமூலம் கழித்தருள் திருமூல தேவர்
அருளிச் செய்த அரும்பெறல் நூலாம்
திருமந்திர நூலும் செவ்விதின் உணர்த்தும்;

எத்தனையோ ஆய்வுகள் இதுபற்றி நுட்பமாய்ச்
சைவசித் தாந்தத் தத்துவ நூல்கள்
தொகுத்தும் வகுத்தும் விரித்தும் விளக்கிடும்;
அவையெலாம் உரைப்பின் மிகமிகப் பெருகும்;
தகவுடன் அவற்றைச் சால்புற விளக்கிப்
பாடுதற் கென்றே பாடல்சால் கவிஞர்கள்,
மற்றும் நமது மதி நலம் சான்ற
தலைவர் ஆகியோர், நலமுறப் போந்துளார்;
ஆதலின், தலைவர்—கவிஞர்—அவையினர்
ஆகிய உங்கள் அனைவரையும், அன்புடன்
வருக வருகவென வரவேற்று, மகிழ்வுடன்
கவியரங் கிதனைத் தொடங்கிவைக் கின்றேனே.

[திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயிலின் நூற்றுக் கால் மண்டபத்தில், தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த அருள்மிகு மௌனசுவாமிகள் திருமடத்தின் குருபூசை விழாவினை ஒட்டி ''இறைவனின் ஐந்தொழில்கள்'' என்னும் தலைப்பில், நடைபெற்ற கவியரங்கத்தில் வித்துவான் சிலத்திரு மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பாடிய தொடக்கவுரைக் கவிதை, இங்கு வெளியிடப்பெறுகின்றது.
—ஆசிரியர்]



15-12-74ஆம் நாள் சங்கரன் கோவில் வட்டம் சிவகிரி அருள்மிகு பால சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் திரு. சண்முகர் திருக்கல்யாண மண்டபத் திருப்பணித் துவக்க விழா, மாண்புமிகு அறநிலைய அமைச்சர் மு. கண்ணப்பன் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. உடன் இருப்பவர்கள் அறங்காவலர் திரு. ப. ம. ரெங்கசாமி, திரு. செல்லப்பாண்டியத் தேவர் ஆகியோர்.

மதிப்புரை

ஒரு நாள் ஆதி சங்கரர் கங்கையில் நீராடி விட்டுச் சீடர்கள் புடைசூழக் காசி விசுவநாதர் ஆலயத்துக்குச் சென்று கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு புலையனும் புலைச்சியும் நான்கு நாய்களுடன் சங்கரர் போகும் வழியில் குறுக்கே வந்து விட்டார்கள். ''போ, போ! விலகிப் போ! எட்டிப் போ'' எனச் சங்கரரின் சீடர்கள் கத்தினர்கள்.

புலையன் நகைத்தான்: ''எதை எட்டிப் போகச் சொல்லுகிறீர்கள்? இந்த உடலையா? உயிரையா?'' என்று ஆணித்தரமாகக் கேட்டான் புலையன்.

உடனே, சங்கரருக்கு ஞானதிருஷ்டியில், இறைவனே இவ்வாறு தம்மைச் சோதிக்க வந்துள்ளார் என்பது உதயமாயிற்று. அந்த நொடியிலே புலையனும்—புலைச்சியும் விசுவநாதர்—விசாலாட்சியாகக் காட்சி அளித்தனர். நான்கு நாய்களும் நான்கு வேதங்களாகத் தோன்றின.

ஆதி சங்கரரின் ஞான வாழ்க்கையில் இப்படி ஒரு காட்சி! ஆதி சங்கரர் தம்முடைய முப்பத்து இரண்டு ஆண்டு தெய்வீக வாழ்வில் பாரத நாடு முழுதும் பாதயாத்திரை புரிந்து ஞானப் பயிர் விளைவித்தார்.

ஆதி சங்கரரின் புனித வரலாற்றைச் சிறுவர் முதல் பெரியோர் வரை யாவரும் படித்துப் பரவச நிலை எய்த வேண்டும் என்ற நன்னோக்கத்தோடு பெரும் பொருட் செலவு செய்து, கண்ணையும் கருத்தையும் கவரும்படியாக வண்ண வண்ணச் சித்திரங்களோடு பிரமிக்கத் தக்க முறையில் சிறப்பாக வெளியிட்டிருக்கிறர். திரு. முல்லை தங்கராசன். அவருடைய இந்த அரிய உழைப்பைத் தமிழ் மக்கள் நிச்சயம் போற்றுவார்கள் என்று நம்புகிறோம்.

''இந்த அற்புதமான நூலை வாங்கிப் படிப்போருக்கு எல்லாவித நன்மைகளும் ஏற்படட்டும் என்று பரிபூரணமாக ஆசீர்வதிக்கிறோம்'' எனக் காஞ்சி காமகோடி பீடம் புதுப் பெரியவர்கள் ஸ்ரீஜயேந்திரசரசுவதி சுவாமிகள் அவர்கள் வாழ்த்தி அருளியுள்ளார்கள்.

இதன் விலை ரூ. 5/-.

— ஆசிரியர்

கிடைக்குமிடம்:—

ராசி பப்ளிகேஷன்ஸ்,
118/1, பைகிராப்ட்ஸ் ரோடு,
சென்னை—600005

நாளும் நாள் உயர்வதோர் நன்மை

டாக்டர் வி. ஆ. தேவசேனபதி M.A.Ph.D.

நாளும் நாள் உயர்கின்ற நன்மையை உடல், உள்ளம் பற்றிய நிலைகளில் மட்டும் பெறுவதற்கான முறையை உள இயல் மருத்துவரான எமிலிகூவே (Emile Cove, A.D.1857-1926) என்பவர் அறிவுறுத்திக் கையாண்டு வந்தார். உடல் உள்ளம் பற்றிய நோய்களைத் தீர்க்க இவர் கையாண்ட முறை நோயாளிகள் உள்ளத்தில் கருத்தை யேற்றுவதாகும் (Suggestion). மருத்துவர் இதனை ஏற்றுவதை விட நோயாளி தாமாகவே ஏற்றிக் கொள்வதற்கு மருத்துவர் உதவுவது தான், மருத்துவரின் பணியென்பது கூவேயின் கருத்து. நோயைத் தீர்த்துக் கொள்பவர் நோயாளிகளே; ஓரளவு இதற்குத் துணை செய்வதே மருத்துவரின் பணி என்று கூவே தம் முறையை விளக்கினார். நோய் தீர வேண்டும் என்பதற்கான இயற்றி நிலையைப் (Will) பயன்படுத்துவதை விடக் கற்பனை ஆற்றலைப் (Imagination) பயன்படுத்துவதே இம்முறையின் அடிப்படை. கருத்துக்களை உள்ளம் ஏற்பதற்கு எது மிகவும் ஏற்ற நேரமோ அந்த நேரத்தில் முழு நம்பிக்கையுடன், ''ஒவ்வொரு நாளும் எல்லா வகைகளிலும் நான் முன்னைவிட மேலும் மேலும் சிறப்படைந்து கொண்டு வருகிறேன்.'' (Every day and in every way, I am getting better) என்னும் வாய்பாட்டைச் சொல்லி வந்தால், உருவேற்று ஓதி வந்தால்—நோய்கள் தீர்ந்து நன்மை ஏற்படும். இவ்வாறு கூவே வகுத்த முறை ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் பலரால் வெற்றியுடன் கையாளப்பெற்றது.

கூவேயிஸம் எனப்பெறும் இம்முறையைப் பற்றிப் படிக்கும்போது ''நாளும் நாள் உயர்வதோர் நன்மையைப் பெறுவரே'' என்னும் உறுதி மொழி நினைவுக்கு வருகிறது. இவ்வுறுதி மொழி புகல்பவர் திருஞானசம்பந்தப் பெருமான்—பதிகம் கானையார் கோயில் என வழங்கும் திருக்கானப்பேர் பற்றியது.

''வாளினன் வேலினன் மால்வரை எடுத்ததிண்
தோளினன் நெடுமுடி தொலையவே யூன்றிய
தாளினன் கானப்பேர் தலையினல் வணங்குவார்
நாளும் நாள் உயர்வதோர் நன்மை யைப்
பெறுவரே''

இராவணன் தன் முனைப்பால் (ஆணவத்தால்) கயிலை மலையைப் பெயர்த்தெடுக்க முயன்றான். சிவபெருமான் அவன் ஆணவத்தை யடக்கி அவனுக்கு நல்லறிவு புகட்டினார். ஆணவம் மூல நோய் எனப்பெறும். ''தீரா நோய்'' என்பது அப்பர் இந்நோய்க்குத் தரும் பெயர். உடலையும் உள்ளத்தையும் சார்ந்த பிற நோய்கள் போன்று இந்நோய் இறைவனால் மட்டுமே தீர்க்கப் பெறுவது. தீரா இந்நோயைத் தீர்த்தருள வல்லானான இறைவனுடைய திருவருளைப் பெற உயிர்கள் முயல வேண்டும். இம்முயற்சிக்கு உதவுவது இயற்றி நிலையின் ஆற்றலை விடக் கற்பனையின் ஆற்றலே. இங்கே, கற்பனை என்பது இல்லாத ஒன்றைக் கற்பிப்பதன்று. எங்கும், என்றும் உள்ள ஒன்றின் வரம்பற்ற எழில் மிகு பண்புகளை நினைத்து அவற்றில் திளைப்பதே கற்பனை. ஆற்றலோடு அருளும் உடைய இறைவனுடைய திருவிளையாடல்களை நினைவு கூர வேண்டும். மேற்சொன்ன பாடலில் பேசப் பெறுவது இராவணன் பற்றிய நிகழ்ச்சி. அவன் வீரம் எத்தகையது! வாளைக்கொண்டும் வேலைக் கொண்டும் போர் புரியும் இராவணன், படைக் கலங்களாகிய இவற்றின் துணையின்றித் தன் தோள் வலிமையாலேயே பெரிய மலையை இறைவன் வீற்றிருக்கும் கயிலை மலையை எடுக்க முற்படுகின்றான். 'வாரணம் பொருதமார்பும் வரையினை யெடுத்த தோளும்' உடைய இராவணன் நிலை என்னாயிற்று? 'பாரமாகிய மலையெடுத்தான் சிரத்தின் மீது சீரமாகிய திருவிரல் ஊன்றினான் இறைவன். அறக் கருணையுடன் மறக் கருணையும் இறைவனிடத்துக் காணப் பெறுவதாகும். மறக்கருணையில் ஒறுத்தலோடு சீர்திருத்தமும் உடன் நிகழ்கிறது. திருவிரல் ஊன்றுவதில் மறமும் (வன்மையும்), சீராகிய சீரைத் தருகின்ற—திருவிரலாதலால் திருவிரலில் சீர்திருத்தமும் (மென்மையும்) காணப் பெறுகின்றன. இராவணன் தன் பிழையை உணர்ந்து பிழைக்கும் வழியை அறிந்து ஆர்வத்தோடு இறைவனைப் பாடி வணங்குகிறான்—ஆர்வமாக அழைத்தவனேத்தலும், வாரமாயினன் வான் மியூரீசனே—இவ்வாறு தம் பிழையுணர்ந்து இறைவன் தாள்களைத் தம் தலையால் வணங்குபவர்—தாடலை தத்துவத்தைக் கடைப்பிடிப்பவர், ஆணவப் படுகுழியினின்று எழுவது மட்டுமின்றி மீட்கப்படுவது மட்டுமின்றி—வீழ்ச்சியினின்றும் உயர்வது மட்டுமின்றி — மீண்டும் வீழ்ச்சியின்றி உயர்ந்துகொண்டே இருப்பர். தொடு வானத்தைப் போல் நாம் அணுக, அணுக நம்மைத் தன்னிடம் அழைத்துக் கொண்டே செல்லும் 'உயர்வற உயர் நலமுடைய' இறைவன் நமக்கும் 'நாளும் நாள் உயர்வதோர் நன்மையைத்' தருவான். இது திருஞானசம்பந்தர் தரும் உறுதிமொழி. அதுவே நம்மை உய்விக்கும் உண்மை மொழி!

158601
JL
Q2m 211, N58
N75-12.6

WITH THE BEST COMPLIMENTS FROM

SRI BHAGAVATHI TEXTILES LIMITED

CHITTUR

Authorised Share Capital	Rs. 1,00,00,000
Issued & Suscribed Capital	Rs. 30,00,000
Paid-Up Capital	Rs. 28,75,800

ALLOTTED SPINDLES **12,360**

ESTABLISHED IN KERALA

BEST QUALITY YARN

SPINNING 20s, 2/20s, 60s 2/60s, 80s & 2/80s

(INDIAN AND FOREIGN COTTON)

IN HANKS AND CONES

திருக்கோயில் மார்ச் 1975 ரூ. 1 பதிவு எண். எம். 7039

31 MAR 1975
MADRAS

காதி கிராப்ட்

அளிக்கிறது சுவையும், வெண்மையும்.

ஆடைகள் பளிச்சிட கோபுரம் மார்க் சோப்.

ஆரோக்யம் தரும் சுத்தமான தேன், கதர்த்துணி, பட்டுப்புடவைகள், ரெடிமேட் ஆடைகள், சுத்தமான எண்ணெய், கலையழகு கொஞ்சும் கைவண்ணப் பொருள்கள், பொம்மைகள், பனை வெல்லப் பொருள் மற்றும் தரமேன்மையான பற்பல பொருட்களையும் வாங்கலாம்.

தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களில் 200க்கும் மேலான காதி கிராப்ட்கள் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்கின்றன.

தொலைபேசி	சென்னை	திருச்சி	கோவை
	29684	3814	35051
	81954		

கதர் கிராமத் தொழில் வாரியம் தமிழ்நாடு

வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.